


# மாதரார் தொழுதேத்தும் மாண்புடையாள்

புலவர் கா. கோவிந்தன் எம்.ஏ.

# மாதரார் தொழுதேத்தும் மாண்புடையாள்

புலவர் கா. கோவிந்தன், எம். ஏ.
தமிழ்நாடு சட்டப்பேரவையின் முன்னாள் தலைவர்

தமிழ்த்தாய் பதிப்பகம்
8, மத்துவர் தெரு
சிட்லபாக்கம், சென்னை—600 064.

## நூல் விவரக் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | மாதரார் தொழுதேத்தும் மாண்புடையாள் |
| ஆசிரியரின் பெயர் | : | புலவர். கா. கோவிந்தன், எம். ஏ |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | இலக்கியம் |
| பதிப்பு | : | முதற் பதிப்பு : 2000 |
| நூலின் உரிமை | : | பதிப்பகத்தாருக்கு |
| நூலின் அளவு | : | கிரவுன் 1 × 8 |
| பயன்படுத்திய தாள் | : | 10.5 கிலோ வெள்ளைத்தாள் |
| பக்கங்கள் | : | 152 |
| அச்சுப்புள்ளிகள் | : | 12 புள்ளிகள் |
| ஒளி அச்சு | : | எல். கே. எம். கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ், சென்னை–17. |
| அச்சகத்தார் | : | பாரி ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை – 600 013. |
| நூல் கட்டு | : | சாதா அட்டை |
| விலை | : | ரூ. 40–00 |
| பதிப்பாளர் | : | தமிழ்த்தாய் பதிப்பகம் சென்னை - 64 |

**MATHARAR THOLUTHETHUM MANPUDAYAL :**
**PULAVAR K. GOVINDAN, M. A. : PRICE Rs. 40-00**

**PUBLISHER : TAMIZHTHAI PATHIPPAGAM, CHENNAI - 64**

# பதிப்புரை

சிலப்பதிகாரத் தலைவியாம் கண்ணகி மாதர் குலத்திற்கு ஒரு மணி விளக்கு; கற்புக்கடம் பூண்டு கடமையாற்றிக் கடவுள் நிலைபெற்ற பெருஞ் சிறப்புடையாள்: இவளுடைய பண்புநலன்கள் பெண்பாலர்க்கு என்றும் எடுத்துக்காட்டாக இலங்குவன. இந் நல்லாளின் பெருமையை அவளுடன் பழகியவர் எல்லாம் நன்கு உணர்ந்து பாராட்டினர். அவள் விண்ணுலகம் சேர்ந்த பின் மன்னரும் போற்றும் மாபெருந் தெய்வமாயினாள்.

யார் யார், எந்தெந்த நிலையில், எவ்வெவ் வ்கையாக இவளைப் போற்றினர் என்பதனை அழகுற வடித்துத் தருகிறது இவ்வுரைநடைக் கோவை. எனவே, இது மகளிர்க்கும் மற்றையோருக்கும் நம் நாட்டு மாதரார் மாண்புகளை நன்கு உணர உதவும். வள்ளுவர் வகுத்த வாழ்க்கைக் கடமைகளோடு இணைத்து விளக்கும் வகையால் இது வள்ளுவத்திற்கு எடுத்துக்காட்டாகவும் இலங்குகிறது.

இத்தகைய திறனாய்வு நூலை அழகிய தமிழில் வடித்துத்தந்த ஆசிரியப் பெருந்தகை தமிழ்நாடு சட்டமன்றத்தின் முன்னாள் சபாநாயகர் புலவர் கா. கோவிந்தன் அவர்களின் கட்டுரை வன்மை படித்து

மகிழத்தக்கது. நல்ல பல நூல்களை ஆக்கிய இந்நல்லாசிரியரின் புலமையை நாடு நன்கனம் அறியும். இந்நூலை எங்கள் வழி வெளியிடும் வாய்ப்பை அளித்தமைக்கு நாங்கள் புலவர் அவர்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்.

**ந. பழநியப்பன்**

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தோற்றுவாய் . . . . . . . . . . . . . . . . . . . . | 7 |
| 2. | மாதவி போற்றிய மாபெரும் பத்தினி . . . . . . | 18 |
| 3. | மாதரி போற்றிய மங்கல மடந்தை . . . . . . . . | 32 |
| 4. | தேவந்தி வழிபட்ட தெய்வக் கற்பினாள் . . . . | 40 |
| 5. | கவுந்தி பாராட்டும் கற்புடைத் தெய்வம் . . . . | 50 |
| 6. | உயர்ந்தோர் ஏத்தும் உரைசால் பத்தினி . . . . | 70 |
| 7. | வேந்தர் வழிபட்ட விழுமியாள். . . . . . . . . . | 101 |
| 8. | இயற்கையையும் ஏவல் கொண்டாள் . . . . . . | 112 |
| 9. | பாராட்டிய சமயங்கள் . . . . . . . . . . . . . . | 123 |
| 10. | பாராட்டற்குரிய பண்புகள் . . . . . . . . . . . . | 128 |

# மாதரார் தொழுதேத்தும் மாண்புடையாள்

## 1

## தோற்றுவாய்

ஒரு துறையில் பணிபுரியும் ஒருவர், தன் துறையோடு முற்றிலும் வேறுபட்ட பிறிதொரு துறையில் பணிபுரிவாரைப் பாராட்டுவது இயல்பு. ஆனால், ஒரே துறையில் பணிபுரியும் இருவர், ஒருவரையொருவர் பாராட்டக் காணல் இயலாது. அவர்கள் ஒருவர்மீது ஒருவர் காழ்ப்புணர்வு கொள்ளாது ஒத்த உள்ளம் உடையராதலே அரிது; ஆதலின், ஒருவரையொருவர் புகழ்ந்து பாராட்டுவது அரிதினும் அரிதாகும்.

இஃது, ஆடவர் பெண்டிர் இருபாலார்க்குமே ஏற்கும். ஓர் ஆடவனைப் பல பெண்டிர் பாராட்டுவதும், ஒரு பெண்ணைப் பல ஆடவர் பாராட்டுவதும் உலகெங்கும் காணும் பொது நிகழ்ச்சிகளாம். ஆனால், ஓர் ஆடவனை, மற்றோர் ஆடவனே பாராட்டுவதும்,

ஒரு பெண்ணைப் பிறிதொரு பெண்ணே பாராட்டுவதும் காண இயலாக் காட்சிகளாம்.

ஒரு துறையார் பிறிதொரு துறையாரைப் பாராட்டுவதும், ஆண் இனம் பெண் இனத்தைப் பாராட்டுவதும், பெண் இனம் ஆண் இனத்தைப் பாராட்டுவதுமாகிய ஆங்கே, இருதிறத்தவரும் வேறுவேறு துறையினர்; வேறுவேறு நிலையினர்; இருவர்தம் விழைவும் வேறுவேறு; வெறுப்பும் வேறுவேறு; ஆகவே, ஒருவரால் ஒருவர் கேடுற்றுப் போவதில்லை. அதனால், அவரிடையே போட்டியோ, பொறாமையோ எழுதற்கு வாய்ப்பில்லை; ஆகவே, ஒருவரையொருவர் பாராட்டிக் கொள்ளும் அப்பாராட்டு பெரிய பாராட்டு ஆகாது. மாறாக, ஒரு துறையார் அதே துறையாரைப் பாராட்டவேண்டும்; ஆண் ஆணைப் பாராட்ட வேண்டும்; பெண் பெண்ணைப் பாராட்டவேண்டும். ஈண்டுப் பாராட்டு வோரும் பாராட்டப்படுவோருமாகிய இருவரும் ஒரே துறையினர்; ஒரே நிலையினர்; இருவர்தம் வேட்கையும் ஒன்றாகும்; வெறுப்பும் ஒன்றாகும். வேட்ட பொருள் ஒன்றேயாகி, ஒருவர்க்குக் கிடைக்க, ஒருவர் அது கிடைக்கப்பெறாது ஏங்க நேரிடுவதாலும், வெறுத்த ஒன்று ஒருவரைச் சென்று அடையாது, பிறிதொரு வரைச் சென்று அடைய, அவர் துன்புற நேரிடுவ தாலும், ஒத்தநிலையினர், ஒரே துறையினராகவும், ஒருவரின் ஒருவர் உயர்ந்தும் தாழ்ந்தும் போக, அதன் பயனாய் ஒருவரை யொருவர் வெறுப்பதும்

பகைப்பதுமாகிய அந்நிலைக்கு இயல்பாகவே துரத்தப் படுவோராகிய அவர்கள், ஒருவரையொருவர் புகழ்வாராயின், அப்புகழே பெறற்கரும் பெரும் புகழாகும்.

இராமன் அழகையும், சீதை அழகையும் எத்தனையோ வகையாக எடுத்து விளக்கியும் நிறைவு காணாத கம்பர், இறுதியில், "ஆடவர் பெண்மையை அவாவும் தோளினாய்" என இராமனையும், "பெண்டிரும் ஆண்மை வெவ்விப் பேதுறும் முலையினாளை" எனச் சீதையையும் பாராட்டிய பின்னரே அவர்களின் அழகை உள்ளவாறு உணர்த்தியதாக எண்ணினார். அம் மனநிறைவு அவர்க்கு இருந்தமையினாலேயே, சீதையின் அழகு நலம் கண்டு, அவள்பால் கறையற்ற காய்ப்புடைய ளாகிய சூர்ப்பணகை வாயிலும், "பெண் பிறந்தேனுக்கு என்றால், என்படும்!" என்ற பாராட்டே வெளிவரப் பாடிக் காட்டினார்.

உருவும் திருவும், அறிவும் ஆண்மையும், அணியும் ஆடையும் போல்வனவற்றுள், யாதேனும் ஒன்றால் ஒரு சிறிது, தன்னினும் உயர்ந்தவர்பால் காழ்ப்புணர்வு கொள்ளுதல், மக்கள் அனைவர்க்குமே ஒப்ப முடிந்த உள்ள இயல்பாகு மென்றால், ஆண் இனத்தை நோக்க, உறுதி தளர்ந்த உள்ளம் படைத்த பெண் இனத்தின் பால், அம் மன இயல்பு சிறிது மிகுதியாகவே காணப்படும். தீதும் நன்றும் பிறர்தர வாராது. அவரவர்தம் முன்னை வினைவழியே வருமாதலின்,

பெரியோரை வியத்தலும் சிறியோரை இகழ்தலும் அறிவுடைமையோ ஆக்கத் துணையோ ஆகாது என்பதைக் கல்வி கேள்வி காட்சி வகைகளான் உணரும் வாய்ப்புடைமையால் அவ்வாடவரால், அவ்வேறுபட்ட நிலையினைத் தாங்கிக் கொள்வது இயலும். அதனால், அழுக்காறு அற்ற அவர் உள்ளத்தால், பிறர் உயர்வு கண்டு பாராட்டவும் கூடும். ஆகவே, ஓர் ஆண், பிறிதோர் ஆணைப் புகழ்வதைக் காணவும் கூடும். ஆனால், மகளிர் உள்ளத்திற்கு அஃது உணரும் வாய்ப்புக் குறைவு. ஆதலின், அவர்களால் அவ்வுயர்வு தாழ்வுகளைத் தாங்கிக் கொள்வது எளிதன்று; ஆதலின், ஒரு பெண், பிறிதொரு பெண்ணைப் புகழ்வது, காண அரிய காட்சியாகும். அப்படியே ஒரு பெண், பிறிதொரு பெண்ணைப் புகழக் காணினும், அப்புகழ்ச்சி அவள் உதட்டளவில்தான் நிற்குமேயொழிய, அவள் உள்ளத்திலிருந்து வெளிப்பட்டதாகாது. மனையற மாண்புகளால் மிகுந்த ஓர் இல்லறத் தலைவி, தன் கணவனோடு உறவுகொண்டு வாழும் பரத்தையை ஓரோவழிப் புகழ்வது உண்டாயினும், அந்நிலையிலும் அவள்பால் உண்டான வெறுப்புணர்ச்சி, அவள் உள்ளத்தை விட்டு அகன்று விடாது; "கற்பு வழிப்பட்டவள் பரத்தை ஏத்தினும், உள்ளத்து ஊடல் உண்டென மொழிப" (தொல், பொருள் - 39) என்ற ஆசிரியர் தொல்காப்பியனார் கண்டுபிடிப்பு, மகளிர்தம் மன இயல்பை உள்ளவாறு உணர்த்துவது காண்க.

மகளிர்தம் மன இயல்பு அத்தகையது. ஆகவே, ஒரு பெண், மற்றொரு பெண்ணைப் புகழ்கிறாள்

என்றால், புகழ்பெறும் பெண்ணின்பால், புகழும் பெண் உள்ளத்தின் காழ்ப்புணர்வுகளையும் கெடுத்து, அவ் உள்ளத்தைத் தன்பால் ஈர்க்கவல்ல சிறந்த பல பண்புகள்அமைந்திருத்தல் வேண்டும். பெண்ணுலகில், ஒரு பெண்ணின் பாராட்டைப் பெறுவதற்கே ஒரு பெண் அத்துணைச் சிறந்தவளாகவேண்டின், அவளைப் பெண்ணுலகின் பெரும்பகுதி புகழவேண்டு மாயின், அவள்பால் பொருந்தியிருக்க வேண்டிய சிறப்புகளின் பெருமையைப் பண்புகளின் பெருக்கை அளவிட்டுக் கூற இயலுமோ? அவ்வாறு புகழும் பெண்களும் ஏனைய பெண்கள் போன்றவராகாது; ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையால் உலகோர் போற்றும் உயர்வுடையராயின், அவர்களால் பாராட்டுப் பெறும் அப்பெண், ஒரு மாமணியாய் உலகிற்கு ஓங்கிய தெய்வத்திரு மாமணியாய்த் திகழத் தக்கவளேயாதல் வேண்டும்.

கண்ணகியின் கதை கூறவந்த ஆசிரியர் இளங்கோவடிகளால் அவ்ளையும், அவள் கணவனையும் அறிமுகம் செய்துவைக்கும் முதல் நிலையிலேயே, அத்தகைய உயர்வை – ஏன் – அதனினும் சிறந்த உயர்வைக் கண்ணகிக்கு ஏற்றிப் போற்றியுள்ளார். கண்ணகி கோவலன் என்ற இருவரையும் பற்றிய காப்பியம் இயற்ற வந்த ஆசிரியர், அவ்விருவருள் ஆடவன் என்ற உயர்வுடைமையை உன்னி, அவனையே முதற்கண் அறிமுகம் ஆக்குதல் வேண்டும். ஆனால், அடிகளார், அவ்வாறு செய்யாது,

"அவளுந்தான் — கண்ணகி என்பாள் மன்னோ" (சிலம்பு. 1: 25–29) எனக் கண்ணகியை முன்னும், "அவனுந்தான் - கோவலன் என்பான் மன்னோ" (சிலம்பு. 1: 35–39) எனக் கோவலனைப் பின்னுமாகவே அறிமுகம் செய்து வைத்துள்ளார்.

இவ்வாறு அறிமுகம் செய்துவைக்கும் நிலையிலேயே, கண்ணகி கோவலர்க்கிடையே, அவ்வேற்றத் தாழ்வு இடம்பெறச் செய்து, கண்ணகிக்கு ஒரு பெருமை சூட்டிய ஆசிரியர் அடிகளார், அவ்விருவர்தம் பண்பு பாராட்டும் நிலையில், கண்ணகியைப் புகழ் ஏணியின் உச்சிக்கே கொண்டு சென்று நிறுத்திவிட்டார். கோவலனைக் கூறுங்கால், "உலகனைத்தையும் ஒரு குடைக்கீழ் வைத்தாளும் சோழர்குலப் பேரரசர்களால் முதற்கண் வைத்துப் பாராட்டப்பெறும் முதுபெரும் குடிகளில் வரம்பின்றிப் பெருகிய வளம் படைத்தவனும், அறம் பிறழா வாணிகத்தின் விளைவால் வரும் விழுநிதிகளை வறியோர்க்கும் வருவோர்க்கும் வழங்கி வாழ்வளிக்கும் வளமார் உளம் படைத்தவனுமாகிய மாசாத்துவான் மகன்; பதினாறு ஆண்டிற்கு உட்பட்ட பிராயம் உடையான்; பரந்தகன்ற இப்பாருலகமும் சிறிது எனக் கருதுமளவு பரந்து பெருகிய புகழ் உடையவன். அவன் மீது தாம் கொண்ட காதலால், மதிநிகர் முகம் படைத்த மங்கையர், யாழைப் பழித்த மொழியினராம் தம் ஆயத்தாரிடையே, உருவற்ற தன் நிலையைக் கைவிட்டு, உலகோர் கண்டு பாராட்டும் உருவுகொண்டு

உலாவரும் காமன்காண் எனப் பாராட்டும் பெருமைக்கு உரியவன். அத்தகையவன் யாவன் எனில், அவன்தான் கோவலன் எனப்படுவான்" என்று கூறியுள்ளார்.

"பெருநிலம் முழுதாளும் பெருமகன் தலைவைத்த
ஒருதனிக் குடிகளோடு உயர்ந்தோங்கு செல்வத்தான்;
வருநிதி பிறர்க்கு ஆர்த்தும் மாசாத்துவான் என்பான்
இருநிதிக் கிழவன் மகன்; ஈரெட்டாண்டு அகவையான்.
அவனுந்தான்,
மண்தேய்த்த புகழினான்; மதிமுக மடவார்தம்
பண்தேய்த்த மொழியினார் ஆயத்துப் பாராட்டிக்
கண்டு ஏத்தும் செவ்வேள் என்று இசைபோக்கிக்,
(காதலால்
கொண்டு ஏத்தும் கிழமையான் கோவலன் என்பான்
(மன்னோ!"

கோவலனை அவ்வாறு பாராட்டிய புலவர், கண்ணகியைப் பாராட்டுங்கால் வாழ்வார்க்கு இன்பம் வழங்கி, வளமார் புகழ்பெறு நிலையில் நாகர் உலகோடும் தேவர் உலகோடும் ஒருபுடைத்தாய் உயர்ந்த புகார் நகரத்தில் பெருவாழ்வு வாழ்ந்திருந்த வனும், கார்மேகம் போலும் கொடைவளம் வாய்ந்த வனுமாகிய மாநாய்கன் என்பானின் குலக்கொம்பு; பொன்னால் ஆன பூங்கொடி போலும் பொற்புடை யாள்; பன்னீராண்டிற்கு உட்பட்ட பிராயத்தவள்; மதிக்கத்தக்க மாண்புடைய மாதர் பலரும், "மலர் உறையும் திருமகளாரின் புகழ் மிக்க வடிவழகு இவள் வடிவழகாகும்" என்றும், "குற்றமிலாக் கற்புடைய

வளாம் அருந்ததியின் கற்புத்திறம். இவள் கற்புத்திறமாம்" என்றும் பாராட்டித் தொழுதற்காம் பெருங்குணங்களையே காதலிப்பவள்; அத்தகையாள் யாவள் எனில், அவள்தான் கண்ணகி எனும் அழிவறியாப் பெரும் பெயர் உடையவள்" என்று கூறியுள்ளார்.

"நாகநீள் நகரொடு நாகநா டதனொடு
போகம்நீள் புகழ்மன்னும் புகார் நகர் அதுதன்னில்
மாகவான் நிகர் வண்கை, மாநாய்கன் குலக்கொம்பர்;
ஈகைவான் கொடியன்னாள்; ஈராறாண்டு அகவையாள்.
அவளுந்தான்,
போதிலார் திருவினாள் புகழுடைவடி வென்றும்,
தீதிலா வடமீனின் திறம் இவள் திறம் என்றும்
மாதரார் தொழுது ஏத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள்; பெயர் மன்னும் கண்ணகி என்பாள் மன்னோ!"

இவ்வறிமுக உரைகளில், கோவலன் கண்ணகி ஆகிய இருவர்க்கும், ஒத்த பெருமை வாய்ந்த குடிப்புகழே கூறி, அவரிடையே குடிப்பிறப்பால் ஆம் குற்றம் எதுவும் காணாத ஆசிரியர் இளங்கோவடிகளார், அவர்தம் ஏனைய புகழ்களைக் கூறத் தொடங்கி, கோவலனைப்பற்றிக் கூறுங்கால், "மடவார் சிலர், அவன் மீது கொண்ட காதலால், தம் ஆயத்தாரிடையே, 'கோவலன் உருவுகொண்டு உலாவரும் காமக் கடவுளாவன்' எனப் பாராட்டும் பெருமையுடையவன் கோவலன்" என, அவனை, அவன் ஒத்த ஆண் இனத்தவர் எவரும் பாராட்டினாரல்லர்; அவனைப் பாராட்டியவர்

அனைவரும், ஆண் இனத்தின் வேறுபட்ட பெண் இனத்தவராவர்; அதிலும், நல்லதன் நலனும் தீயதன் தீமையும் உணரமாட்டா மடந்தைப் பருவம் வாய்ந்த மடவராவர்; பாராட்டிய அவர்கள்தாம் மடவார் என்றால், அப்பாராட்டையாவது, ஆடவர் முன்னிலையில் மேற்கொண்டனரா என்றால், அதுவும் இல்லை; தம்போலும் மடவமகளிர் குழாத்திடையேதான் பாராட்டினர்; அப்பாராட்டும், அம்மடவார், அவன் மீது கொண்டிருக்கும் அளவிறந்த காதலின் விளைவாதலின், அத்துணைப் பெருமையும் அவன்பால் குறைவறக் குடிகொண்டிருக்கும் எனக் கூறுவதற்கில்லை; அக்காதலும், அவன் பெற்றிருந்த காமனை நிகர்க்கும் உடல் அழகு ஒன்றின் விளைவேயல்லது வேறு அன்று," என்ற இவைபோலும் சிறுமைகளே புலப்படப் பாடிவிட்டு, கண்ணகியின் பண்புகளைப் பாராட்டுங்கால், "திருமகளின் ஒப்புயர்வற்ற உருவநலம் இவள் உருவ நலமாம்; தீதிலா வடமீன் எனப் புகழ்ந்து பாராட்டும் அருந்ததியின் திறம் இவள் திறமாம்" என மாதர்குலப் பெருந்தகையார் பலரும் பாராட்டித் தொழத்தக்க பண்புடையாள்; கண்ணகி எனும் அழியாப் பெயருடையாள் எனக், "கண்ணகி, உடல் நலம், உயிர் நலம் ஆகிய இருநலங்களையும் ஒருங்கே பெற்றவள்; அவ்வளை அவள்போலும் பெண்களே பாராட்டினர்; பாராட்டிய பெண்கள், பாராட்டற்காம் பருவமோ பெருநிலையோ வாய்க்கப்பெறாப் பேதைப் பருவத்தவரல்லர்; மகளிரிற்

சிறந்த மாதரார் எனப் பாராட்டத்தக்கவராவர்; அம்மாதர்ப் பெருந்தகையாரும், அவளை வறிதே பாராட்டுவதோடு அமைதி கண்டார் அல்லர்; அவள் குணநலப் பெருமைகண்டு, அவளைக் கைகூப்பித் தொழுவதும் செய்தனர்" என்ற இவைபோலும் பெருமைகளே புலப்படப் பாடியுள்ளார்.

பாராட்டும் நிலையில், அடிகளார் மேற்கொண்ட இவ்வேறுபாட்டின் விரைவால், கோவலன்போல் அல்லாமல், கண்ணகி, தன்போலும் மகளிராலேயே பாராட்டப் பெற்றவள்; கோவலனைப் பாராட்டியவர் மடவார் என்றால், கண்ணகியைப் பாராட்டியவர் மாதரார் ஆவர்; அம்மடவார் கோவலனைப் பாராட்டுவது ஒன்றே செய்தனர் என்றால், அம்மாதரார் கண்ணகியைப் பாராட்டுவதோடு நில்லாது, வணங்கிப் பணிவதும் செய்தனர். கோவலன் உருவநலம் ஒன்றே உடையனாகக், கண்ணகி உருவநலம், உயிர் நலம் இரண்டும் ஒருங்கே உடையவள். கோவலன், காமனாகக் காட்சி அளித்தால், கண்ணகி கற்புத் தெய்வமாகக் காட்சி அளித்தாள். கோவலன் புகழ், மண்ணில் தேய்வுறத் தக்கதாக, கண்ணகி புகழோ நிலைபேறுடையதாகும் என்ற இவ்வேறுபாட்டுநிலை, விளக்கமுறத் தோன்றக் கோவலன் புகழ் மடுவுள் தாழ்ந்து மறைந்து போகக் கண்ணகி புகழ், மலை உச்சிக்கு இவர்ந்து மங்கா ஒளி காட்டுவதாயிற்று.

இவ்வாறு நில்வுலகின் நீள்முடியில் வைத்துப் பாராட்டும் பெருமையுடையளாகக் கண்ணகியைப்

பாராட்டிய அம்மாதரார் யாவர்? அவர்தம் பண்பும் பெருமையும் யாவை? அவர்கள் பாராட்ட அக்கண்ணகிபால் அமைந்து கிடக்கும் மாண்புகள் யாவை? என்பனவற்றை இனிக் காண்போமாக.

## 2

# மாதவி போற்றிய மாபெரும் பத்தினி

"பத்தினிப் பெண்டிர் அல்லேம்; பலர்தம்
கைத்தூண் வாழ்க்கை கடவியம் அன்றே?
பாண்மகன் பட்டுழிப் படூஉம் பான்மையில்
யாழினம் போலும் இயல்பினம்; அன்றியும்,
நறுந்தாது உண்டு நயனில் காலை
வறும்பூத் துறக்கும் வண்டு போல்குவம்;
வினையொழி காலைத் திருவின் செல்வி
அனையே மாகி ஆடவர் துறப்பேம்."

"ஆடவர் காண நல்லரங்கு ஏறி
ஆடலும் பாடலும் அழகும் காட்டிச்
சுருப்புநாண் கருப்புவில் அருப்புக்கணை தூவச்
செருக்கயல் நெடுங்கண் சுருக்குவலைப் படுத்துக்
கண்டோர் நெஞ்சம் கொண்டு அகம்புக்குப்
பண்தேர் மொழியில் பயன்பல வாங்கி
வண்டின் துறக்கும் கொண்டி மகளிர்."

– மணி. 18 : 15–22; 103–109.

இவ்வாறு, தன்னைப் பெற்ற தாயே பறைசாற்றிப் பழித்துரைக்கும் பண்பு வாய்ந்த பரத்தையர் குலத்தில் பிறந்தவள் மாதவி.

மணந்து, மனையறம் மேற்கொண்டு வாழும் இளைஞர்கள், தம் ஆடல் பாடல் அழகு முதலாயின கண்டு, தம்பால் வேட்கையுடையராகித் தம்மை வந்தடைந்து தம் பரத்தையர் சேரியிலேயே தங்கிவிட்டமை அறிந்து, அவர்தம் மனைவிமார்கள் பொறாது புலம்புகின்றனர் என்ற செய்தி தம் செவியகம் புகுந்ததும், அக்குலமகளிரைப் "பிள்ளை பெற்றுவிட்ட பாட்டியர்; இவர்களுக்குக் கணவர் தரும் இன்பத்தில் இன்னமும் காதலோ!" என அவர்தம் முதுமையைச் சுட்டிக்காட்டி எள்ளி நகையாடுவதும், "எங்கள் சேரியில் நாங்கள் ஆடும் ஆடல் பாடல் காண ஒருநாள் வந்தான் அவன்; அதற்காக அவன் மனைவி, பாடித்திரியும் பொருநரின் ஓயாது ஓலமிடும் பறைபோல், என்னை வாய் ஓயாது வைகின்றாள் எனக் கேட்டேன்; அந்த அளவிற்கு வந்த பிறகும் நான் வாளா இருப்பனோ? அவனை என் கை வலைக்குள் அகப்படுத்திக் கொள்ளத் துணிந்துவிட்டேன்; அதற்கான வழிவகைகளைக் காண்பதிலேயே நிற்கும் என் சிந்தையும் செயலும்."

"மண்கனை முழவொடு மகிழ்மிகத் தூங்கத்
தண்துறை ஊரன் எம் சேரி வந்தென...
அவைபுகு பொருநர் பறையின், ஆனாது
கழறுப என்ப, அவன் பெண்டிர்;...
கொண்டு கைவிலித்தல் சூழ்ந்திசின் யானே." - அகம். 76

"அவனால், நாம் எவ்வளவு பெரிய பழிக்கு உள்ளாக நேரினும் நேரட்டும்; அதன் பயனாம்

நாண்கேடு நமக்கு ஒரு பொருட்டு அன்று; அவன் நம் சேரிக்கு வரட்டும்; அவனை, அவன் மனைவி காண, அவள் கண் முன்பாகவே, அவன் மார்பில் மணக்கும் மாலையையும், தோள் மேல் துவளும் மேலாடையையும் பற்றியும், அவன் தோளை என் கூந்தலால் கட்டியும் இழுத்து வந்து, எனக்கே உரியவனாகச் சிறை செய்துகொள்கின்றேன். அது செய்யத் தவறி விடுவேனாயின், அதற்காக என்றே, என் தாய் எனக்கு ஊட்டி வளர்த்திருக்கும் என் பேரழகு பாழுற்றுப் போவதாக!"

*"ஊரனொடு ஆவதுஆக; இனி நாண் உண்டோ?*
*வருகதில் அம்ம, எம் சேரி சேர!*
*அரிவேய் உண்கண் அவன் பெண்டிர் காணத்*
*தாரும் தானையும் பற்றி...*
*தோள்கந் தாகக் கூந்தலின் பிணித்து அவன்*
*மார்பு கடிகொள்ளே னாயின்...*
*வருந்துக தில்ல யாய் ஓம்பிய நலனே!"*

– அகம். 276.

"நகரில் நடைபெறும் புனலாட்டு விழா, நகரத்தார் அனைவர்க்கும் பொதுவாகும். இவளும் இவள் கணவனும் அவ்விழாவுக்குச் செல்கின்றனர் என்பதற்காக, நான் அங்குச் செல்லக்கூடாது என்று கூற இவள் யார்? கூந்தலில், ஆம்பல் முழுமலரை அப்படியே வைத்து முடித்தல்போலும் கோலம்கொண்டு புனலாடும் புதுத் துறைக்குப் போக நான் துணிந்துவிட்டேன். ஆங்கு, இவள் கணவன், இவளைக் கைவிட்டு, என் அழகில் மயங்கி என்னைத் தேடி

வந்துவிடுவன் என்ற அச்சம் இவளுக்கு இருந்தால், அதற்கு நான் என்ன செய்ய முடியும்? இவளுக்கு ஆற்றல் இருந்தால் அவ்வாறு நிகழாதபடி அவனைக் காத்துக்கொள்ளட்டும். அது தன் ஒருத்தியால் ஆகாது என்றால், தனக்குத் துணையாகத் தன் தோழிமார் களையும் கூட்டிக்கொண்டு சென்று காத்துக் கொள்ளட்டும்!"

"கூந்தல் ஆம்பல் முழுநெறி அடைச்சிப்
பெரும்புனல் வந்த இருந்துறை விரும்பி,
யாம் அஃது அயர்கம் சேறும்; தான் அஃது
அஞ்சுவது உடைய ளாயின்...
கிளையொடும் காக்க தன் கொழுநன் மார்பே."

– குறுந். 80

என்பன போல்வன கூறித் தம் இளமைச் செவ்வியால் செருக்குற்றுத் திரிவதும், ஊரார் உரைக்கும் பழிச்சொற்களுக்கு அஞ்சிப் பரத்தைமை ஒழுக்கத்தைக் கைவிட்டுத் தம் மனை அடைந்து, தம் மனைவியர்பால், தம் பிழை பொறுக்குமாறு வேண்டிக்கொள்ளும் இளைஞர்களை, அதுவரையும் தமக்கே உரியவராகக் கருதியிருந்த அவ்விளைஞர்கள், தம்மைக் கைவிட்டுப் போய்விட்டனரே என்ற காழ்ப்பால், "தோழி! நம் மனையில் நம்மை வயமாக்கவேண்டும் என்பதற்காக, 'நான் யார் தெரியுமா? என் ஆற்றலும் பெருமையும் எத்துணைச் சிறந்தன தெரியுமா?' எனத் தன் பெருமையை வாய் வலிக்கக் கூறிய அந்த இளைஞன் தன் மனையுள் அடியிட்டதும் கண்ணாடியின்

முன்நிற்பவர் காலைத் தூக்கின் தானும் காலைத் தூக்கி, அவர் கைகளை ஆட்டின் தானும் கைகளை ஆட்டி, அவர் செய்தனவே செய்து காட்டும் கண்ணாடிப் பாவைபோல், தன் மனைவி ஆட்டியபடி யெல்லாம் ஆடி அஞ்சி அடங்குகிறான் என்ப; அந்தோ! அவன் நிலைகண்டு இரங்குகிறது என் நெஞ்சம்!" என்பன போல்வன கூறி எள்ளி நகையாடுவதும் அப்பரத்தையர் குலத்துவந்த பாவையர்தம் பண்புகளாகும்.

"ஊரன், எம்இல் பெருமொழி கூறித் தம்இல்
கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல
மேவன செய்யும் தன் புதல்வன் தாய்க்கே." — குறுந். 8

இத்தகைய பழிமிகு குடியில் பிறந்தவளேயா யினும், அம் மாசு அற்ற மணியாகி மாண்பு உற்றவள் மாதவி. சேற்றில் பிறந்தும் சிறப்புறும் செந்தாமரை போலவும், கள்ளி அகத்தே நல்ல மணம் தந்து மாண்புறும் அகில் போலவும், கடல்சிப்பியில் பிறந்தும் பருவிலையுடையதாகிப் பெருமையுறும் முத்துகள் போலவும், புழிமிகு பரத்தையர் குலத்தில் பிறந்தும், புலவர் போற்றும் பெருங்குலப் பெண்டாகிப் பெருமை யடைந்தவள் மாதவி. பரத்தையர் குலத்தில் பிறந்தும், அக்குல வொழுக்கத்தைக் கைவிட்ட தன்னைப் போலாது, அதுவே விரும்பும் அக்குலப் பெண்டிரை, "வான்துயர் உறுக்கும் கணிகையர்" என்றும், அவர் தொழிலை, "திருந்தாச் செய்கைத் தீத்தொழில்" என்றும் பழித்துரைப்பதோடு நில்லாது, அப்பரத்தையரோடு

முற்றிலும் மாறுபட்ட குலமகளிரையும், அவர்தம் கற்பொழுக்கத்தையும்,

> "காதலர் இறப்பின் கனைஎரி பொத்தி
> ஊதுலைக் குருகின் உயிர்த்து அகத்து அடங்காது
> இன்உயிர் ஈவர்; ஈயா ராயின்,
> நன்னீர்ப் பொய்கையின் நளிஎரி புகுவர்;
> நளிஎரி புகாஅரராயின், அன்பரொடு
> உடனுறை வாழ்க்கைக்கு நோற்று உடம்பு அடுவர்
> பத்தினிப் பெண்டிர்."
> — மணி. 2: 42–48.

எனப் பாராட்டும் பண்புமிகு பாவையாய் வாழ்ந்து மாண்புற்றவள் மாதவி.

இவ்வாறு, பரத்தையர் ஒழுக்கத்தைப் பழிப்பதும், பத்தினிமார் ஒழுக்கத்தைப் பாராட்டுவதுமாகிய சொல்லளவே நின்றுவிடாது, கணிகையர் வாழ்க்கையைக் கைவிட்டுக் கற்புடையார் வாழ்க்கையைக் கைக்கொண்டும் கவின்பெற்ற காரிகை மாதவி.

கோவலனோடு கூடியிருந்த காலத்தில், அவள் கருத்தெல்லாம், கலவியாலும் புலவியாலும், ஊடலாலும் கூடலாலும் அவனுக்கு இன்பம் அளித்தல் வேண்டும் என்பதில் சென்றனவேயல்லது, அவற்றால் தான் இன்பம் பெறும் நினைவே அவளுக்கு எழவில்லை. "கலவியும் புலவியும் காதலற்கு அளித்து" (சிலம்பு. 4 : 32) "கூடலும் ஊடலும் கோவலற்கு அளித்து" (சிலம்பு. 6: 109) என, அவள் அளித்தவளே யல்லாது, அடைந்தவள் அல்லள் என்றே இளங்கோ வடிகளாரும் கூறுவது காண்க.

மாதவி, பரத்தையர்தம் பண்பாட்டு நெறியிலேயே நின்றிருப்பளாயின், தான் பெற்ற மகளுக்குத் தான் பிறந்த பரத்தையர்குல முறையை ஒட்டி, அக்குடி மாமுதுகணிகையர் காட்டும் வழிநின்று பெயர் சூட்டியிருப்பார். ஆனால், அவள் அது செய்யாது, கோவலன் விரும்பியாங்கு, அவன் பிறந்த வணிகர் குலத்தை வாழ்விக்கும் அக்குலத் தெய்வமாம் மணிமேகலா தெய்வத்தின் பெயரையே சூட்டியது, அவள், கண்ணகிபோல் தானும் கோவலனுக்கு மனைவியாம் உரிமை உடையவளே என்ற உயர்ந்த உள்ளுணர்வு கொண்டிருந்தமையால் அல்லவோ?

மாதவியும் ஒரு கணிகையேயாக, அவள் குறிக்கோள் எல்லாம் கோவலன் தரும் பொருள் மேலதேயாயின், அவள், தன் மகள் பெயர்சூட்டு விழாவை முன்னிட்டு, வந்தார்க்கெல்லாம் பொற்காசு களைப் பெருமழைத்தாரையென வாரி வாரி வழங்கியதற்கு இசைந்திராள். அதற்கு மாறாக, அவ்வாறு வாரி வழங்கிய அவன் வள்ளன்மைக்குத் தானும் துணைநின்று வாரி வழங்கியது, பொருளே விரும்பும் பொருட்பெண்டு அல்லள் மாதவி; வருவார்க்கு வழங்கி வான்புகழ் ஈட்டும் குலமகள் கொழுந்தே அவள் என்பதற்குச் சான்று பகர்ந்து நிற்பதாகும். “மங்கல மடந்தை மாதவி தன்னொடு, செம்பொன்மாரி செய்கையிற் பொழிய” (சிலம்பு. 15: 40–41) என, ‘மாதவியொடு கூடிநின்றே கொடைவளம் மேற்கொண்டான் கோவலன்’ என்றே அடிகளாரும் கூறியுள்ளார்.

மேலும், மாதவி வேட்கையெல்லாம் கோவலன் தரும் மாறா அன்பின் மேலதாகாது, அவன் தரும் மாநிதியின் மேலதாயின், தன் அன்பில் குறைகாணு வதற்காம் சிறுவாய்ப்பும் அவனுக்கு அளிக்காதவாறு பழகுதல் வேண்டும் என்பதில் அவள் பெரிதும் விழிப்பாயிருந்திருப்பள். தான் வெறுப்படையத்தக்க சொல்லும் செயலும் அவன்பால் தோன்ற, அது காரணமாகத் தன் உள்ளத்தில் அவன்மீது வெறுப் புணர்ச்சி தலைதூக்கியபோதும், அதை அவனறியா வாறு மறைத்துக்கொண்டு, அவனுக்கு மலர்ந்தமுகமே காட்டிப் பொய்ந்நாடகம் ஆடியிருப்பள். ஆனால், அத்தகு அறைபோகு எண்ணம் அவள்பால் இல்லாமை யாலும், தனக்கு வேண்டுவது அவன் பொன் அன்று; அவன் அன்பு அறாமையொன்றே என்ற எண்ணமே யுடைமையாலும், கடற்கரையில், அவன் பாடிய கானல்வரிப் பாட்டுக் கேட்டதன் விளைவாய்த் தோன்றிய, அவன் அன்பு அயலாள் ஒருத்திமீது சென்றுளதுபோலும் என்ற ஐயப்பாட்டுணர்வையும், அவளால் தாங்கிக்கொள்வது இயலாதாயிற்று. அம்மட்டோ! அவன், தன் காதலன்; ஆகவே, தனக்கே உரிய அவன், அதுபோலும் கருத்துடையனாதலைக் கண்டித்துத் திருத்தும் உரிமை தனக்கும் உண்டு என உளமார நம்பினாள். அதனாலன்றோ, “மனைவிமார் மாண்புடையராதல் கணவன்மார் கெடுவழி செல்லாமையால் அன்றோ?” என்ற அறவுரையை,

*"மருங்குவண்டு சிறந்தார்ப்ப*
*மணிப்பூவாடை அதுபோர்த்துக்*
*கருங்கயற்கண் விழித்தொல்கி*
*நடந்தாய் வாழி! காவேரி!*
*கருங்கயற்கண் விழித்தொல்கி*
*நடந்தவெல்லாம் நின்கணவன்*
*திருந்துசெங்கோல் வளையாமை*
*அறிந்தேன் வாழி! காவேரி!!"*

என்ற கானல்வரிப் பாட்டில் வைத்து அறிவுறுத்தினாள். அந்த உரிமை உணர்வு அவளுக்கு இல்லையாக, அவள் உள்ளம் அவன் தரும் மாநிதி ஒன்றையே எண்ணியிருந்திருக்குமாயின், "அவன் யாது கூறினும் கூறுக! அவனுக்கு என்பால் வெறுப்புண்டாக்கும் வெஞ்சொற்களை நான் வெளியிடேன்; அது எனக்குப் பொருளழிவு தருவதல்லது பொருளாக்கம் தாராது; ஆகவே, அது நான் செய்யேன்," எனக் கொண்டு, அவன் உரை கேட்டு உள்ளம் கொதிக்கினும், உரையில் இன்பத்தை இழைத்து உரையாடியிருப்பள். ஆனால், அவள் அது செய்யாது, அறிவுரை கூறி, அதன் பயனாய், அவனையும் பறிகொடுத்துத் தானும் பாழுற்றுப் போனாள் என்றால், அவள் பத்தினிப் பெண்ணே யல்லது பரத்தைப்பெண் ஆவளோ?

மாதவி ஒரு கணிகையேயாயின், கோவலன் கைவிட்ட நிலையில், அவள் நோக்கமெல்லாம் அவன் தந்த மாநிதிமீது மட்டுமேயாக, அவள், அவன் பிரிவு குறித்துச் சிறிதும் கவலையுற்றிராள். புகார் நகரத்தில்

பொருள்வளம் மிகுந்த பெருஞ்செல்வன், கோவலன் ஒருவன் மட்டுமேயல்லன். அவன் போலும் செல்வர் எண்ணற்றவர் வாழும் நகரம் அப்புகார். "உரைசால் சிறப்பின் அரைசு விழை திருவின் பரதர் மலிந்த பயங்கெழு மாநகர்" (சிலம்பு. 2: 1 – 1) என்ற, இளங்கோவடிகளார் அளிக்கும் வரலாற்று உண்மையினைக் காண்க. ஆக, அப்படிப்பட்ட செல்வர் மலிந்த மாநகர் வாழ்வினளாகிய அவள், "நறுந்தாதுண்டு நயனில்காலை வறும்பூத் துறக்கும் வண்டுபோல்பவளாயின்," அச்செல்வருள் ஒருவன், அதிலும், அப்போழ்தைய நிலையில், குலம்தரும் வான் பொருள் குன்றைத் தொலைத்துவிட்டு இலம்பாடுற்று இழிந்துவிட்ட ஒருவன் பிரிவு குறித்துச் சிறிதும் கலங்கியிராள்; அதற்கு மாறாக, "தானே பிரிந்து கைவிட்டுப் பிறிதொரு பெருஞ்செல்வன் வருகைக்கு வழிவகுத்துத் தந்தனனே," என எண்ணி மகிழ்ச்சியில் திளைத்திருப்பள். ஆனால், அவள்பால் அப்பரத்தையர் பண்பு அறவே இல்லையாக, பத்தினி மகளிரின் பண்பாடே முழுக்க முழுக்கப் பொருந்தியிருந்தமையால், அவன் வாராமை கண்டு கையற்ற நெஞ்சோடு கண்துயில் பெறாது கலங்கத் தலைப்பட்டாள். அம்மட்டோ! கோவலனை அடைதல், இனி அறவே இல்லை என்ற நிலையுற்றதும், நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த ஓவியச் செந்நூல் உரைநூல் கிடக்கை போல்வனவற்றைக் கற்றுத்துறைபோகிய பொற்றொடி நங்கையாம் அந்நல்லாள், அறவண அடிகளை

அடைந்து, அவர்பால் ஐவகைச் சீலத்து அமைதியும் அறிந்து, துறவு வாழ்க்கையும் மேற்கொண்டு தூய்மை நிலை பெற்றாள். என்னே அவள் பெண்மை நலம்!

வயந்தமாலை வழியாக, ஒருமுறை விடுத்த தன் வேண்டுகோளை, ஒரு பொருளாக மதியாமையோடு, "ஆடல்மகளே ஆதலின், ஆயிழை! பாடுபெற்றன அப்பைந்தொடி தனக்கு" எனத் தன் ஒழுக்கத்திற்கும் மாசு கற்பித்து மறுத்துவிட்டான் என்பது கண்டு, கோவலன்பால் சினங்கொண்டு, போனால் போகட்டும் என எண்ணி, வாளா இருந்துவிடாது, அவன் வாராது போயினும் நான் பிழையற்றவன் என்பதையாவது அவன் உணர்ந்துகொள்ளுதல் வேண்டும் என்ற உள்ளுணர்வு உடையளாகி, மீண்டும் ஒரு முடங்கல் தீட்டி, அதைக் கோசிகமாணிபால் கொடுத்தனுப்பி, "தன் தீது இலள்; என் தீது" எனத் தான் குற்றம் அற்றவள் என்பதைக் கோவலன் உள்ளம் உணரப் பண்ணினாள் என்றால், அவளைப் பிறந்தகுலம் காட்டிப் பழித்து ஒதுக்குவது பொருந்துமோ?

மேலும், தங்கள் நலம் நுகர்ந்த பின்னர்த் தம்மைக் கைவிட்டுச் செல்லும் இளைஞர்களை ஏற்றுக்கொண்டு மனையறம் நடாத்தும் அவர்தம் மனைவியர்பால், மாறாச் சினம் உடையராகி, அவர் மனம் நோகும் வன்சொற்களை வாரிவாரி வாய் வலிக்க இறைப்பதே வழக்கமாகக் கொண்ட பரத்தையர் குலத்தில் பிறந்த மாதவியும், கோவலனை ஏற்றுக் கொண்ட கண்ணகிமீது கடுஞ்சொற்களை வீசியிருத்தல்

வேண்டும். ஆனால், அவள் அது செய்திலள். அது செய்யாமை மட்டுமன்று. பிறந்த மண்ணை மறந்து, கோவலனைப் பின்தொடர்ந்து, காட்டு வழிகளை இரவில் கடந்து, கடுந்துயர் உற்ற அவள் நிலையை எண்ணி எண்ணிக் கண்ணீர் சொரிந்து கலங்கினாள். கண்ணகி, அவ்வாறு காடு புகுந்து கடுந்துயர் உறுவதற்குத் தானே காரணமாயிருப்பாளோ என எண்ணி, எரியின் இழுதாய் உள்ளம் உருகினாள் என்றால், அவளைக் காதற்செல்வி எனக் கொண்டு கைகூப்பித் தொழுதல் வேண்டாவோ?

தொடக்கத்தில், தன் கணவனின் காமக் கிழத்தியாகத் தொடர்புகொண்டு, இறுதியில் அவனும் பாராட்டும் பெருங்குல மகளாகி மாண்புற்ற மாதவியாலும் பாராட்டப்பெற்ற பெரும்பேறும் கண்ணகிக்குக் கிடைத்துளது.

"கணவன்மார் மறைவுகேட்ட அக்கணமே, தம் உயிர் தாமே பிரிந்துபோகப் பிறவாப் பெருநிலை பெற்ற பத்தினிப் பெண்டிர்களின் பெருமையைக் காட்டிலும் மிஞ்சியது எம் கண்ணகி தேவியின் கற்பு மாண்பு! தம் உயிர் தாமே பிரியாதாயினும், கணவரைப் பிரிந்து உயிர் வாழமாட்டாத் தம் பேரன்பு துரத்த, தாமரை மலர்ந்த தண்ணீரிடையே மூழ்குவார் போல் செந்தழலிடை மூழ்கித் தம் உயிரைப் போக்கிக்கொண்டு பிரிவறியாப் பெருநிலைபெற்ற பத்தினிமார் மாண்பினும் மாண்புடையது எம் கண்ணகி தேவியின் கற்பு! தம் உயிரைத் தாமே போக்கிக்கொள்வதும் இயலாதுபோன

நிலையில், இப்பிறவியில் கிட்டாத உடனுறைவாழ்க்கை, இனிவரும் பிறவியிலாவது வாய்க்குமாக என வேண்டிக் கைம்மை நோன்பு மேற்கொண்டு கற்பு நெறி காக்கும் பத்தினிமார்களின் பண்பட்ட நிலையினும் சாலப் பெருமையுடையது எம் கண்ணகி தேவியின் கற்பு! அவர்கள்போல், தம் உயர்வு ஒன்றே குறியாக உயிரிழந்து போய்விடாது, கள்வன் என்ற குற்றச்சாட்டால் கணவனுக்கு உற்ற கடுந்துயர்மிகு நெடும்பழி துடைக்கப் பெறாமல் தொடர்ந்து நிற்பது காணப் பொறாளாகி, கண்ணீரும், கையில் தனிச் சிலம்பும் உடையளாய்க் காவலன் முன்சென்று வழக்குரைத்து, கணவற்குற்ற பழிதுடைத்துப் பின்னர் முறைதிறம்பிய முடிவேந்தன் உயிர்முடித்து அக் காவலன் பேரூர் கனையெரி மூட்டிக் கணவற்குத் தான் ஆற்றவேண்டிய கடமையினைக் குறைவறச் செய்துமுடித்த மனநிறைவோடு, அவன் உயிரோடு தன் உயிரும் ஒன்று கலக்க உயிர் நீத்து உயர்வடைந்த, மாபெரும் பத்தினியாவள் எம் கண்ணகி!" என, அவள் வழங்கிய பாராட்டுரையின் பெருமையே பெருமை!

தன்னைப் பழி தூற்றவேண்டிய வாய், இதுபோலும் பாராட்டுரையினை வழங்க, அது பெற்ற கண்ணகியின் பெருமையே பெருமை!

"காதலர் இறப்பின் கனைஎரி பொத்தி
ஊது உலைக்குருகின் உயிர்த்து அகத்துஅடங்காது
இன்உயிர் ஈவர்; ஈயா ராயின்
நன்னீர்ப் பொய்கையின் நளிஎரி புகுவர்;
நளிஎரி புகாஅராயின், அன்பரோடு

*உட்னுறை வாழ்க்கைக்கு நோற்று உடம்பு அடுவர்;*
*பத்தினிப் பெண்டிர் பரப்பு நீர் ஞாலத்து*
*அத்திறத்தாளும் அல்லள் எம் ஆயிழை!*
*கணவற்குற்ற கடுந்துயர் பொறாஅள்*
*மணமலி கூந்தல் சிறுபுறம் புதைப்ப*

.................................................................

*காவலன் பேரூர் கனையெரி மூட்டிய*
*மாபெரும் பத்தினி!"* – மணி. 2: 42–55.

# 3

# மாதரி போற்றிய மங்கல மடந்தை

"தென்னவன் தொல்லிசை நட்ட குடியொடு தோன்றிய நல் இனத்து ஆயர்" என்றார் சோழன் நல்உருத்திரன். ஆனிரை காக்கும் தொழிலினராகிய ஆயர்குலத் தலைவனுக்குப் பண்டு வழங்கிய பெயர் கோன் என்பதாம். கோனார் எனும் அப்பெயர், ஆயர்தம் குலப் பெயராக இன்றும் ஆட்சியில் உளது. அரசன் என்ற பொருள்பட வரும் பல சொற்களில் கோன் என்பதும் ஒன்று. ஆனிரைகளே செல்வமாம் எனக் கருதப்பட்ட பண்டைக் காலத்தில், அவ்ஆனிரை காக்க ஒரு தலைவனைத் தேர்ந்து கொண்ட நிலையே, அரச வழியின் தொடக்க நிலையாம் ஆகவே, ஆயர்குலத் தலைவனே ஆதி அரசனாவான் ஆதலின், பாண்டியர் வழிவந்த ஆயர் எனக் கூறுவதினும், ஆயர் வழிவந்த பாண்டியர் எனக் கூறுவதே பொருந்தும்.

ஆயர்குலம், இவ்வாறு பழம்பெருமை வாய்ந்ததோடு, ஆனிரைகளுக்குப் புல்லும் புனலும் காட்டிக் காத்தலும், அவைதரும் பாலும் மோரும்

நெய்யும் ஆகிய நிறைபயன் கொண்டு வாழ்வு நடாத்துதலுமாகிய அருளற வாழ்க்கை நெறி மேற்கொண்ட பெருமையும் உடையதாகும். "ஆகாத்து ஓம்பி ஆப்பயன் அளிக்கும் கோவலர் வாழ்க்கை ஓர் கொடும்பாடு இல்லை!" எனக் கவுந்தி அடிகளார் பாராட்டுவதும் காண்க.

அத்தகைய ஆயர்குடியில் வந்த மாதரி, அக்குடிப்பிறப்பு தந்த இன்ன பல நலங்களோடு வேறு பல நலங்களையும் பெற்றிருந்தாள். மாதரி ஆழ்ந்த தெய்வ நம்பிக்கை வாய்ந்தவளாவள். சமயப்பற்றில், தான் சார்ந்த சமயம் ஒன்றே மெய்ச் சமயம்; பிற எல்லாம் பொய்ச் சமயங்கள் எனக் கருதும் சமய வெறியுடையவள் அல்லள். மாறாக, சமரச சமயநெறி தழுவும் செம்மையுள்ளம் வாய்க்கப் பெற்றிருந்தாள் மாதரி. இயக்கியாம் சிறுதெய்வங்களையும் சிந்தையுருக வணங்குவாள்; திருமாலாம் பெருந்தெய்வத்தின் திருவடிகளையும் மறவாள்; கவுந்தியடிகளாராம் பிறசமயத் தலைவிக்கும் தலைவணங்குவாள். அம்மட்டோ! அத்தெய்வங்கள் ஒவ்வொன்றையும் எவ்வெவ்வாறு வழிபடவேண்டும் என்ற வழிபாட்டு முறையையும் அறிந்திருந்தாள். "புறஞ்சிறை மூதூர்ப் பூங்கண் இயக்கிக்குப் பால்மடை கொடுத்துப் பண்பிற் பெயர்வோள் ஆயர் முதுமகள் மாதரி" என்ற தொடர், இயக்கிபோலும் சிறு தெய்வங்களுக்குப் பால்மடை கொடுத்தல் வேண்டும் என்பதை உணர்ந்திருந்தாள் மாதரி என்பதையும், "ஆயர் முதுமகள் ஆடிய சாயலாள்

பூவும் புகையும் புனைசாந்தும் கண்ணியும் நீடு நீர் வையை நெடுமால் அடி ஏத்தத் தூவித் துறைபடியப் போயினாள்" என்ற தொடர், திருமால் போலும் பெருந்தெய்வங்களை மலர் தூவியும், புகழ்பாடிக் குரவையாடியும் கும்பிடல் வேண்டும் என்பதை உணர்ந்திருந்தாள் மாதரி என்பதையும் உணர்த்துவது காண்க. கவுந்தியின் தாள் பணிதலோடு அவள் இடும் ஆணையைத் தலைமேல் தாங்கி நிறைவேற்றுவதே அவள்போலும் நடமாடும் தெய்வங்களுக்கு ஆற்றும் வழிபாட்டு முறையாகும் என்பதையும் அறிந்திருந்தாள் மாதரி.

"முற்றிலும் குணமே உடையவரோ, முற்றிலும் குற்றமே உடையவரோ உலகத்தில் அரியர். குணம் உடையவர்பாலும் குற்றம் சிறிது இருத்தல் கூடும்; குற்றம் உடையவர்பாலும் குணம் சிறிது இருத்தல் கூடும். இதுவே உலகியலாதலின், நற்பண்புமிக்க மாதரி பாலும் சிறிது குற்றம் இருத்தல் கூடுமோ?" என்ற எண்ணம் எழக் கூடும். அந்நினைப்பிற்கே இடம் இல்லை என்று கூறுகிறார் கவுந்தி அடிகளார். மாதரி நல்ல பல பண்புகளைப் பெற்றிருந்ததோடு தீமையே அறியாதவள் என்றும் கூறுகிறார் அவர்.

மேலும், "நன்று; நல்லது தீது பகுத்துணரமாட்டா இளம்பருவத்தள் மாதரி; அதனால், அவள் அத்தகைய நல்லவளாக இப்போதுள்ளாள்; அவ்வேறுபாடுணரும் பருவத்தளாய் வளர்ந்துவிட்டால், அப்போது அவள் பால் இந்நலங்களைக் காணல் அரிதாகி விடலும்

கூடும்" என நினைப்பதற்கும் இடமில்லாதபடி, மாதரி, நல்லது தீது உணரமாட்டா இளம் பருவத்தாள் அல்லள்; அவற்றை நன்கு உணர்ந்த முதியவளாவள் என்று கூறிப் பாராட்டியுள்ளார் கவுந்தி அடிகளார்.

"நன்று தீது உணரும் மூதறிவும் முதுமையும் உடையவள் என்பதினாலேயே, மாதரி நல்லவளாகி விடாள். நல்லது என்பதை உணர்ந்திருந்தும் அது செய்யாதவரும், தீது என்பதை உணர்ந்திருந்தும் அதையே விரும்பிச் செய்பவரும் உலகில் மிகப் பலர் ஆவர். மாதரி அத்தகையாருள் ஒருத்தியாதலும் கூடும்" எனக் கூறத் துணிவார்க்கும் வாய்ப்பில்லா வகையில், "மாதரி, நல்லது எனத் தன் உள்ளம் உணர்ந்த வழிச் செல்வதாயின் உயிர் இழக்கும் கேடே வரும் எனினும், அந்நல்லதைக் கைவிடாமையும், தீது உணர்ந்ததன் வழி நடப்பதாயின பெருவாழ்வு பெறலாகும் என்ப தாயினும், அதைக் கனவினும் கருதாமையும் ஆகிய நடுவு நிலைமையில் உறுதியாக நிற்கும் உள்ளுரம் வாய்க்கப் பெற்றவளாவள்" என்கிறார் கவுந்தி அடிகளார்.

"அவ்வாறு, அறத்தை நிலைநாட்டுவதும், மறத்தைக் களைந்து போக்குவதுமாகிய அச்செயலை மேற்கொள்ளும் ஆர்வமிகுதியால், அன்பையும் அருளையும் மறந்து ஆற்றவும் கொடியவளாகி விடுவாளோ" என ஐயுறுவதற்கும் இடம் இல்லாதவாறு, மாதரி உள்ளம் அருள் நிரம்பிய உள்ளமாம் என்றும் கூறியுள்ளார் கவுந்தி அடிகளார்.

"கண்ணகியையும் கோவலனையும் ஏற்றுக் கொண்டு, போற்றிப் பேணுவாரைத் தேடி அலைந்து கொண்டிருந்தது கவுந்தி அடிகளார் உள்ளம். அந்நிலையில் மாதரியைக் கண்டதும், "இவள், இவர்களை மறுக்காமல் ஏற்றுக்கொண்டு செல்ல வேண்டுமே" என்ற வேட்கை மிகுதியால் கவுந்தி அடிகளார், மாதரி மனம் மகிழும் வகையில் இவ்வாறெல்லாம் போற்றிப் புகழ்ந்துள்ளாரேயல்லது, அத்துணைப் பண்புகளும், அவள்பால் பொருந்தி யிருக்கும் என எண்ணிவிடுவது கூடாது" எனக் கருதவும் தோன்றும். கவுந்தி, அப்புகழ் உரைகளை மாதரி கேட்கக் கூறியிருந்திருப்பாரானால், அவ்வாறு கருத இடம் உண்டு. ஆனல், அவர், அவளை, எதிர்முகமாக வைத்துக்கொண்டு அவ்வாறெல்லாம் வாய்விட்டுப் புகழவில்லை. மாறாக, அவள்பால் இவர்களை ஒப்படைப்பதால் ஏதம் இல்லை என உணரும் வகையில், அவள்பால் அமைந்து கிடக்கும் அப்பண்புகளையெல்லாம் தம் உள்ளத்திற்குள்ளாகவே ஒவ்வொன்றாக ஆராய்ந்து பார்த்து உறுதி செய்து கொள்ளும் நிலையில் தமக்குத் தாமே கூறிக் கொண்டார். ஆகவே, இப்புகழுரைகள், மாதரி உள்ளம் மகிழ்வதற்காகப் பொய்யே புகன்றவை அல்ல; உளமார உணர்ந்து உரைத்த உண்மை உரைகளாம் என அறிக.

*"தீதிலள்; முதுமகள்; செவ்வியள்; அளியள்;*
*மாதரி தன்னுடன் மடந்தையை இருத்துதற்கு*
*ஏதம் இன்று என எண்ணின ளாகி."*

– சிலம்பு. 15: 122–124

மாதரியைப் பற்றிக் கவுந்தி கூறிய புகழ் உரைகள் அனைத்தும் உண்மையொடுபட்டனவே ஆம் என்பதை விளக்கும் அகச்சான்று ஒன்றையும், அவள் வாழ்க்கை முடிவு நமக்கு அளித்துளது. அடைக்கலப் பொருள்களாகக் கவுந்தியார் தன்பால் ஒப்படைத்த கண்ணகியையும் கோவலனையும் கேடின்றிக் காப்பது தன்னால் இயலாது போயிற்று. கோவலன் கொலையுண்டு போனான். மங்கல மங்கையாய்த் தன்மனை புகுந்த கண்ணகி, கைம்பெண் ஆனாள். இவ்வகையில் அடைக்கலப் பொருளைக் காக்கத் தவறிய தன் பிழையுணர்ந்த மாதரி, அதன்பின் ஓர் இமைப் பொழுதும் உயிர்வாழ விரும்பவில்லை. தான் பெற்ற தன் ஒரே மகள் ஐயை, மணமாகாக் கன்னியாகவே உள்ளாள். அவளுக்குக் கடிமணம் செய்து களிக்கவேண்டுவது தன் கடமை என்பதையும் மறந்தாள். வையைத் துறையில் திருமால் அடி ஏத்துப் போனவள், கோவலனுக்குற்ற கொடுந்துயர் கேட்ட அளவே,

*"வருபுனல் வையை வான்துறைப் பெயர்ந்தேன்;*
*உருகெழு மூதூர் ஊர்க்குறு மாக்களின்*
*வந்தேன்; கேட்டேன்; மனையில் காணேன்;*
*எந்தாய்! இளையாய்! எங்கு ஒளித்தாயோ?"*

என அழுது புலம்பி, எரி புகுந்து உயிர்விட்டாள். மாதரியின் அப்பெருஞ் செயலைத் தேவந்தி பாராட்டியுள்ளாள். அப்பாராட்டு வருமாறு:

"ஐயம்தீர் காட்சி அடைக்கலம் காத்து ஓம்ப
வல்லாதேன் பெற்றேன் மயல், என்று உயிர்நீத்த
அவ்வைமகள் இவள்தான்; அம் மணம் பட்டிலா
வைஎயிற்று ஐயையைக் கண்டாயோ? தோழி!
மாமி மடமகளைக் கண்டாயோ! தோழி!"

பற்றறத் துறந்த பெருஞ் சமயத் தலைவியாம் கவுந்தி அடிகளாராலும், சாத்தனை மணந்த தெய்வப் பெண்ணாம் தேவந்தியாலும் இத்தகைய பாராட்டு களுக்கு உரியளாகிவிட்ட மாதரி, கண்ணகியைத் தன் மனைக்குக் கொண்டு சென்றதும், அவர்தம் பெரு வாழ்வுக்கு, ஆடு மாடுகள் கட்டுண்டு கிடக்கும் ஆயர்பாடி வீடுகள் ஆகா என உணர்ந்து, புதிய மனையில் குடியேற்றி, கண்ணகியைக் குளிர் புனலில் நீராட்டி, தன் மகள் ஐயையை அவள் அடித்தோழியாக அளித்து, அடிசிலாக்குவதற்கு வேண்டுவ அனைத்தும் வழங்கியதோடு, அழகுக்கு அழகு செய்ய வேண்டா அவள் இயற்கையழகின் பெருமையை, "கூடல் மகளிர் கோலம் கொள்ளும் ஆடகப் பைம்பூண் அருவிலை அழிப்பச் செய்யாக் கோலமொடு வந்தீர்" என வாயாரப் பாராட்டியதோடு, கோவலனோடு வீற்றிருந்த கண்ணகியை, ஆயர்பாடிக் கண்ணன் துயர் தீர்த்த நம்பின்னையாம் தன் குலதெய்வமாகவே கொண்டு வாழ்த்தினாள் என்றால், அது, கண்ணகியின் பெருமைக்கு, ஒரு பெரும் சான்று ஆகாதோ?

"ஆயர் பாடியின் அசோதை பெற்றெடுத்த
பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ

*நல்லமுது உண்ணும் நம்பி? ஈங்குப்*
*பல்வளைத் தோளியும் பண்டு நம் குலத்துத்*
*தொழுனை யாற்றினுள் தூமணி வண்ணனை*
*விழுமம் தீர்த்த விளக்குக் கொல்? என*
*ஐயையும் தவ்வையும் விம்மிதம் எய்திக்*
*கண்கொளா நமக்கு இவர் காட்சி ஈங்கு என."*

– சிலம்பு. 16: 46–53

# 4

# தேவந்தி வழிபட்ட தெய்வக் கற்பினாள்

*"தெய்வம் தொழாஅள், கொழுநன் தொழுதுஎழுவாள்
பெய்எனப் பெய்யும் மழை."*

என்றதனால், கற்புடைய மகளிர்க்குத் தெய்வ வழிபாடு வேண்டுவதில்லை என்பது திருவள்ளுவர் கருத்தாகும் என்று கூறிவிடுதல் கூடாது. கடவுள் வழிபாடு கணவன் வழிபாடு ஆகிய இரண்டனுள், கற்புடையார்க்குச் சிறப்புடையது கணவன் வழிபாடாகும். அக்கணவன் வழிபாட்டில் சென்ற கருத்துடைமையால், கடவுள் வழிபாட்டை ஒரோவழிக் கைவிடினும் கேடில்லை என்பதே அவர் கருத்தாகும். ஆகவே, கடவுளை வழிபடல் அறியாது கணவனையே வழிபடுவாள் கற்பிற் சிறந்தவளாவள்; இயற்கையையும் அடக்கிப் பணி கொள்ளும் ஆற்றல் வாய்க்கப்பெற்றவளாவள் என்றார். என்றாலும், கணவன் வழிபாட்டிற்கு ஒரு சிறுகுறை தானும் நேராவகையில் கடவுள் வழிபாட்டையும் மேற்கொள்பவள், கணவன் வழிபாடு ஒன்று மட்டுமே ஆற்றுவாளைக் காட்டிலும் சிறப்புடையவளாவள்.

அச்சிறப்புடைமையேயல்லாமல், வழிபடத்தக்க கடவுளையே கணவனாகவும் பெற நேர்ந்து, கணவனுக்கு ஆற்றும் வழிபாட்டில், கணவன் வழிபாடு, கடவுள் வழிபாடு ஆக இரண்டையும் ஒருங்கே காணும் பேறுடையவள், சாலப்பெரும் பேறுடையவளாவள். அத்தகைய பேறு வாய்க்கப் பெற்ற பெரியவள் தேவந்தி.

தேவந்தி மணந்துகொண்டது மக்களில் ஒருவனை அன்று; அவள் கணவன், காவிரிப்பூம்பட்டினத்தில் கோயில்கொண்டு, அந்நகர்வாழ் மக்களின் வழி பாட்டையும், அந்நகரை நிலக்களமாகக்கொண்டு காப்பியங்கள் ஆக்கிய இருபெரும் புலவர்களின் பாராட்டையும் பெற்ற ஒரு தெய்வமாவன். அத் தெய்வத்தாயே கணவனாகக் கொண்டிருந்தாள் தேவந்தி.

காவிரிப்பூம்பட்டினத்தில் அந்தணர் குலத்தவ ளாகிய மாலதி என்பவள், தன் மாற்றாள் மகவுக்குப் பாலூட்டுங்கால், பால்விக்கி, அம்மகவு மாண்டுபோக, அம்மகவீன்ற மாற்றாளும் அவள் மணவாளனும், தான் ஏத்துணைதான் கூறினும் நிகழ்ந்தன எற்றுக்கொள்ளாது, அவர் மகவைத் தான், வேண்டுமென்றே கொன்று விட்டதாகக்கொண்டு கொடுமை செய்வரே என்ற அச்ச மிகுதியால், அம்மகவை எப்பாடுபட்டேனும், எவரை அடுத்தேனும் உயிர்ப்பிக்கவேண்டும் என்ற உணர்வோடு, அப்புகார்ப் பெருநகரில் கோயில் கொண்டிருக்கும் அமரர் தருக் கோட்டம், ஐராவதக் கோட்டம், பல தேவன் கோயில், பகலோன் கோயில்,

முக்கண் இறை கோயில், முருகன் திருக்கோயில், அமரர்கோன் கோயில், அருகன் பெருங்கோயில், சந்திரன் கோயில், சாதவாகனன் கோயில் முதலாம் கோயில்கள் தோறும் சென்று, "தெய்வங்காள்! மாண்ட இம்மகவுயிரை மீண்டும் தந்து, என்னைப்பற்றி நிற்கும் பழிபோக்கி அருள் புரிவீர்களாக!" என வேண்டிய வேண்டுகோள்களெல்லாம் பயனற்றுப் போகவே, இறுதியாகப் பாசண்டசாத்தன் பெருங்கோயில் புகுந்து, "மகவின் உயிர் தந்தாலல்லது இவ்விடம்விட்டு வெளியேறேன்" என வரங்கிடந்தாளாக, அந்நிலையில், புதைப்பதும் எரிப்பதும் செய்யாது வறிதே இடப்படும் பிணம் தின்று வாழும் இடுகாட்டு இடாகினிப் பேய் ஒன்று, கண்டவர் மயங்கும் கன்னி உருவில் அவள் முன் தோன்றி, "பெண்ணே! போன பிறவியில் புண்ணிய நல்லறம் புரிந்தார்க்கல்லது தேவர் வரம் தரார் என்பது உலகம் கண்ட பொருளுரை" எனக் கூறியவாறே, அவள் மகவுடலைப் பறித்துத் தின்று மறைந்து விட்டது. மகவின் உயிரைப் போக்கியதோடு, மகவின் உடலையும் பறிகொடுக்க நேர்ந்தது கண்டு, மாலதி, இடியேறுண்ட மயிலேபோல் இனைந்து அழத் தலைப்பட்டாளாக, அக்கோயில் உறையும் சாத்தன், அவள் நிலைக்கு இரங்கி, அவள் முன் தோன்றி, "அன்னாய்! அழேல்! அதோகாண் உன் மகவு" என ஒரு மரத்தடியைச் சுட்டிக் காட்டி, அவள் அம்மரத்தடியை அணுகு முன்னர், தானே மகவுருக்கொண்டு ஆங்குப்போய்க் கிடந்தானாக,

கிடந்த அத்தெய்வ மகவை, மாலதி, தன் மகவெனவே நம்பி எடுத்து மனைகொண்டு சென்றாள். இவ்வாறு மகவுருவாய் மனைபுகுந்த சாத்தன், அந்தண மரபுக்குரிய அருங்கலை பலவும் அறிந்தும், பயின்றும், ஆண்டு நிரம்பப் பெற்ற நிலையில், இறந்த தாய் தந்தையர்க்கு இறுதிக் கடனும் இனிதாற்றி, இறுதியில் தேவந்தியைத் திருமணம் கொண்டு, நாள் சில கழிந்த பின்னர், அவளைத் தன் திருக்கோயிலுக்கு அழைத்து, தன் தெய்வத் திருவுருவைக் காட்டியதோடு, நடந்தன நவின்று, “ஊரார்க்கும் உறவினர்க்கும் தீர்த்தத்துறை படிந்து வருவான் செல்வேன்போல் செல்கின்றேன்” எனக் கூறி மறைந்து, தெய்வத் திருமேனிகொண்டு விட்டானாக, தீர்த்தத் துறை படியப்போன கணவன் மீண்டு வரப் பாடு கிடக்கின்றாள் என உலகம் எண்ணிக் கிடக்க, பாசண்டச்சாத்தற்கு வழிபாடாற்றும் விழுமியோளாய், வாழ்ந்திருந்தாள் தேவந்தி.

தேவந்தியும் சாத்தனும் உலகத்தார் கண்முன் மனைவியும் கணவனுமாகக் காட்சி தரினும், கணவன் நிலைக்கு அப்பாற்பட்டவன் சாத்தனாதலின், கணவனால் பெறலாகும் இன்பத்தை அச்சாத்தனிடம் பெறுவது தேவந்திக்கு இயலாது. உடலுறு புணர்ச்சி பெற மாட்டாது உள்ளத்துப் புணர்ச்சி ஒன்றில் மட்டுமே உளம் அடங்க வேண்டியதே தான் பெறலாகும் பேறு என்பதை உணர்ந்தும், அதை, உலகம் உணரா வகையில் ஒளித்துவைத்து வாழ்ந்திருந்தாள் தேவந்தி. அத்தகைய ஒருத்தியால்தான் கணவனோடு

கூடி வாழமாட்டாது, தனித்து வாழும் மகளிரின் உள்ளத்துயரை உள்ளவாறு உணர முடியும். மேலும், தேவந்தியோ மக்கள் இனத்தவள்; அவள் கணவனாம் சாத்தனோ கட்புலம் காணாக் கடவுள் நிலையினன். ஆகவே, அவன்பால் இன்பத்தைப் பெறுவது இயலாது என்பதால், தன் இன்ப வேட்கையைக் கைவிடுவது தவிர்த்து தேவந்திக்கு வேறு வழியில்லை யென்பதால், அவள் ஆற்றியிருப்பது அத்துணை அரிய செயலாகாது. ஆனால், கண்ணகியின் கணவனாம் கோவலன் அவ்வாறு எட்டா நிலையில் இருப்பவன் அல்லன். பெண்டிர்க்கு இன்பம் நல்கமாட்டாப் பெருநிலையுடை யானும் அல்லன். மாறாக, பெண்டிர்க்கு இன்பம் நல்கும் பிறவியும் பருவமும் வாய்க்கப்பெற்றவன்; கண்ணகிக்கு மட்டுமே இன்பம் நல்கவேண்டிய உரிமையுடையவன், அவளைக் கைவிட்டதோடு அமையாது, அதே மாநகரில் பிறிது ஒரு பகுதியில் மற்றொருத்திக்கு இன்பம் அளித்து வாழ்ந்து கொண்டிருக்க, அத்துயர நிலையைத் தாங்கிக் கொண்டிருக்கும் கண்ணகியின் பெருநிலையை உணர்ந்தாள் தேவந்தி. ‘பாம்பறியும் பாம்பினகால்’ என்ப; அவ்வகையால் கோவலனைப் பிரிந்துறையும் கண்ணகியின் துயரநிலையை உணர்ந்த காரணத்தால், அவள் துயர் தீர்க்கும் வழி வகைகளை அவ்வப்போது கண்ணகிக்கு உணர்த்தும், உயிர்த் தோழியாக வாழ்ந்திருந்தாள் தேவந்தி.

சாத்தன், தனக்கு இன்பம் தரமாட்டான் எனினும், கண்ணகி கோவலனைப் பெற்று இன்பம் நுகர அருள் பண்ணுதல் கூடும்; அருள் பண்ணுதல் வேண்டும் என விரும்பினாள் தேவந்தி. அதனால், அது தருவான் வேண்டி, அறுகு, சிறுபூளை, நெல் முதலிய தூவிச் சாத்தனை வழிபட்டாள். அவ்வழிபாடு நிறைபயன் நல்கும் என்ற நம்பிக்கையால், கண்ணகியை அணுகி, "கோவலன் வரப்பெற்றுப் பேரின்பப் பெருவாழ்வு பெறுவாயாக!" என வாழ்த்தினாள்.

*"கண்ணகி நல்லாளுக்கு உற்ற குறை உண்டென்று*
*எண்ணிய நெஞ்சத்து இனையளாய், — நண்ணி*
*அறுகு சிறுபூளை நெல்லொடு தூஉய்ச், சென்று*
*பெறுக கணவனோடு என்றாள்."*

— சிலம்பு. 9: 41–44

கண்ணகிக்கு உற்றதோழியாம் நிலையைத் தேவந்தி தேடிப்பெற்றுக் கொண்டதைப்போலவே, தேவந்தியைத் தன் உயிர்த் தோழியாகக் கண்ணகியும் விரும்பி ஏற்றுக்கொண்டாள். அதனால்தான், கோவலன், தன்னை உடன்கொண்டு ஒரு மாநகர் புக்கதுபோலவும், அம்மாநகர் மக்கள் பொருந்தாப் பழியுரை ஒன்றை அவர்மேல் ஏற்றிக் கூறியதுபோலவும், அதனால் கோவலனுக்கு ஒரு தீங்கு நேர்ந்ததுபோலவும், அது பொறாது, தான், அம்மாநகர் மன்னன் முன் சென்று முறையிட்டதுபோலவும், அதன் பயனாய் மாநகரும் மன்னனும் கேடுற்றதுபோலவும் தான் கண்ட தீக்கனாவைக் கண்ணகி தன் உற்றார் உறவினர் ஒருவரிடத்தும் உரையாது, தேவந்தியிடம் மட்டுமே

உரைத்து மனங்கவன்றனள். கணவன் பிரிவு தந்த கடுந்துயரைத் தன் மாமன் மாமியர்க்கும் காட்டாது மறைத்துவந்த கண்ணகி, தேவந்தியிடத்துத் தான் கண்ட தீக்கனாவையும் கூறி வாய்விட்டுப் புலம்பினாள் என்றால், கண்ணகி, தேவந்திபால் கொண்டிருந்த பாச உணர்வை என்னெனப் புகல்வது?

*"கடுக்கும் என் நெஞ்சம் கனவினால்; என்கை*
*பிடித்தனன் போய் ஓர் பெரும்பதியுள் பட்டேம்;*
*பட்ட பதியில் படாததொரு வார்த்தை*
*இட்டனர் ஊரார், இடுதேள் இட்டு என்தன்மேல்;*
*கோவலற்கு உற்றதோர் தீங்கென்று அதுகேட்டுக்*
*காவலன் முன்னர் யான் கட்டுரைத்தேன்; காவலனோடு*
*ஊர்க்கு உற்ற தீங்கும் ஒன்று உண்டால்; உரையாடேன்;*
*தீக்குற்றம் போலும்; செறிதொடீஇ!"*

– சிலம்பு. 9: 45–52

தன்பால் அத்துணைப் பாச உணர்வு உடையளாகிய கண்ணகியின் துயர்நிலையைக் காணப் பொறாமையினாலேயே, தேவந்தி, அதுதீர, சாத்தனுக்குத் தான் வழிபாடாற்றியதோடு அமையாது, கண்ணகியும் கடவுளை வழிபடவேண்டும் என விரும்பினாள். கடவுள் வழிபாடாவது, கண்ணகியின் கண்ணீரைத் துடைக்காதா என் ஏங்கிற்று அவள் உள்ளம். அதனால்தான் கணவனை வழிபடுவதல்லது, கடவுளை வழிபட்டறியாள், வழிபட விரும்பாள் கண்ணகி என்பதை அறிந்தும், காவிரி கடலோடு கலக்குமிடத்தில் உளவாகிய சோமகுண்ட, சூரிய குண்டத்துறைகளில் படிந்தாடிக் காமவேள் கோட்டம்

வலம்வந்து வழிபாடாற்றினால் பிரிந்த கணவரைப் பெறலாகும் என அக்காலப் பெண்டிரிடையே நிலவிவந்த நம்பிக்கையை நினைவூட்டி, கண்ணகியையும் அவ்வழிபாடாற்றத் தூண்டவும் துணிந்தாள்.

*"பொற்றொடீஇ!*
*கைத்தாயும் அல்லை; கணவற்கு ஒருநோன்பு*
*பொய்த்தாய் பழம்பிறப்பில்; போய்க்கெடுக! உய்த்துக்*
*கடலொடு காவிரி சென்றலைக்கும் முன்றில்*
*மடலவிழ் நெய்தலம் கானல் தடம்உள*
*சோமகுண்டம் சூரியகுண்டம் துறைமூழ்கிக்*
*காமவேள் கோட்டம் தொழுதார், கணவரொடு*
*தாம்இன்புறுவர் உலகத்துத் தையலார்;*
*போகம்செய் பூமியினும் போய்ப் பிறப்பர்; யாம் ஒருநாள்*
*ஆடுதும்!"*

—சிலம்பு. 9: 54–63

கண்ணகி, கோவலனை அடைவான் வேண்டிச் சாத்தனுக்குத் தான் ஆற்றிய வழிபாட்டின் பயனாகவோ அல்லது, கணவனைப் பெறுக என வாழ்த்திய தன் வாழ்த்தின் பயனாகவோ, கண்ணகி கோவலனை அடையப் பெற்றாள் எனினும், அவர்தம் உடனுறை வாழ்க்கையைக் காணும் பேறு தனக்கு வாய்க்காமைக்கு வருந்தினாள் தேவந்தி. அம்மட்டோ! மதுரை நிகழ்ச்சியைக் கேட்டதும், "செய்தவம் இல்லாதேன்; தீக்கனாக் கேட்டநாள் எய்த உணராதிருந்தேன்; மற்று என் செய்தேன்!" என, வாய்விட்டுப் புலம்பினாள். கணவன், பரத்தையர் தொடர்பு காரணமாகச் சிலகாலம் பிரிந்திருந்தமைக்கே அத்துணைப் பெருந்துயர் கொண்டவள், கணவன்

மீளாப் பெரும் பிரிவு மேற்கொண்ட நிலையில் எத்துணைக் கொடுந்துயர்க்கு உள்ளாயினளோ எனக் கண்ணகியின் கைம்மை நிலையினை எண்ணி எண்ணிக் கலங்கினாள். அவள் கண்ணீர் துடைக்கும் துணை யாரும் இலரே என்ற ஏக்க உணர்வு உந்த, மதுரைக்கு விரைந்தாள்; ஆனால், அவள் ஆங்கு அடைவதற்குள், கண்ணகி குட்டுவன் கட்டிய கோயிலுள் கடவுள்கோலம் கொண்டுவிட்டாள் என அறிந்து வஞ்சிமாநகர் புகுந்து, அவளுக்கு வழிபாடாற்றும் விழுமிய பணி மேற்கொண்டாள்.

பாட்டன் பாட்டி, தாய் தந்தை, மாமன் மாமி, மக்கள் மருமக்கள், கணவன் என ஒருத்திக்கு உற்றார் பலராயினும், அவர்களுள் நனிமிக நெருங்கிய உறவு ஒன்றே கணவன் உறவு ஆகும். அத்தகைய நெருங்கிய உறவுடைய கணவனாகச் சாத்தனாம் தெய்வத்தையே கொண்ட காரணத்தால், தெய்வங்களின் பண்பும் இயல்பும் யாவை என்பதைத் தெளிவுறத் தெரிந்து கொள்ளும் பெருவாய்ப்பு வாய்க்கப்பெற்றவள் தேவந்தி. அவ்வாறு தெய்வங்களின் பண்பும் இயல்பும் உணர்ந்த ஒருத்தி, கண்ணகியின் தெய்வக் கற்பினைத் தெளிவுறக் கண்டு பாராட்டுகின்றாள் என்றால், அது, கண்ணகியின் பெருமைக்கு ஒரு பெரும் சான்றாகும் அல்லவோ? மேலும், கடவுள் வடிவில் காட்சி அளித்துவந்த கணவனுக்கு வழிபாடு ஆற்றிவந்த ஒருத்தி அவ் வழிபாட்டைக் கைவிட்டுக் கண்ணகியின் கோயில் அடைந்து, அவளுக்கு வழிபாடாற்றத் தொடங்கி

விட்டாள் என்றால், கண்ணகியின் பெருமையை என்னெனப் புகல்வது?

*"முடிமன்னர் மூவரும் ஓம்பும் தெய்வ*
*வடபே ரிமய மலையில் பிறந்து*
*கடுவரல் கங்கைப் புனலாடிப் போந்த*
*தொடிவளைத் தோளிக்குத் தோழிநான், கண்டீர்!*
*சோணாட்டார் பாவைக்குத் தோழிநான், கண்டீர்!"*

— சிலம்பு. வாழ்த்து

# 5

# கவுந்தி பாராட்டும் கற்புடைத் தெய்வம்

*"புறந்தூய்மை நீரான் அமையும்; அகந்தூய்மை*
*வாய்மையான் காணப் படும்."*

என்றார் வள்ளுவர். புறநலம் எவ்வளவு சிறப்புடையதோ அவ்வளவு சிறப்புடையது அகநலம். புற வாழ்க்கை சிறந்து விளங்கின் அகவாழ்க்கையும் சிறந்து விளங்குதல் வேண்டும். புறவாழ்க்கை அகவாழ்க்கை ஆகிய இரண்டுமே ஒரு படித்தாய் வளர்தல் வேண்டும். ஒன்று வளர ஒன்று குறையின் நன்றாகாது. ஒரோவழி புறவாழ்க்கை குன்ற அகவாழ்க்கை உயரினும் அத்துணைக் கேடிராது. ஆனால், அகவாழ்க்கை குன்ற புறவாழ்க்கை மட்டுமே வளம்பெற்றுவிடின் பெருங்கேடாய் முடியும். இந்த உண்மையை உணர்ந்தவர் தமிழர். அதனால், விளை வளத்தாலும் வாணிக நலத்தாலும் நாட்டின் புறவாழ்க்கை நிலையில் உயர்வு கண்ட தமிழர்கள், ஆன்றோர்களையும் அறவோர்களையும் போற்றி அகவாழ்க்கை நிலையிலும் உயிர்வுகண்டு

திகழ்ந்தார்கள். அதனால், காடு கொன்று நாடு கண்டு நகர் அமைத்தகாலை, அகநகரை, வணிகர் வீதி போலும் பெருந்தெருக்களும், வேந்தன் பெருங்கோயில் முதலாம் பெருமாளிகைகளும் மலிந்து ஆரவாரம் மிகுந்ததாக அமைத்த அத்தமிழர்கள், புறநகரை, அறவோர்களும் ஆன்றோர்களும் இருந்து அறம் வளர்க்கும் பள்ளிகளும் பட்டிமண்டபங்களும் மலிந்து அமைதியின் இருப்பிடமாக அமைத்தார்கள். தமிழகத்தின் தலைசிறந்த கடல்துறைப் பட்டினமாகவும், சோணாட்டின் பெருந்தலைநகரமாகவும் திகழ்ந்த புகார் நகரத்துப் பெருமக்கள், புறவாழ்க்கை வளச்செருக்கால் பண்பாடற்றவராகிப் போவதைத் தடுப்பான் வேண்டி, அவர்தம் அகவாழ்வும் வளம்பெற அறவுரையும் அறிவுரையும் வழங்கும் அப்பணி மேற்கொண்டு, அப்புகார் நகரத்துப் புறநகரில் பள்ளி அமைத்துச் சமயப் பணியாற்றிவந்த அறிவு மூதாட்டி ஆவர் கவுந்தி அடிகளார்.

ஐயை எனும் இயற்பெயருடையவராகிய அவர்கள் சமயப் பணிமீது சென்ற மனம் உடைமையால், மணத்தின்மீது செல்லா மனம் உடையவராகி, சமண சமயப் பெண்டிர் இருந்து சமயப் பணி ஆற்றும் நிலையமாம் கவுந்திப் பள்ளி அமைத்துச் சமயத் தொண்டாற்றியதனால் கவுந்தி அடிகளார், கவுந்தி ஐயை என அழைக்கப் பெறுவாராயினர்.

கை ஐயக்கடிஞையும், தோள் உறியும் தாங்கிக் கிடக்க, வாழ்வுத் துணையாக, நா ஐந்தெழுத்து

மந்திரத்தை ஓயாது ஒலித்துக்கொண்டிருக்கும் கவுந்தி அடிகளாரின் துறவுக்கோலக் காட்சியை இளங்கோ வடிகளார் இவ்வாறு எடுத்துப் பாராட்டியுள்ளார்:

"தோமறு கடிஞையும் சுவன்மேல் அறுவையும்
காவுந்தி ஐயை கைப் பீலியும் கொண்டு
மொழிப் பொருள் தெய்வம் வழித்துணை ஆகுஎன."

உணவைக் குறைத்து உடலை வருத்தும் துறவு நிலையின் தூய்மை கெடாவகையில் வாழ்ந்து வந்தமையால் நனிமிக மெலிந்துபோன அடிகளாரின் உடற்காட்சியும், அவர்தம் தவவொழுக்க உறுதிப்பாடும் வம்பப்பரத்தர் உள்ளத்தையும் ஈர்க்கும் பெருமை யுடைய வாகும். "நோற்றுணல் வாழ்க்கை நொசிதவத்தீர்" என்ற அவர் பாராட்டுரையினைப் பார்மின்!

"தவமுதல் காவுந்தி": இது இளங்கோவடிகளார் அளிக்கும் பாராட்டு. "கழிபெரும் சிறப்பின் கவுந்தி": இது சாரணர் வழங்கும் சான்றிதழ். "புண்ணிய முதல்வி": இது வன சாரணியின் வாழ்த்துரை.

இத்துணைப் பாராட்டுகளைப் பெறுமளவு கடுந்துறவு மேற்கொண்டு வாழ்ந்தவராகிய கவுந்தி அடிகளாரின் உணர்வும் ஒழுக்கமும், கண்ணகியையும் அவள் கணவனையும் கண்டது முதல் பெருமளவு மாறி விட்டன.

"உருவு கண்டு எள்ளாமை வேண்டும்"; "பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்". ஆன்றோர் வழங்கும்

அறவுரைகள் இவை. மக்கள் தம் உருவமைப்பின் நலம், நலம் இன்மைகளில் நாட்டம் செலுத்தவதோ, இன்ன குலம் உயர்ந்தது, இன்ன குலம் தாழ்ந்தது எனக் குல உயர்வு தாழ்வுகளில் கருத்தைப் போக்குவதோ துறவு நிலைக்கு அப்பாற்பட்டது. அடிகளார் இதை உணராதவர் அல்லர். ஆனால், அத்தகைய அடிகளார் உள்ளத்தையும் கண்ணகி, கோவலர்தம் உருவமும் குலமும், தம்பால் ஈர்க்கும் ஆற்றல் உடையவாகி, அவர் வாய் வழங்கும் பாராட்டைப் பெறும் பேறுடைய வாயின. தம்மைக் கண்டு வணங்கிய அவ்விருவரையும்,

> "உருவும் குலனும் உயர்பே ரொழுக்கமும்,
> பெருமகன் திருமொழி பிறழா நோன்பும் உடையீர்!"

எனப் பாராட்டிய அடிகளார் பாராட்டுரையில் அவர்தம் உருவநலம் குலநலங்களையே முதற்கண் குறிப்பிட்டமை காண்க

துறவுள்ளம் உறவு நிலைக்கு அப்பாற்பட்டது என்ப. துறவிக்குத் தாய் இல்லை; தந்தை இல்லை; மனைவி இல்லை; மக்கள் இல்லை. இவ்வாறு உறவு நிலைக்கு அப்பாற்பட்டதான துறவு நிலையுடையவ ராகிய அடிகளார் உள்ளம், கண்ணகி கோவலர்தம் தொடர்பு உண்டானதும் அவ்வுறுதிப்பாட்டில் சிறிதே நெகிழ்ந்து, அவ்விருவரையும் தம் மக்களாம் உறவுடையவராகக்கொண்டு மகிழத் துடிக்கிறது. கேட்பார்க்கு, 'அவர் எம் மக்கள்' என வாய்விட்டுக் கூறவும் முன்வந்துவிட்டது. "அடிகளீர்! உம்முடன் வரும் இவ்விருவரும் யாவர்?" என வம்பப்பரத்தர்

வினவிய காலத்து, 'என் மக்கள் காணீர்" என உறவு கற்பித்துக் கூறுமளவு அவர் உள்ளம் நெகிழ்ந்துவிட்டது காண்க.

கணவனும் மனைவியுமாகக் கூடி வாழ்வதிலும், அறுசுவை உணவினை ஆக்கி உண்பதிலுமே இன்பம் இருப்பதாக எண்ணுவது அறியாமை; அதுவே துன்பத்தின் தொடக்கமாகும் என்று உறுதியாக நம்பித் துறவுநிலை மேற்கொண்ட உரம் மிக்க உள்ளம் படைத்தவராவர் கவுந்தி அடிகளார்.

*"பிரிதல் துன்பமும், புணர்தல் துன்பமும்,*
*உருவி லாளன் ஒறுக்கும் துன்பமும்,*
*புரிகுழல் மாதர்ப் புணர்ந்தோர்க் கல்லது*
*ஒரு தனி வாழ்க்கை உரவோர்க் கில்லை;*
*பெண்டிரும் உண்டியும் இன்பம் என்று உலகில்*
*கொண்டோர் உறூஉம் கொள்ளாத் துன்பம்.'*

– சிலம். 14: 35–40

என்ற அவர்தம் அறவுரையில் அவர் உள்ளம் புலனாவது அறிக. ஆனால், அடிகளாரின் அத்தகைய உள்ளமும், கண்ணகி கோவலர்தம் கணவன் மனைவி வாழ்க்கையைக் கண்ணுற்றதும், வெறுப்புணர்வு கொள்வதற்கு மாறாக, விரும்பி மகிழத் தலைப்பட்டது. வாழ்க்கை நிலை கெட்டு, பிறந்த நாட்டில் வாழமாட்டாது, காட்டு வழிப் போந்து கொடுமையுற நேர்ந்தமை கண்டு, கலங்கிய கோவலனுக்கு ஆறுதல் உரை கூறிய அடிகளார், அவனைப் போலவே தம் நிலை கெட்டுக் காடு புகுந்த இராமனும் நளனும்,

சென்ற இடத்தில், உடன்வந்த தத்தம் மனைவியரைப் பிரியவிட்டு வருந்த நேரிட்டது போலல்லாமல், மனைவி உடனிருக்கப் பெற்ற நிலையைச் சுட்டிக் காட்டியதோடு, "நீ அனையையும் அல்லை; ஆயிழை தன்னொடு பிரியா வாழ்க்கை பெற்றனை" என, மனைவியொடு கூடியிருக்கும் நிலையைப் பாராட்டவும் செய்தார்.

போன பிறவியில் செய்த புண்ணிய பாவங்கள் அல்லது, இப் பிறவியில் ஒருவர்க்கு வேறு துணை இல்லை. இப் பிறவியில் நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் போனபிற்வியில் செய்த செயல்களின் விளைவாம். ஆகவே, இப் பிறவியில் எவர் துணை நிற்பினும் நிகழவேண்டுவ நிகழ்ந்தே தீரும். அதைத் தடுத்து நிறுத்துவது எவராலும் ஆகாது. ஆகவே, ஒருவர்க்கு ஒருவர் துணை போவது என்பதில் பொருள் இல்லை என உறுதியாக நம்புபவர் அடிகளார். மாங்காட்டு மறையோன் மதுரைக்கு வழிகூறி வருங்கால், "பவகாரணிப் பொய்கையில் மூழ்கி எழின் பழம்பிறப்புணர்வு பெறலாம்" என்று கூறியதற்கு, "இறந்த பிறப்பின் எய்திய வெல்லாம் பிறந்த பிறப்பில் காணாயோ?" என வினவி, மறுத்த அடிகளார் கூற்றில் அந்நம்பிக்கை ஆழமாகப் பதிந்திருப்பது அறிக. அந் நம்பிக்கை, அடிகளார், கண்ணகி கோவலர்களைக் கண்டதும் தளர்ந்துவிடுகிறது. அவர்களுக்குத் துணை நிற்பதால், அவர் துயரை ஒருவாறு தணித்தலும் தவிர்த்தலும் இயலும் என எண்ணி அவர்க்குத்

துணைபோகத் துடித்தார். "போதுவல் யானும்; போதுமின்!" எனக் கூறிப் புறப்பட்டும் விட்டார்.

அருள் நிரம்பிய உள்ளமும், ஐயம் திரிபறக் கற்ற அறிவும் உடையோராகிய மதுரைவாழ் ஆன்றோர்கள் உரைக்கும் அறவுரை கேட்கும் ஆர்வ மிகுதியால், மதுரைக்குச் செல்லும் மனவேட்கை அடிகளார்க்கு நெடுங்காலமாகவே இருந்துவந்தும், ஒருமுறையேனும் சென்று வந்தாரல்லர். கண்ணகிக்குத் துணைபோக வேண்டும் என்ற துடிப்பினும், ஆன்றோர்தம் அறவுரை கேட்க வேண்டும் என்ற துடிப்பு வலிவுடையதா யிருந்திருப்பின், மதுரைக்கு எப்போதோ சென்றிருப்பர். ஆனால், அதுகாறும் செல்லவில்லை. கண்ணகிக்குத் துணை போகவேண்டும் என்ற துடிப்பு வலிவுடையதாக, அவ்வாறு செல்லும் நிலையில் அறவுரை கேட்கும் தம் வேட்கையை நிறைவேற்றிக் கொள்ளும் வாய்ப்பும் உண்டாகும் என்றே எண்ணிச் சென்றார்.

துறவிகள் உடல் இன்பம் அறியாதவர்கள். வெயிலின் வெப்பத்திற்கோ, மழையின் கொடுமைக்கோ, பனியின் கடுமைக்கோ அவர்கள் அஞ்சார். அதற்கு மாறாக, அவற்றின் கொடுமைகளை ஏற்றுத் தாங்கிக்கொள்வதே அவர்க்கு இலக்கணமாம். "உற்ற நோய் நோன்றல் தவத்திற்கு உருவாகும்" என்றார் வள்ளுவர். "மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு விரதங்களான் உண்டி சுருக்கலும், கோடைக்கண் வெயில் நிலை நிற்றலும், மாரியினும்

பனியினும் நீர்நிலை நிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு அவற்றால் தம் உயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்துப் பிற உயிர்களை ஓம்புதல் தவமாம்” என்றார் பரிமேலழகர். தவத்திற்கு ஓதிய இவ்வியல்பில் கவுந்தி அடிகளார் ஒருசிறிதும் மறந்தவரல்லர்; பற்றறத் துறந்த அடிகளாரின் உரம் மிக்க அவ்வுள்ளமும் கண்ணகி பொருட்டு, “இந்நெறிக்கு ஏதம் தருவன யாங்கும் பல உள” என வழிக் கொடுமை எண்ணி அஞ்சத் தலைப்பட்டுவிட்டது. “கடுங்கதிர் வேனில் இக்காரிகை பொறாஅள்’ என வேனில் வெப்பம் கண்டு வெதும்புகிறார். “வெயில் நிறம் பொறாஅ மெல்லியல்’ கண்ணொளி கெடுக்கும் கோடை வெயிலின் கொடுமை கண்டு நடுங்குகிறார். “பயில்பூந் தண்டலைப் படர்குவம் எனினே”, உதிர்ந்த மலர்கள் நிறைந்தமையால் மறைப்புண்டு கிடக்கும் வள்ளிக்கிழங்கு அகழ்ந்த குழிகள் கால்களை இடறி இன்னல் தரும்; மரக் கிளைகளில் பழுத்துத் தொங்கும் பலாக் கனிகள் தலையை முட்டித் துன்புறத்தும்; “வயலுழைப் படர்குவம் எனின்,” வயலில் புரளும் வாளை மீன் காட்சி கண்டு கலங்குவள்” என வழிநடை வருத்தும் எண்ணி வாடுகிறார்.

குணம் என்னும் குன்றேறி நின்றவர்பால் சினங் கணப்பொழுதுதானும் இடம் பெறுதல் கூடாது. சினம் அற்ற நிலையே சிறந்த துறவு ஆகும்.

> *“காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன்*
> *நாமம் கெடக் கெடும் நோய்.”*

எனத் துறவி விடவேண்டிய மூன்றனுள் ஒன்று வெகுளி என வள்ளுவரும் கூறுவது காண்க. தூய துறவு நிலைக்கு எடுத்துக்காட்டாக விளங்கிச் சினம் அறியாச் சிறப்புடையவராய் விளங்கிய அடிகளார், கண்ணகி பழிக்கப் பெறுவது கண்ட அளவே, சினம் சேர்ந்தாரைக் கொல்லும் என்பதை அறவே மறந்து விட்டுக் கடுஞ்சினம் கொண்டுவிட்டார். தம் உடன் வரும் கண்ணகியையும் கோவலனையும் சுட்டிக்காட்டி, 'யார் இவர்?' என்ற வினாவிற்கு, 'என் மக்கள் காணீர்!' எனத் தாம் கூறிய விடைகேட்டு, 'ஒரு தாய் வயிற்றில் பிறந்தோர் கணவனும் மனைவியுமாதல் உண்டோ?" என வம்பப்பரத்தர் எள்ளிநகையாடிக் கூறியது கேட்டுக் கண்ணகி உள்ளம் கலங்கியது காணவே, கவுந்தி அடிகளார், "எள்ளுநர் போலும் இவர் என் பூங்கோதையை" என எண்ணிக் கடுஞ்சினம் மிக்கு. "முள்ளுடைக் காட்டில் முதுநரி ஆகுக!" எனச் சாபம் இட்டது காண்க.

இன்னா செய்தார்க்கும் இனிய செய்தலே சான்றாண்மைக்கு அழகு. இன்னா செய்தார்க்கு அவ்வாறு இனிய செய்யாமை மட்டுமேயல்லாமல் இன்னாதன செய்வதுமாயின், அது சான்றாண்மைக்குச் சான்று பகர்வதாகாது. மாறாக, மாசு கற்பிப்பதாகும்.

> "இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
> என்ன பயத்ததோ சால்பு?"

என்ற வள்ளுவர் வினாவினைக் காண்க. இன்னா செய்வாரை ஒறுக்காது விட்டால், அவர் மேலும்

மேலும் இன்னாதனவே செய்வர்; ஆகவே, அவரை ஒறுத்தல் இன்றியமையாதது என்பது முறையே யாயினும், அவ்வாறு ஒறுத்தலும் அவர் நாண அவர்க்கு நல்லன செய்வதே ஆகும் என்ற உணர்வுவரப் பெற்றவரே உயர்ந்தோராவர்.

*"இன்னா செய்தாரை ஒறுத்தர் அவர் நாண*
*நன்னயம் செய்து விடல்."*

என்ற வள்ளுவர் வழக்காறு காண்க. கவுந்தி அடிகளார் இதை அறிவார். தம் வாழ்க்கையிலும் அதைக் கடைப் பிடிப்பவர்தான். ஆனால், அடிகளார் கண்ணகிமீது கொண்ட பாச உணர்வு அவர் அறிவுத் தெளிவை அழித்துவிட்டது. அந்த அறிவைப் பிறர் சுட்டிக் காட்டி நினைப்பூட்டி உபதேசிக்குமளவு மறந்தவராகிவிட்டார். வம்பப்பரத்தரின் வம்புச் சொற்கள் கேட்டுக் கண்ணகி கலங்கி நடுங்குவது கண்ட அளவே பொறுமை இழந்தார்; பெருஞ்சினம் கொண்டார்; சிறியோர் செய்யும் சிறு செயலைப் பெரியோர் பொருட் படுத்துவது கூடாது என்ற உணர்வை இழந்தார். "குறுநரி ஆகுக!" எனச் சாபம் இட்டுவிட்டார். கவுந்தி இட்ட சாபம் தவந்தருசாபம். ஆகவே, வம்பப்பரத்தர்–குறுநரி ஆகிக் கூக்குரல் எழுப்பக் கேட்டுக் கலங்கிய கண்ணகி, அடிகளாரை அணுகி,

*"நெறியின் நீங்கியோர் நீரல கூறினும்*
*அறியாமை என்று அறியல் வேண்டும்."*

என அவர் மறந்த அறமுறையை நினைவூட்டிப் பின்னர்,

*"செய்தவத்தீர்! நும் திருமுன் பிழைத்தோர்க்கு*
*உய்திக் காலம் உரையீரோ?"*

என வேண்டிக்கொண்ட பின்னரே அடிகளார் சினம் ஒருவாறு தணிந்தமை காண்க.

தீதும் நன்றும் பிறர்தர வருவதில்லை; துன்பத்தில் உழல்வதும் இன்பத்தில் திளைப்பதும் அத்தன்மையவே. இறப்பு, உலகம் காணாப் புதுமை யுடையதன்று; அதுபோன்றதே பிறப்பும். இவையெல்லாம் பேராற்று வெள்ளத்திடை அகப்பட்ட தெப்பம், தனக்கென ஒரு ஓட்டம் இன்றி, அவ்வெள்ள ஓட்டத்தின்வழி ஓடிஓடி அலைவதுபோல், தீதும் நன்றும், இன்பமும் துன்பமும், பிறப்பும் இறப்பும், வாழ்வும் தாழ்வும் முன்னை வினைப்பயத்திற்கேற்பத் தாமே வந்துறுவதல்லது அவரவர் முயற்சியால் வந்துறுவதில; ஆகவே, ஒருவர்தம் உயர்ந்த பெருவாழ்வு கண்டு மகிழ்ந்து அவரைப் பாராட்டுவதோ, ஏனையோர்தம் துன்பச் சுழல் கண்டு வருந்தி அவரை இகழ்வதோ அறிவுடைமை யாகாது என்பது உயர்ந்தோர் கண்ட உண்மைகள்.

*"யாதும் ஊரே; யாவரும் கேளிர்;*
*தீதும் நன்றும் பிறர்தர வாரா;*
*நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன;*
*சாதலும் புதுவ தன்றே; வாழ்தல்*
*இனிதென மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்*
*இன்னா தென்றலும் இலமே; மின்னொடு*
*வானம் தண்துளி தலைஇ யானாது*

*கல்பொருது இரங்கும் மல்லல் பேர் யாற்று*
*நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்*
*முறைவழிப் படூஉம் என்பது திறவோர்*
*காட்சியின் தெளிந்தனம் ஆகலின், மாட்சியிற்*
*பெரியோரை வியத்தலும் இலமே;*
*சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே."*

இவ்வுண்மைகளை உணர்ந்தவர் கவுந்தி அடிகளார். ஆனால், அந்த உணர்வும் கண்ணகி தொடர்பால் அடிகளாரைவிட்டு அகன்று விடுகிறது. கண்ணகிமீது கொண்ட பற்றும் பாசமும் அடிகளார் அறிவுத்தெளிவை அழித்து விடுகின்றன. அதனால், கண்ணகிக்கு உண்டாகியிருக்கும் துயர்நிலை தக்கார் துணை நிற்பின் அகன்றுவிடுக்கூடும் என்று எண்ணினார். அதனால் அவளை ஒப்படைக்கத்தக்க நல்லாரைத் தேடி அலைந்தது அடிகளார் மனம். அந்நிலையில் அடிகளைக் கண்டு வணங்கினாள் மாதரி; மாதரியை முன்பே அறிவார் அடிகளார். அவள்பால் கண்ணகியை ஒப்படைக்கலாமா என்ற எண்ணம் முகிழ்த்தது. ஆனால், ஓர் ஐயம்; கண்ணகியின் துயர் தீர்த்து வாழ்விக்கவல்ல தகுதிகளில் ஒன்றும் குறையிருக்கக் கூடாதே என்று ஏங்கினார். அதனால் மாதரியைப் பல்வேறு நிலைகளில் நின்று ஆராய்ந்து பார்த்தது அடிகளார் அகக்கண். அவள் தீதற்றவள்தானா? நன்றும் தீதும் பகுத்துணர வல்ல மூதறிவு படைத்தவள்தானா? பிறர்க்குச் செய்யும் இன்பம் தனக்குத் துன்பமாம் என்பதால் அது

செய்யாமையும், பிறர்க்குத் துன்பம் செய்வதால் தனக்கு இன்பம் வரும் என்பதால் அது செய்வதும் ஆகிய அறங்கோடியவள் ஆகாது, தனக்கு இன்பமே வருமாயினும், அதுபொருட்டுப் பிறர்க்குத் துன்பம் செய்யாமையும், தனக்குத் துன்பமே வருமாயினும், பிறர்க்கு இன்பமே செய்தலுமாகிய அறக்கடன் ஆற்றுபவள்தானா? பிறர்க்கு இன்பமாவன என அறிந்தவிடத்தும் அது செய்வதால் தனக்கு ஒரு பயனும் இன்மை கருதி, அது செய்யாது விடுக்காது, தனக்கு ஒரு பயனும் இல்லையாயினும் முன் ஓடிப் பிறர்க்கு உதவும் அருள் உள்ளம் உடையவள்தானா என்றெல்லாம் அடுக்கடுக்காகப் பலப்பலவற்றை ஆராயத் தொடங்கி, அத்தனை வகையாலும் அவள் நல்லவள் என அறிந்த பின்னரே, அவள்பால் கண்ணகியை ஒப்படைக்கத் துணிந்தார்.

எத்தகையவரையும் ஆணையிடவும், ஆணைக்கு அடங்காதாரைச் சபித்து ஒழிக்கவும் வல்ல தவம் வரப்பெற்றவர் அடிகளார். அத்தகைய அடிகளார் தாம் ஆணையிடுவது கண்டு மாதரி, கண்ணகியை ஏற்றுக் கொள்ள மறுத்துவிடக் கூடாதே; அவள் மறுப்புக்குத் தம் ஆணை காரணமாக இருந்துவிடக்கூடாதே என்பதால், கண்ணகியை ஏற்றுக்கொள்ளுமாறு ஆணையிடுவதை விடுத்து, உடையார் முன் இல்லார் போல் நின்று அவளை இரந்து வேண்டிக் கொள்கிறார். தாம் ஒப்படைக்கப் போவது யாரோ ஒரு தகுதியற்றவள்

என்பதால் மாதரி மறுத்துவிடக் கூடாதே என்பதால், எடுத்த எடுப்பிலேயே, ஒப்படைக்கப் போகும் கண்ணகியின் ஒப்புயர்வற்ற நிலைமைகளை எடுத்து விளக்கினார். "மண்மகள் அறியா வண்ணச் சீறடிகள்' எனக் கண்ணகியின் கால்களின் பெருமை ஒன்றை மட்டுமே கூறி, காலே அத்துணைச் சிறப்புடையவாயின், அவள் தன் பிற உருவ நலங்களைக் கூறவும் வேண்டுமோ என்ற எண்ணம் எழத்தக்க நிலையில் அறிமுகம் தொடங்கினார். கணவன் நலமே தன் நலம்; கணவன் துன்பமே தன் துன்பமாகக் கருதுவதல்லது தனக்கென ஒரு இன்பமோ, துன்பமோ உணராதவள் என, உள்ளத்தால் உயர்ந்த பண்புடையவள் என்றும் எடுத்துக் கூறினார். கடைசியாக, "மாதரி! என்னை வணங்கினாய் நீ; இவ்வாறு உன்னாலும் வணங்கத்தக்க என்னாலும் வணங்கத்தக்கவள் உன்பால் ஒப்படைக்க இருக்கும் இவள்" எனக் கண்ணகியின் தெய்வத்தன்மை சுட்டிக் காட்டினாலாவது மறுக்காது ஏற்றுக்கொள்ள மாட்டாளா எனத் துடித்தது அடிகளார் உள்ளம்.

அடைக்கலப் பொருள் ஆண்டவனாகவே இருக்கட்டும்; அதனால், தனக்கென்ன பயன் என எண்ணி மறுத்துவிடுவளோ மாதரி என்ற ஐயம் அடிகளார் உள்ளத்தில் எழவே, "மாதரி! இவள் ஒரு பத்தினித்தெய்வம்; இவள்போலும் பத்தினிப் பெண்டிர் வாழும் நாட்டில் வானம் பொய்யாது; வளம் குன்றாது; கோன் முறை கோடாது;

*"வானம் பொய்யாது; வளம் பிழைப்பு அறியாது;*
*நீள்நில வேந்தர் கொற்றம் சிதையாது;*
*பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு!"* - சிலம்பு. 15: 145-147

இவ்வாறு பத்தினிப் பெண்டிர் பெருமை பாராட்டு முகத்தான், அத்தகைய பத்தினித் தெய்வம் உன் மனைக்கே வந்து வாழுமாயின், உனக்கு எத்தனையோ நன்மைகள் வந்துறுமே எனக் கூறாமல் கூறவும் செய்தார்.

கொடுக்கப்படும் பொருள் உயர்ந்ததுதான் என்றாலும், அதைக் கொடுப்போர்தம் பெருமை சிறுமைகளுக்கேற்ப, கொடுக்கப்படும் பொருளின் நிலை உயர்வதும் தாழ்வதும் உண்டு; அவ்வகையிலும் குறையில்லை என்பதை அறிவுறுத்த, கண்ணகி பெருவாழ்வினள்; பத்தினிப் பெருந்தெய்வம் என அவள்பாற்பட்ட பெருமைகளை எடுத்துக் கூறியதோடு, அவளை அடைக்கலப் பொருளாகக் கொடுக்கும் தாம் ஒரு தவமூதாட்டியாகும் எனத் தம் பெருமையினையும் நினைவூட்டினார்.

கொடுப்போர் தவமூதாட்டியாக இருப்பதால் கொடுக்கப்படும் பொருள் உயர்ந்ததாகிவிடுமா என்ற ஐயவுணர்வும் மாதரிக்கு உண்டாகிவிடக் கூடாதே என்ற ஏக்கத்தால், தவத்தோர் தரும் பொருள் தன்னளவில் சிறிதேயாயினும் மிகப் பெரும் பயன் அளிக்கும் என எடுத்துக் கூறினார்.

*"தவத்தோர் அடைக்கலம் தான் சிறிது ஆயினும்,*
*மிகப் பேரின்பம் தரும்."* - சிலம்பு 15: 149-150

என எடுத்துக் கூறியதோடு நில்லாமல், அதை உறுதி செய்யப் பண்டு நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியையும் எடுத்துக்கூறி விளக்கவும் செய்தார்.

இறுதியாக, தவத்தோர் தரும் சிறுபொருள் பெற்றவர்களே அத்துணைப் பெரும் பயன் அடைவராயின், அடைக்கலப் பொருளாகக் கற்புடைத் தெய்வத்தையே கொண்டு செல்லும் நீ எத்துணைப் பெரும்பயன் அடைவையோ எனக் கூறாமல் கூறி, அவள் உள்ளத்தில் ஓர் இன்ப வேட்கை எழவும் செய்தார்.

மாதரி தீதிலள்; முதுமகள்; செவ்வியள்; அளியள் என்பதை அடிகளார் அறிந்திருந்தார்; அதனால் கண்ணகியை ஏற்றுச் செல்லும் அவள் கண்ணகிக்குச் செய்ய வேண்டுவன யாவை என்பதை அறிந்திருப்பாள்; ஆகவே, அவற்றைச் சுட்டிக்காட்ட வேண்டியதில்லை; இதை அடிகளார் அறிவார்; ஆனால், அவர் கண்ணகிபால் கொண்டிருந்த பற்றும் பாசமும், மாதரி தன் கடமைகளை ஒருவேளை மறந்துவிடுவளோ? அதனால் கண்ணகி பேணப்படாமல் விடப்படுவளோ? கணவனுக்கு நலம் தேடித் தருவதல்லது தனக்கு நலம் தேடிக்கொள்ள அறியாதவளாயிற்றே கண்ணகி; அத்தகையாளை மாதரியும் கவனிக்காது விட்டு விட்டால், கண்ணகி நலம்காண மாட்டாளே என்பதால், "கண்ணகியை நீராட்டி விடுவதும், அவள் கண்களுக்கு மைதீட்டி விடுவதும், அவள் கூந்தலில் மலர் சூட்டுவதும், அவள் மேனியைத் தூய மெல்லிய

ஆடையால் அணி செய்வதும் ஆகிய பணிகளை யெல்லாம் யாரோ சில பணிப் பெண்கள்பால் ஒப்படைத்துவிடாது, ஆயத்தார் செய்யவேண்டிய அத்தனை கடமைகளையும் நீயே ஏற்றுக்கொள்ள வேண்டும்; அக் கடமைகளை ஆற்றும் நிலையில், யாரோ ஒருத்திக்கு யாரோ ஒருவர் கடமை யாற்றும் உணர்வினளாகாமல், உன் மகளுக்குத் தாயாம் நிலையில் இருந்து எப்படிப் புனைந்து பேணுவையோ, அத்தகைய தாய் உணர்வோடு கடனாற்றுதல் வேண்டும்; கடனாற்றும் நிலையில், அவளைப்பற்றி நிற்கும் ஊழ்வினைப் பயத்தான் அவளுக்கு இன்னல்கள் பல நேருமாயின், அவ்வின்னல்களை உனக்கு வந்தனவாகக் கொண்டு தாங்கிக்கொள்ளுதல் வேண்டும்" என்றெல்லாம் கூறி ஒப்படைக்கின்றார்:

*"மங்கல மடந்தையை நன்னீ ராட்டிச்*
*செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் தீட்டித்*
*தேமென் கூந்தல் சின்மலர் பெய்து*
*தூமடி உடீஇத் தொல்லோர் சிறப்பின்*
*ஆயமும் காவலும் ஆயிழை தனக்குத்*
*தாயும் நீயே ஆகித் தாங்கு."*

–சிலம்பு 15 : 131–136

இவ்வாறு கண்ணகியை மாதரிபால் ஒப்படைக்கும் வகையில் அடிகளார் கண்ணகி பொருட்டு எந்த அளவு தவ உலகைவிட்டு நில உலக உணர்வுடைய வராகிவிடுகிறார் என்பது காண்க.

மாடலமறையோன், ஆற்றுவீயரங்கத்தில் கோயில் கொண்டிருக்கும் திருமாலின் கிடந்தவண்ணப்

பெருமைகளையும், வேங்கட மலைமீது கோயில் கொண்டிருமக்கும் திருமாலின் நின்றவண்ணப் பெருமைகளையும் கூறியகாலை, அது பொறாது, "காமுறு தெய்வம் கண்டடி பணிய நீ போ" எனப் பிறர் தெய்வ வழிப்பாட்டை வெறுத்தவர் அடிகளார். அத்தகைய அடிகளார் கண்ணகிபொருட்டுக் குறவர் சேரியில் கோயில்கொண்டிருக்கும் சிறு தெய்வமாம் கொற்றவை கோயிலில் தங்கவும், கொற்றவை விழாக் கோலத்தை வெறுப்பின்றிக் காணவும், அவள் பெருமை பாராட்டும் வேட்டுவவரிப் பாடல்களைக் கேட்கவும் செய்தார். அம்மட்டோ!

> "ஒருமூன்று அவித்தோன் ஓதிய ஞானத்
> திருமொழிக்கு அல்லது என் செவியகம் திறவாது."
>
> – சிலம்பு. 10: 194–195

என்ற அடிகளார், கொற்றவை கோயிலில் தங்கியிருந்த கண்ணகியைக் கண்ணுற்ற சாலினி,

> "இவளோ, கொங்கச் செல்வி; குடமலையாட்டி;
> தென் தமிழ்ப் பாவை; செய்த தவக் கொழுந்து;
> ஒருமா மணியாய் உலகிற்கு ஓங்கிய
> திருமாமணி."
>
> – சிலம்பு. 12: 47–50

எனத் தெய்வம் கூற்று உரைத்த புகழ் உரைகளை விரும்பிக் கேட்டுப் பெருமகிழ்வு எய்தினார்.

கண்ணகி புகழை, இவ்வாறு, காதாரக் கேட்டது மட்டுமன்று;

"காமனை வென்றோன் ஆயிரத்தெட்டு
நாமம் அல்லது நவிலாது என் நா."

– சிலம்பு. 10 : 196–197.

என்ற அடிகளார், காம உணர்வுக்கு அடிமைப் பட்டவளான கண்ணகியின் பெருமைகளை வாயாரப் பாராட்டவும் செய்துள்ளார். பாராட்டும் நிலையிலும், கண்ணகியை வெறும் மானிட மகளாகக் கொண்டு பாராட்டாமல், கடவுளாகவே கொண்டு பாராட்டவும் செய்தார். அதுமட்டுமா? கண்ணகியைக் கடவுளாகக் கொண்டு பாராட்டிய அடிகளார், அவளை எண்ணற்ற கடவுளருள் ஒரு கடவுளாகக் கொண்டுவிடாமல், தெய்வம் எனப்படுவாள் கண்ணகி ஒருத்தியே; வேறு தெய்வம் இல்லை எனத் தெய்வத்துள் தெய்வமாகக் கொண்டு பாராட்டியுள்ளார்.

"கற்புக்கடம் பூண்ட இத் தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்."

– சிலம்பு. 15 : 143–144

இது அவர் பாராட்டு.

கவுந்தி அடிகளார், கண்ணகிக்கும் கோவலனுக்கும் வழித் துணையாகவே மதுரை வந்தடைந்தார் என்றாலும், அவர்க்கு, அதுவே சிறப்புடைய காரணமாகாது. மதுரையில் வீற்றிருக்கும் சமண சமயச் சான்றோர்கள்பால் அறம் கேட்கவேண்டும் என்ற வேட்கையும் ஒரு காரணமாகும். அது அடிகளாரின் நெடுநாளைய வேட்கையுமாகும். அதை அவரே கூறியுமுள்ளார்:

*"மறவுரை நீத்த மாசறு கேள்வியர்*
*அறிவுரை கேட்டு ஆங்கு அறிவனை யேத்தத்*
*தென்தமிழ் நாட்டுத் தீதுதீர் மதுரைக்கு*
*ஒன்றிய உள்ளம் உடையேன்; ஆதலின்*
*போதுவல் யானும்; போதுமின்!"* – சிலம்பு 10 : 56–60

இது அவர் கூற்று; ஆனால், அந்த வேட்கையையும் அடிகளார் கண்ணகி பொருட்டு அழித்துக் கொண்டார். கண்ணகியை மாதரிபால் ஒப்படைத்து விட்டுச் சமயச் சான்றோர்களை அடுத்து அறவுரை கேட்கும் அப்பணி மேற்கொண்டிருந்தகாலை, கோவலன் கொலையுண்டதும் அதை அடுத்துக் கண்ணகிக்கு நேர்ந்த இழப்பையும் கேட்டதுமே, அறம் கேட்கும் ஆசையோடு, ஆருயிர் ஆசையையும் கைவிட்டு, உண்ணா நோன்பு மேற்கொண்டு உயிர் விட்டார் அடிகளார். அடிகளார்க்குக் கண்ணகிபால் இருந்த பற்றும் பாசமும் என்னே!

இவ்வாறு முற்றவும் துறந்த ஒரு மூதாட்டியாரைத் தன்பொருட்டு உயிர் துறக்கவும் பண்ணுமளவு பெருமையுற்றவள் கண்ணகிப் பெருந்தெய்வமாவள்!

# 6

# உயர்ந்தோர் ஏத்தும் உரைசால் பத்தினி

"பண்புடையார்ப் பட்டு உண்டு உலகம்" என்றார் வள்ளுவப் பெருந்தகையார்.

*"வழக்கு எனப்படுவது உயர்ந்தோர் மேற்றே;*
*நிகழ்ச்சி அவர்கட்கு ஆகலான"*

என்றார் ஆசிரியர் தொல்காப்பியனார்.

*"தமக்கென முயலா நோன்தாள்,*
*பிறர்க்கென முயலுநர் உண்மையான்,*
*உண்டால் அம்ம! இவ்வுலகம்"*

என்றார் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி.

இவ்வாறு, உலக நிலைபேற்றிற்கே மூலகாரணமாயிருப்பவர் எனப் போற்றப்படும் அவ்வுயர்ந்தோர் யாவர்? யாது அவர் பண்பு? என்பார்க்கு விளங்க விடையளித்துள்ளார். "அறன் அறிந்து மூத்த அறிவுடைமை"; "உற்ற நோய் நீக்கி உறாஅமை முன் காக்கும் பெற்றிமை"; இடிக்கும் துணைமை; சிற்றினம் அஞ்சும் சிறப்புடைமை; செப்பமும் நாணும்

ஒருங்குடைமை; ஒழுக்கமும் வாய்மையும் இழுக்காமை; நகை, ஈகை, இன்சொல், இகழாமை; அடுக்கிய கோடி பெறினும் குன்றுவ செய்யாமை; வழங்குவது உள் வீழ்ந்தக்கண்ணும் பண்பில் தலைப்பிரியாமை; சலம் பற்றிச் சால்பில செய்யாமை; இன்றியமையாச் சிறப்பின ஆயினும் குன்றவருபவிடல்; சீர் அல்ல செய்யாமை; பெருக்கத்துப் பணிவும் சுருக்கத்து உயர்வும்; இகழ்வார்பின் செல்லாமை; ஒட்டார்பின் செலநேரின், அந்நிலையே கெட்டொழிதல்; இளிவரின் வாழா மானம் உடைமை; யார்க்கும் என்றும் பணிதல்; பெருமிதமின்மை; அற்றம் மறைத்தல்; அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை; பிறர் தீமை சொல்லா நலம்; தோல்வி துலையல்லார்கண்ணும் கோடல்; இன்னா செய்தார்க்கும் இனியவே செய்தல்; ஊழி பெயரினும் தாம் பெயராமை; அன்பு உடைமை, ஆன்ற குடிப்பிறத்தல்; பிறர் பழியும் தம் பழியும் நாணுதல்—என உயர்ந்தோர்க்கு வள்ளுவர் வகுக்கும் இலக்கணம் ஒன்றல்ல; இரண்டல்ல; இவைபோல்வன எண்ணற்றனவாம்.

இப் பண்புகள் அனைத்தையும் உடையவரே உயர்ந்தோராவர்; அவற்றுள் ஒன்று குறையினும், உயர்வுடைமை அவரைவிட்டு அப்போதே அகன்று விடும்;

> "குன்றின் அனையாரும் குன்றுவர், குன்றுவ
> குன்றி அனைய செயின்."

- குறள், 965

என்பது காண்க. ஆக, சிறிதளவு தானும் குறை காணாவாறு குணத்தால் நிறைந்த குன்றென விளங்குவோரே உயர்ந்தோராவர் எனின், அவ்வுயர்ந் தோர் பாராட்டைப் பெறவேண்டின், அது பெறுவார் எத்துணைப் பெரியவராதல் வேண்டும்? “உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலை உணர்த்தவே, நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள்” என்கிறார் இளங்கோவடிகளார். அவ்வாறே, உயர்ந்தோர் பலரின் பாட்டைப் பெறும் பெருநிலை பெற்றவள் கண்ணகி. அவளைப் பாராட்டிய அவ்வுயர்ந்தோர் பலரும், ஒவ்வொரு வகையால் உயர்ந்தோராவர். அவர்தம் உயர்வையும், அவர்கள் அவளுக்கு அளித்த பாராட் டினையும் பார்ப்போமாக.

### 1. இளங்கோவடிகளார்

குமரியொடு வடஇமயத்து ஒரு மொழி வைத்து உலகாண்ட, இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனாம் தம் தந்தையோடும், கடலிடையே வாழ்வோராம் கடம்பரை வென்று அழித்த காரணத்தால் கடல் பிறக்கு ஓட்டியவன் என அழைக்கப்பெறும் செங்குட்டுவனாம் தம் தமையனோடும் அரசவைக்கண் வீற்றிருந்தபோது, ஆங்குவந்த நிமித்திகன், தந்தைக்குப் பின்னர், தனியரச வாழ்வு தமக்கே உண்டு எனக் கூறியது கேட்டு முன்னவன் முகம் ஒளி குன்றியது கண்டு, “முன்னோன் இருக்கப் பின்னவன் அரசுரிமையடைவது அரசமுறை யாகாது; அதற்கு விதியே வழி வகுப்பதாயிருப்பினும்,

அவ்விதி முறையை மாற்றி வேந்தர் முறையை வாழச் செய்வேன்; அரசாள் உரிமை எனக்கே உரித்து எனக் கூறும் அவ்விதி யாணையை என் மதியாற்றலால் மாற்றுவேன்; இச் சேரர் அரியணையில் என்றும் அமரேன்: அரியணையில் அமரேன் என்பது மட்டு மன்று; அரச வாழ்வும் வேண்டேன்!" என வஞ்சினம் உரைத்து, உரைத்த அப்பகலே, அரசவையும், அரண் மனையும் விட்டு வெளியேறி, குணவாயிற் கோட்டம் அடைந்து துறவற வாழ்வு மேற்கொண்டு, இளங்கோ வேந்தன் எனும் பெயர் மறைய, இளங்கோவடிகள் எனும் பெயர் வாழப் பெருநிலை பெற்ற பெரியவர் இளங்கோவடிகள் ஆவர்.

தன் குடியினும் பிற குடிகள் தலைசிறந்து வாழ்தல் கூடாது; மாறாக, தன் குடிக்கு அடங்கி ஏவல் புரியும் தாழ்நிலையிலேயே கிடந்துழல வேண்டும் என்ற உணர்வே முனைந்து நிற்க, ஒருவரோடொருவர் ஓயாப் போர் மேற்கொள்ளும் மூவேந்தர் குடியில் வந்தும், தாம் இயற்றிய சிலப்பதிகாரத்தில், அம் மூவேந்தர் பெருமைகளை, முறைமை கொடாது ஒன்றிற்கொன்று வேறுபடா வகையில் ஒத்த உயர்வே காட்டிப் போற்றிப் புகழ்ந்து,

"முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது;
அடிகாள்! நீரே அருளுக!" – சிலம்பு. பதிகம், 61–62.

என்ற சாத்தனார் அவர்களின் உள்ள வேட்கையை உள்ளவாறு நிறைவேற்றித் தந்ததோடு, சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லாரால், "இக்காப்பியம்

செய்தவர் விழைவு வெறுப்பற்ற சேர முனியாகும்" எனச் சிறப்பிக்கவும் பெற்றவர் இளங்கோவடிகளாவர்.

வேந்தர்களையும் வேந்தர்களுக்கு நிகரான வேளிர் குலத் தலைவர்களையும் பாராட்டிப் பாக்கள் புனைவதே வழக்கமாக வந்த காலத்தில் முதன் முதலான, மன்னர்க்கு அடங்கிய ஒரு குடிமகளைப் பற்றிய ஒரு பெருங்காப்பியமே பாடிய மாண்புமிகு மக்கட் புலவராவர் இளங்கோவடிகளார்.

இறவாப் பேரின்பம் பயப்பது துறவறம் ஒன்றே என்பதை உயிர்க்கொள்கையாகக் கொண்ட சமயத்தவ ராய்த் துறவற நெறியை நனி இளமைப் பருவத்திலேயே மேற்கொண்ட இளங்கோவடிகளார் உள்ளத்தில் உயர்ந்த ஓர் இடத்தை, இல்லற நிலையினளாய் அதிலும், கணவன் அன்பை முழுமையும் பெறத் தவறிய இல்லறத்தவளாய தன்னால் பெற முடிந்தது என்றால், அது கண்ணகிக்குப் பெறற்கரிய பெருஞ் சிறப்பாம் அன்றோ?

சிலப்பதிகாரம் பாட முன்வந்த இளங்கோவடி களார், காப்பியத் தலைவியாகக் கண்ணகியையே கொண்டு, அக்காப்பியத்துள் வரும் ஏனையோர் அனைவரினும் நனிமிக உயர்ந்தவளாகவே படைத் துள்ளார். கண்ணகியையும் அவள் கணவன் கோவ லனையும் அறிமுகப்படுத்தும் மங்கல வாழ்த்துப் பாடலாம் முதற் காதையில் கண்ணகியைப் புகழ் ஏணியின் உச்சிக்கே கொண்டு சென்று நிறுத்தியுள்ளார்.

கவிக் கூற்றாகக் கண்ணகியைக் குறிப்பிடும் போதெல்லாம், "சாலி ஒருமீன் தகையாள்." 'அருந்ததி அன்னாள்," என்றும், "உரைசால் பத்தினி," "பொருவறு பத்தினி," "திருமா பத்தினி" என்றும் அவள் கற்பு மேம்பாடு தோன்றவும், "மாசில் கற்பின் மனைவி," "வடுநீங்கு சிறப்பின் தன்மனை," "மங்கல மடந்தை," என்று அவள் மனைமாட்சியின் மாண்பு மணக்கவும்,

"கடுங்கதிர் வெம்மையின் காதலன் தனக்கு
நடுங்குதுயர் எய்தி நாப்புலர வாடித்
தன்துயர் காணாத் தகைசால் பூங்கொடி."

– சிலம்பு. 15: 139–141

எனத் தன்னைக் காத்துக் கொள்வதினும் தன்னைக் கொண்டானைப் பேணும் தகைமை தோன்றவும் குறிப்பிட்டுப் பாராட்டிச் சென்றுள்ளார்.

கடுங்கதிர் வேனிற்போதில் பாலைப் படுவழியில் நடந்து வந்ததால் கண்ணகியின் கால் கொப்புளித்த கொடுமை கண்டு, இளங்கொடிபோலும் இவள் வண்ணச் சீறடியின் மென்மையை மண்மகள் அறிந்திலளே,

"என்னொடு போந்த இளங்கொடி நங்கைதன்
வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்."

– சிலம்பு. 15 : 137–138

என மண்மகளை நொந்து கொள்கிறார்.

கணவனோடிருந்து மனையறம் நடத்தமாட்டாமை யால் பெற்ற மனக்கலக்கத்தால் தன்னை ஒப்பனை

செய்து கொள்ளவோ, வெண் திங்களின் தண்ணொளி கண்டு மனம் களிக்கவோ விரும்பாத கண்ணகி, வேனிற் காலத்துத் திங்கள் ஒளிசொரியவும், மலயத் தென்றல் மெல்லென வந்து வீசவும் பொறாது நடுங்கும் கொடுமை கண்டு தம் உள்ளம் பெருமூச்செறிந்து அடங்குவதை, "நிலமகள் அயா உயிர்த்து அடங்கிய பின்னர்" என நிலமகள் மீது ஏற்றிக் கூறுமுகத்தான் அமைதிகாண முயன்றுள்ளார் இளங்கோவடிகளார்..

அம்மட்டோ! தன் கணவன் உயிர் போக்கித் தன்னைக் கைம்பெண்ணாக்கப் போகும் மாநகராகும் அம்மதுரைமாநகர் என்பதைக் கண்ணகி அறியாள் எனினும், அதைத் தாம் அறிந்துகொண்ட காரணத் தால், அஃதறியாது அம் மாநகருள் அடியிடும் அவள் நிலைக்கு இரங்கித் தம் கண்கள் நீர்மல்க, அக் கண்ணீரை அவள் காணின் கலங்குவளே என்பதால், அக்கண்ணீர் புலப்படாவாறு தம்மேனியைத் துவராடையால் போர்த்திக்கொள்ளும் அடிகளார், தம் செயலை,

*"வையை என்ற பொய்யாக் குலக்கொடி,*
*தையற்கு உறுவது தான் அறிந்தனள் போல்*
*புண்ணிய நறுமலர் ஆடை போர்த்துக்*
*கண்ணிறை நெடுநீர் கரந்தனள் அடக்கிப்,*
*புனல்யாறு அன்று இது, பூம்புனல் யாறு என."*

– சிலம்பு. 13 : 170–174

வையை ஆற்றின்மீது ஏற்றிக் கூறியுள்ளார்.

## 2. சீத்தலைச் சாத்தனார்

மதுரையில் இடம்பெற்ற கடைச் சங்கத்தில் இருந்து, முத்தமிழ் வளர்த்த முதுபெரும் புலவர்களுள், கபிலர் பரணர் நக்கீரர் முதலாம் பெரும் புலவர் வரிசையுள் வைத்து மதிக்கத்தக்கவர் சீத்தலைச் சாத்தனார்.

கண்ணகி தேவியின் வரலாற்றைச் சேரன் செங்குட்டுவனுக்கு விளங்க உரைத்து, அவளுக்குக் கற்கோயில் அமையக் காரணமாயிருந்ததோடு, அவள் வரலாற்றை இளங்கோவடிகளார்க்கும் உரைத்து, அவளுக்கு அழியாக் கலைக்கோயில் அமையவும் காரணமாயிருந்தவர் நம் சாத்தனார்.

> "யாம் அறிந்த புலவரிலே கம்பனைப் போல்
> வள்ளுவர் போல் இளங்கோவைப் போல்
> பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை."

எனப் பாராட்டப் பெறும் புலவர் பெருமானாகிய இளங்கோவடிகளாரால் "தண்டமிழ்ச் சாத்தன்", "தண்டமிழ் ஆசான் சாத்தன்", "நன்னூற் புலவன்" என வாயார வாழ்த்திப் பாராட்டப்பெறும் பெரும் புலவர் நம் சாத்தனார்.

கண்ணகி வரலாற்றின் தொடர் நிகழ்ச்சிகளாகிய மாதவி துறவு, மணிமேகலை துறவுகளைக் காப்பியப் பொருளாகக் கொண்ட மணிமேகலை பாடிச் சிலப்பதி காரத்திற்குத் துணை நூல் கண்டவர் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்.

கண்ணகி வரலாறு பாடிய இளங்கோவடிகளார் கண்ணகியை நேரில் கண்டவரோ, அவர் வரலாற்றை நேரில் அறிந்தவரோ அல்லர். அவருக்குக் கிட்டாத அப்பேறு, நம் சாத்தனாருக்கு வாய்த்தது. கண்ணகியின் தெய்வத் திருவுருவை நேரில் காணவும், அவள் முன் பணிந்த நிலையில் நின்று, மதுரை மாதெய்வம் அவள் பழம்பிறப்பின் வரலாற்றை எடுத்துரைத்ததைக் கேட்கவும் பேறுபெற்றவர் நம் சாத்தனார்.

கற்புடை மகளிரின் மாண்பினைப் பாடற் பொருளாகக் கொண்டு பெருங்காப்பியம் செய்ததோடு, அவர் பெருமை பாடும் வள்ளுவப் பெருந்தகையாரின் பொருள் மொழி ஒன்றைத்,

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்ற அப்
பொய்யில் புலவன் பொருளுரை."

எனத் தம் பாவிடை வைத்துப் பொன்னேபோல் போற்றிய பெரியவர் நம் சாத்தனார்.

இவ்வுளவு பெருமைக்கு உரியவராகிய சாத்தனா ராலும் கண்ணகி பாராட்டப் பெற்றுள்ளாள். "வானம் துளங்கிய போதும் மண் கம்பமாகிய போதும் நிலை குலைந்து போகாத நான்மாடக் கூடலைப் பெரு நெருப்புண்ணப் பண்ணியவள் கண்ணகி; ஆனால், அதுகொண்டு பல்லோர் பழியுரை மேற்கொள்வதற்கு மாறாகப் புகழ்ந்துரைக்கப் பெற்ற பத்தினிப் பெருந் தெய்வமாவள்" எனச், சாத்தனார் அவளைப் பாராட்டி

யதை உடனிருந்து கேட்ட இளங்கோவடிகளார், அதைத் தம் பாவிடை வைத்துப் போற்றியுள்ளார்.

*"நிலைகெழு கூடல் நீள் எரியூட்டிய*
*பலர்புகழ் பத்தினி யாகும் இவள்என."*

– சிலம்பு. பதிகம் : 35–36

சாத்தனார் பாடப் புகுந்தது மாதவி துறவும் மணிமேகலை துறவுமே யாயினும், அவர் துறவுக்குக் காரணமாயிருந்தவள் கண்ணகியே யாதலின், தம் காப்பியத்தில் இயலும் இடமெல்லாம் அவளை ஏற்றிப் போற்றியுள்ளார். தம காப்பியத் தலைவியருள் ஒருத்தியாகிய மாதவி வாயிலாக, "கணவன் இறக்க உடன் உயிர் இழப்போரும், உயிர் தானே பிரியாதாயின் உடன்கட்டையேறி உயிரிழப்போரும், இம்மையில் இழந்த உடனுயிர் வாழ்க்கையை மறுமையிலானும் பெறுவான் வேண்டிக் கைம்மை நோன்பு மேற் கொண்டு உடம்பு அடுவோரும் உயர்ந்தோர் போற்றும் பத்தினிப் பெண்டிரேயாயினும், எம் ஆயிழையாம் கண்ணகி நல்லாள் அவரினும் உயர்ந்தவளாவள். கணவனுக்கு உற்ற கடுந்துயர் கண்டு கடுஞ்சினம் கொண்டு அக்கொடுமை புரிந்த கோவேந்தைக் குற்றம் உணர்ந்து உயிர் துறக்கப் பண்ணியதோடு அமையாது, அக்கோவேந்தன் கூடல் மாநகரையும் எரியூட்டிக் கணவன் பழி தீர்த்த மாபெரும் பத்தினியாவள்" எனப் போற்றிப் புகழப் பண்ணிப் பாராட்டியுள்ளார்:

*"காதலர் இறப்பின் கனைஎரி பொத்தி*
*ஊதுலைக் குருகின் உயிர்த்து அகத்து அடங்காது,*

*இன்னுயிர் ஈவர்; ஈயா ராயின்,*
*நன்னீர்ப் பொய்கையின் நளியெரி புகுவர்;*
*நளியெரி புகாஅ ராயின், அன்பரோடு*
*உடனுறை வாழ்க்கைக்கு நோற்று உடம்பு அடுவர்,*
*பத்தினிப் பெண்டிர்; பரப்புநீர் ஞாலத்து*
*அத்திறத்தாளும் அல்லள் எம் ஆயிழை;*
*கணவற்குற்ற கடுந்துயர் பொறாஅள்,*
*மணமலி கூந்தல் சிறுபுறம் புதைப்பக்*
*கண்ணீர் ஆடிய கதிரிள வனமுலை*
*திண்ணிதின் திருகித் தீயழல் பொத்திக்*
*காவலன் பேரூர் கனையெரி மூட்டிய*
*மாபெரும் பத்தினி."*
– மணி. 2 : 42–55.

அம்மட்டோ! தம் காப்பியத்தின் உரிமைமிகு காப்பியத் தலைவியாம் மணிமேகலை வாயிலாக, "காதலன்பால் கொண்டுள்ள பிரிவறியாப் பேரன்பால் அவனோடு உயிரிழப்பதும் செய்யாது, இருந்து கைம்மை நோன்பு மேற்கொள்ளவும் கருதாது, கணவன்மீது காட்டிய பழி துடைத்துப் பெருமை செய்வதே கற்புடை மகளிரின் நீங்காக் கடமையாம் எனக் கொண்டு, அக்கடமையைக் குறைவற முடித்த கற்புடைத் தெய்வமே!" எனப் போற்றிக் கண் கலங்கியுள்ளார்:

*"அற்புக்கடன் நில்லாது, நற்றவம் படராது*
*கற்புக்கடன் பூண்டு நுங்கடன் முடித்தது*
*அருளல் வேண்டும்."*
– மணி. 26 : 7–9.

இவ்வாறு மாதவி வாயிலாகவும், அவள் மகள் மணிமேகலை வாயிலாகவும் பாராட்டியும் புலவர் மனம் நிறைவுறாது போகவே, "ஒரு பெரும் பத்தினிக்

கடவுளே" என அவள் தெய்வத் திருவுருவைக் கண்ணெதிர் கண்டும், "சிமையம் ஓங்கிய இமையமால் வரைத் தெய்வக்கல்" என, அவள் தெய்வத் திருமேனி இடப் பெற்ற கல்லுருவைக் கண்டும் கைகூப்பித் தொழுது பாராட்டியுள்ளார்.

## 3. மாடலன்

சோணாட்டுத் தலைச்செங்காடு எனும் ஊரினனாகிய மாடலன், கண்ணகியும் கோவலனும் பிறப்பதற்குமுன்பே பிறந்து, கண்ணகிக்குச் செங்குட்டு வன் எடுத்த விழா நிகழ்ச்சிக்குப் பின்னரும் வாழ்ந்திருந்த முதுமையுடையோனாவான்.

சேர சோழ பாண்டிய நாடுகளின் அரசியல் நிகழ்ச்சிகளைப் பிழையற உணர்ந்திருந்தவன் இம் மாடலன்.

செங்குட்டுவன் சினம் தணிந்து சிறந்தது பயிற்ற அவனுக்கு அறம் உரைத்தவன் இம் மாடலன்.

செங்குட்டுவனோடிருந்து கண்ணகி வரலாற்றின் பெரும் பகுதியை அவனறியப் பண்ணியதோடு அவனுக்கு அறம் உரைத்தும் அவனோடு நெடுந் தொடர்பு கொண்டிருந்த காரணத்தால் மாடலனை நன்கு உணர்ந்திருந்த இளங்கோவடிகளார், அவனை, 'நான்மறைகளை முற்றக் கற்றவன்; நல்லனவே விரும்பும் ஒழுக்கத்தில் உரவோன்; நான்மறை கற்ற நல்லோர்க்கு முதல்வன்; மலைவலம் வருதல், குமரியாடல் போல் வனவற்றை ஒழுக்காறாக் கொள்ளும் உயர்வோன்;

தமர்சூழ வாழும் தலையாய அன்புடையான்' என்றெல்லாம் பாராட்டியுள்ளார்.

"தாழ்நீர் வேலித் தலைச் செங்கானத்து
நான்மறை முற்றிய நலம்புரி கொள்கை
மாமறை முதல்வன், மாடலன் என்போன்
மாதவ முனிவன் மலைவலம் கொண்டு
குமரியம் பெருந்துறை கொள்கையில் படிந்து
தமர்முதல் பெயர்வோன்."

– சிலம்பு. 15: 11–16.

கண்ணகி வாழ்க்கையோடு தொடர்புடையவ ராகிய மாதவியையும், அவள் மனையற மாண்பையும், அவளை ஈன்ற தாய், அவள் கணவனை ஈன்ற தாய் ஆகிய இருபெரும் தாயரையும், அவர்தம் தலையாய அன்பையும், அவள் உயிர்த்தோழி தேவந்தியையும், அவள் தெய்வத் தன்மையினையும், அவளுக்கு வழித்துணை வந்த கவுந்தியையும், அவர்தம் துறவுக் கோலத் தூய்மையினையும், அவளுக்கு அடைக்கலம் அளித்த மாதரியையும், அவள் தூய அன்பையும் அறிந்தவன் மாடலன்.

இவ்வளவு பெருமைக்கும் உரிய மாடல மறையோன், கண்ணகியைத் "திருத்தகு மாமணிக் கொழுந்து" எனப் போற்றிப் புகழ்ந்துள்ளான்.

மாதவியின் மனையற மாண்பையும், கவுந்தியின் துறவறத் தூய்மையையும், தேவந்தியின் தெய்வத் தொடர்பையும், மாதரியின் மாசிலா மனத்தையும் உணர்ந்த ஒருவரால், கண்ணகி பாராட்டப்

பெறுவாளாயின், அது, அவள் பெருமைக்குப் பெரியதொரு சான்றாகு மல்லவா!

## 4. தேவராட்டி

ஐயை கோட்டத்துத் தேவராட்டி, ஆறலைத்தும் ஆனிரை கவர்ந்தும் உயிர்வாழும் கொடியோராகிய எயினர் குடியில் வந்தவளேயாயினும், அவள் கண்ணகியைப் பாராட்டுவதில் பெரிய சிறப்பு ஒன்றும் உளது.

கண்ணகியை மாதவி பாராட்டினாள்; தேவந்தி பாராட்டினாள்; இவர் போல்வார் எண்ணற்றவர் பாராட்டியுள்ளார்கள் எனினும், அவரெல்லாம் மக்கள் வடிவில் இருந்தே பாராட்டியவராவர். கண்ணகியைத் தெய்வவடிவில் இருந்து பாராட்டியவள், ஐயை கோட்டத்துத் தேவராட்டி ஒருத்தியே. ஆகவே, அவள் கூறிய பாராட்டு, ஏனையோர் கூறும் பாராட்டுரை களுக்கில்லாத தனிச் சிறப்புடையதாகும்.

ஐயை கோட்டத்தில், காட்டுக் கொடுவழியைக் கடந்து வந்த காரணத்தால் கால்கடுக்கக் கணவனோ டிருந்த கண்ணகியைக் கண்ட அளவே, தேவராட்டி, "இவள், கொங்குநாட்டுக் கொற்றவை; குடநாட்டில் அரசோச்சும் அன்னை; தென் தமிழ் நாடாம் பாண்டி நாட்டுப் பெருந்தெய்வம்; தவத்தின் திருவுரு; ஒப்புயர் வற்ற முழு மாணிக்கம் போல், உலகில், பெண்ணுருவம் தாங்கிவந்த திருமணி" எனப் பாராட்டுமுகத்தான்,

அவள் வருங்கால வாழ்வையே வடித்தெடுத்துக் காட்டிவிட்டாள்.

"இணைமலர்ச் சீறடி இணைந்தனள் வருந்திக்
கணவனோ டிருந்த மணமலி கூந்தலை
இவளோ, கொங்கச் செல்வி; குடமலையாட்டி;
தென்தமிழ்ப் பாவை; செய்த தவக்கொழுந்து
ஒருமா மணியாய் உலகிற்கு ஓங்கிய
திருமா மணி எனத் தெய்வம்உற்று உரைப்ப."

– சிலம்பு. 12: 45–50.

## 5. மதுரை மக்கள்

பாண்டியர் பேரரசு, தன் நாட்டு அந்தணர் ஓதும் நான்மறை ஓசை கேட்டுப் பழகியதே யன்றி, ஆட்சி நலமின்மையால் தனக்கு ஒரு குறையுண்டாக, அதை ஆட்சியாளர்க்கு அறிவிப்பான் வேண்டிக் குடிமகன் ஒருவன், அடிக்கும் ஆராய்ச்சி மணியோசையை ஒரு போதும் கேட்டு அறியாது; தமக்கு அடிபணிய மறுத்த காரணத்தால் தம்மால் வென்றடக்கப்பட்ட பகை வேந்தர்கள் கூறும் பழியுரை கேட்டுப் பழகியதே யல்லது, தாம் கொடுங்கோலராக, அக்கொடுமை பொறாது தம் குடிகள் பழிதூற்றியதை ஒருபோதும் கேட்டறியாது என மதுராபதித் தெய்வம் பாராட்டும் பெருமைக்குரிய ஒரு பேரரசின் தலைநகர் மதுரை. அப்பேரரசு அத்துணை நலம் உடையதாயின், அப் பேரரசின் தலைநகர் மக்கள்பாலும் அந்நலம் அமைந்து கிடக்கும் என்பது சொல்லாதே அமையும். அரசன் எவ்வழி, அவ்வழி குடிகள் என்பதன்றோ உலகியல்!

இவ்வாறு வழி வழியாக நல்லரசே நடாத்தும் ஒரு பேரரசின்கீழ் வாழும் பேறு பெற்றோராகிய மதுரை மாநகரத்து மக்கள், கணவன் கொலையுண்டான் எனக் கேட்டுக் கடுஞ்சினம் கொண்டு, கையிற் சிலம்பேந்திக் காவலன் கோயில் நோக்கி விரையும், கண்ணகியைக் கண்ட அளவே, 'வழுதியர் செங்கோல் வளையாது என்பரே! அந்தோ! அது வளைந்துவிட்டதே! பாண்டியர் வேந்தர்க்கும் வேந்தராவர்; உலகெலாம் நிழல்செய்யும் ஒப்பற்ற மதிக்குடையர்; வரலாற்றில் மிக்கவர் என்பரே! அந்தோ! பாண்டியர்தம் அப்பெருங் கொற்றம் ஒரு பெண்முன் உருக்குலைந்து போயிற்றே! பாண்டியர் பகை நாட்டு மன்னர்க்குக் கொடியவரே எனினும், தன் நாட்டு மக்கட்குத் தண்ணளி புரிபவர் என்பரே; அந்தோ! அவர் குடைநிழலும் கொடுமை யுடையதாகி விட்டதே! இவ்வளவுக்கும் காரணமாய்க் கையில் சிலம்பேந்தி, கொடுங்கோலன் குடிகளாகி விட்ட நம்மை அழிப்பான் வேண்டி, இம்மாநகரத்து வீதிகளில் உலாவரும் இக்காரிகை நல்லாள், கடவுளும் வணங்கும் கடவுளாவாள்; உலகம் கண்டறியா ஒரு புதுத்தெய்வமாவள்" எனப் போற்றி அஞ்சிப் பணிவாராயினர்.

*"அல்லல் உற்று ஆற்றாது அழுவாளைக் கண்டு ஏங்கி,*
*மல்லல் மதுரையார் எல்லாரும் தாம்மயங்கிக்,–*

*களையாத துன்பம் இக் காரிகைக்குக் காட்டி*
*வளையாத செங்கோல் வளைந்தது! இது என்கொல்?*

*மன்னவர் மன்னன், மதிக்குடை வாள் வேந்தன்,*
*தென்னவன் கொற்றம் சிதைந்தது! இது என்கொல்?*

*மண்குளிரச் செய்யும் மறவேல் நெடுந்தகை*
*தண்குடை, வெம்மை விளைத்தது! இது என்கொல்?*

*செம்பொன் சிலம்புஒன்று கைஏந்தி நம்பொருட்டால்*
*வம்பப் பெரும் தெய்வம் வந்தது! இது என்கொல்?"*

– சிலம்பு. 19: 15–24

எந்நாட்டுக் காவலனின் உயிர்குடிக்கத் துணிந்தாளோ அக் காவலன் ஆட்சிக் கீழ் வாழும் மக்களால், எந்த நகரத்தை எரியிட்டு அழிக்கத் துணிந்தாளோ அந்நகரத்து மக்களால், எந்த மக்கள் அவள் மூட்டும் சினத்தீயால் அழியப்போகிறார்களோ அந்த மக்களால் வணங்கி வழிபடப்பெற்ற பெரியோள் ஆவள் நம் கண்ணகி நல்லாள்.

## 6 குன்றக்குரவர்

வஞ்சி மாநகரத்தார் ஒருபகல் போதில் சென்று திரும்பலாம் தொலைவினதாய்க் கொடுங்கோளூரை அடுத்து ஓடும் பேரியாற்றுக்கு அயலதாகிய செங்குன்று என்னும் மலைவாழ் மக்களாகிய குறவர்க்குக் கண்ணகி வரலாற்றோடு தொடர்புடைய — பிறர் எவர்க்கும் கிட்டாத — ஒரு பேறு கிடைத்திருந்தது.

கண்ணகியின் மணவிழாக் கோலம் கண்டு களித்திருப்பார் சிலர்; கணவன் கணிகையர் காதலனாகக் கலங்கிய கண்ணகியைக் கண்டு கண்ணீர் சொரிந்திருப்பார் சிலர். இழந்த உடனுறை வாழ்வை

மீண்டும் பெறலாம் எனும் பெரு நம்பிக்கையோடு மதுரை புகும் அம்மங்கை நல்லாளைக் கண்டிருப்பர் சிலர். கணவன் கொலையுண்டான் எனக் கேட்டுக் காவலனைப் பழிதீர்க்கக் கையிற் சிலம்பேந்தி விரையும் பத்தினிக் கோலம் கண்டு கைகூப்பியிருப்பர் சிலர். ஆனால், விண்ணவர், இம்மண்ணிடை இழிந்து, மாண்ட கணவனைக் காட்டி, அவளை, அவள் உடலோடும் வானவூர்தியிற் கொண்டு சென்ற வியத்தகு காட்சியை, அவருள் எவரும் கண்டவர் அல்லர்; அதைக் கண்ணெதிரே கண்டவர், குன்றக் குறவர்.

அம்மட்டோ! "கற்புக் கடம்பூண்ட இத்தெய்வம் அல்லது பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்" எனப் பலராலும் ஒருமுகமாகப் போற்றி வணங்கப் படும் கண்ணகிக்குக் கோயிலும் வழிபாடும் அமையவும், அவள் வரலாற்றைப் பலநூறு ஆண்டு கழித்து வாழ்வோராகிய. நாமும் அறிந்து பாராட்டத் தக்க பெருங்காப்பியம் அமையவும் முழுமுதற் காரணமாய் இருந்தவர் குன்றக் குறவரே! கண்ணகி, கணவனோடு கூடி, வானவர் போற்ற வானகம் புக்கதைக் கண்ட குறவர், அதை மலைவளம் காணவந்த செங்குட்டுவனுக்கும், அவனுடன் வந்த இளங்கோ அடிகட்கும் கூறாதிருப்பரேல், குட்டுவனும் அவளுக்குக் கோயில் எடுத்திருக்க மாட்டான்; இளங்கோவடிகளும் சிலப்பதிகாரம் செய்திருக்க மாட்டார்.

இவ்வாறு, கண்ணகி தேவியின் கற்கோயிலுக்கும், காவியக் கோயிலுக்கும் காரணமாகித் தமிழ் இனத்தின்

பாராட்டுக்குரியவராகிவிட்ட அக்குன்றக் குறவர் கண்ணகியைப் "பலர்தொழு பத்தினி" எனப் பெயர் சூட்டிப் பாராட்டுவதோடு,

*"பாடுகம்வா வாழி தோழி! யாம் பாடுகம்;*
*பாடுகம்வா வாழி தோழி! யாம் பாடுகம்;*
*கோமுறை நீங்கக் கொடிமாடக் கூடலைத்*
*தீமுறை செய்தாளை ஏத்தியாம் பாடுகம்!"*

எனப் பாடிப் பரவுவதும் செய்வாராயினர்.

## 7. கோவலன்

கண்ணகியைப் புலவர்கள் பாராட்டியிருக்கலாம்; அவர்கள், அவள்மீது ஒரு பெரும் காப்பியமே கூடப் பாடியிருக்கலாம்; துறவற நெறிபுக்க தூயோர்கள் அவளைத் துதிபாடியிருக்கலாம்; அவள்போலும் மங்கையர் நல்லார் பலர் பாராட்டி மாட்சியுறச் செய்திருக்கலாம்; நெய்தல் வளம் தலைமயங்கும் புகார் நகரத்துப் பெருங்குடிச் செல்வர், பாலை நிலத்து மறவர், முல்லைக் காட்டு ஆயர், மருதவளம் சான்ற மதுரை மாநகர மக்கள், மலைநாட்டுக் குறவர் என ஐந்நிலத்து மக்களும் அவளை அணங்கெனக் கொண்டு பரவி யிருக்கலாம்; நானிலத்து மக்களே போல் நாடாளும் முடிமன்னர்களும் அவள் அடி பணிந்திருக்கலாம்; கன்னித் தமிழகத்து மட்டுமே யல்லாமல், கடல் கடந்த நாட்டுக் காவலர்களும் அவளைக் கடவுளாக்கி யிருக்கலாம். என்றாலும், கொண்ட கணவனால், அவள்

கைவிடப் பட்டவள்தானே; அவன் பாராட்டைப் பெறத் தவறி யவள்தானே?

> "தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்,
> இனிது எனக் கணவன் உண்டலின்,
> நுண்ணதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே."

என்பதுபோல், ஓர் உயர்குல மகளுக்கு உண்மையான பாராட்டு, அவள் கணவன் தரும் பாராட்டு ஒன்று மட்டுமே யாகும். அப் பாராட்டைப் பெறத்தவறிய ஒருத்தி உலகத்தார் அனைவராலும் பாராட்டத்தக்க பெருநிலை பெற்றாலும் பயன் இல்லை. ஆகவே, கோவலனால் கைவிடப்பட்டவளாகவே, கண்ணகி பாராட்டுக்கு உரியவளாகாள் எனக் கூறலாம் என்றால், அதற்கு இடமில்லை. அவள் கணவன், அவளை அளவிறந்து பாராட்டியுள்ளான். அவள் புறக் கோலத்தை மட்டுமேயல்லாமல், அவள் அகநலனையும் அறிந்து பாராட்டியுள்ளான்.

நன்று. கண்ணகியைக் கோவலன் பாராட்டி யுள்ளான் என்றே கொண்டாலும், அது அவளுக்குச் சிறப்பளிப்பதாகாது. கணவன் பாராட்டு காரிகை யர்க்குப் பெருமை தருவது, அக் கணவன் நாட்டவர் போற்றும் நல்லவனாகிய வழியேயாம். அங்ஙனமன்றி, அவன் ஊரும் உலகமும் ஒரு சேரப் பழிக்கும் ஒழுக்கக் கேடனாயின், அத்தகைய கணவன் பாராட்டு ஒருத்திக்கு உயர்வளிப்பதினும், இழிவே தரும். கோவலன் அத்தகைய பழிமிகு வாழ்வுடையவ னாதலின், அவன் பாராட்டு அவளுக்குப் புகழ் அளிப்ப

தாகாது; மாறாகப் பொன்றாப் பழிதருவதே யாம் என்று கூறலாமோ எனின், அக்குறைபாட்டிற்கும் இடமில்லை.

> "நகையாடு ஆயத்து நன்மொழி திளைத்துக்
> குரல்வாய்ப் பாணரொடு நகரப் பரத்தரொடு
> திரிதரு மரபின் கோவலன் போல
> இளிவாய் வண்டினொடு இன்னிள வேனிலொடு
> மலயமாருதம் திரிதரு மறுகு."
>
> – சிலம்பு. 5. 199–203.

எனக் கோவலனைத் தென்றலுக்கு உவமை காட்டிக் கூறுமுகத்தான், கோவலனுடைய பரத்தைமையொழுக்கத்தை, இளங்கோவடிகளார் வன்மையாகக் கண்டித்துள்ளார் என்பது உண்மை. ஆனால், உயிரோடு உடன் தோன்றி, அது அழியுங்காறும் உடன் இருப்பதாகிய உயர்ந்த காதல் உணர்வுடையராகாது, கணப்போதில் தோன்றிக் கணப்போதில் அழிவதாகிய காமவெறி பிடித்தலையும் கழிகாமுக இளைஞர்கள், ஆடவர்க்கு அவர் விரும்பும் இளம் பரத்தையர்களைத் தேர்ந்து கொண்டு வந்து தரும் பாணரோடும் பரத்தரோடும் கூடிக் காமவேட்டையாடுதலே கருத்தாக நகரப் பெருந்தெருவுகளில் திரிவது பழிக்கத்தக்க பெருங் குற்றமே யெனினும், அதுவும் ஒருவகை ஒழுக்கமே என்ற உணர்வு நிலவிய காலத்தில், அவ்வுணர்வு வேர் ஊன்றிக்கிடந்த ஒரு குலத்தில் பிறந்தவன் கோவலன் ஆதலின், அது, அவன் குற்றமன்று; அவன், அக் குலத்தில் பிறந்த குற்றம். ஆகவே, பழிக்கவேண்டுவது, அவன் குலமேயல்லது, அவன் அல்லன்.

பிறந்த குடியின் பண்பு தன்னையும் பற்றிக் கொண்ட காரணத்தால், மேற்கொண்ட பரத்தையர் தொடர்பையும், பழியுடையது எனப் பிற்காலத்தே உணர்ந்து,

"சலம் புணர் கொள்கைச் சலதியொ டாடிக்
குலந்தரு வான் பொருட் குன்றம் தொலைந்த
இலம்படு நாணுத்தரும்."

– சிலம்பு. 9: 69–71.

என அவ்வொழுக்கத்தையே பழிக்கும் உயர்வோனாகி விட்ட கோவலன்பால், அமைந்து கிடந்த அரிய பெரிய பண்புகள் அளவிறந்தனவாம்.

தன் வணிகர் குலத்துவந்த முன்னோன் ஒருவன், கடல் கடந்த நாட்டு வாணிகம் கருதி ஊர்ந்து சென்ற கலம், கடலிடையே உடையக் கடலில் வீழ்ந்து கரைகாணாது கலங்கியபோது, தன் விஞ்சையால் அவன் விழுமம் தீர்த்தது மணிமேகலா தெய்வம் என்பதால், அத்தெய்வத்தின் பெயரைத் தன் மகளுக்குச் சூட்டிப் பெருமை செய்த நன்றறி நல் உள்ளம் உடையவன் கோவலன்.

மகள் பிறந்த நாள் விழாவன்று, தான் அளிக்கும் கொடைப் பொருள் கொள்வான் வேண்டிவந்த, முதியோன் ஒருவனை, மழகளிறு ஒன்று பற்றிக் கொண்டது கண்ட அளவே, திடுமெனப் பாய்ந்து அம்முதியோனை விடுவித்து, அக்களிற்றின் மதம் அடக்கிய கருணை மறமுடையான் கோவலன்.

கழிபெரும் பாவம் செய்துவிட்டமையால் கணவனால் கைவிடப்பட்டாள் ஒருத்திக்காக, அப் பாவம் போக்கும் கழுவாயாகத் தன் பொருள் கொண்டு தானம் பல செய்து, அவள் பாவத்தையும் துடைத்து, அவள் கணவனோடு சேர்த்து அவள் வாழ்வு மலரவும், வகை செய்த வான்புகழ் வளம் உடையான் கோவலன்.

பூத சதுக்கத்துப் பூதத்தின் கைப்பட்டு உயிரிழக்கப் போகும் ஒரு மகனின் தாய்படும் துயர்காணப் பொறாது, அப்பூதத்தின் முன்சென்று, தன்னுயிர் கொண்டு, அம்மகன் உயிர் விடுமாறு மன்றாடிக் கேட்கவும், பூதம் அது முறையன்று என மறுத்துவிடவே, அத்தாயையும், அவள் பெரும் சுற்றத்தையும் பல்லாண்டு புரந்த நல்லறத் தலைவன் கோவலன்.

இளமை யுணர்ச்சியின் வேகத்தால் உந்தப்பட்டு, காதல் மனைவியைக் கைவிட்டுக் காதற் பரத்தையின் மனைபுகுவதும், அப்பரத்தையின் உள்ளத் தூய்மை யையும் ஐயுற்று, அவளையும் கைவிட்டுப் போதலும் போலும் குற்றங்கள் பல புரிந்துளான் கோவலன் என்றாலும், பின்னர்த் தன் பிழையுணர்ந்து இரங்கும் உயர்குணமும் அவன்பால் அமைந்திருந்தது.

மதுரை மாநகரத்துப் புறநகரில் தங்கியிருந்த போது, மாநகருள் புகுந்து வணிகர் சிலரைக் கண்டுவரச் செல்லும் முன்னர், கவுந்தி அடிகளைப் பணிந்து, “அம்மையீர்! ஒழுக்க நெறி கைவிட்டு, இழுக்குடையே னாகி, இல்லறச் செல்வியாம் இவளை எல்லையிலாத்

துயர்க்குள்ளாக்கியதோடு, முன்பின் அறியா இடத்தில் அலையவும் பண்ணிய என் சிறுமை கண்டு இரங்கு கிறது என் உள்ளம்.

> "நெறியின் நீங்கியோர் நீர்மையே னாகி,
> நறுமலர் மேனி நடுங்குதுயர் எய்த
> அறியாத் தேயத்து ஆரிடை உழந்து
> சிறுமையுற்றேன்." – சிலம்பு. 4: 17–20.

எனக் கூறியதும்,

ஆயர் சேரியில் கண்ணகி ஆக்கிப்படைத்த அறுசுவை உணவுண்டு, அவள் காற்சிலம்பை விற்பான் வேண்டி, மாநகர்க்குச் செல்லும் முன்னர், கண்ணகியை அருகழைத்து, "அன்பிற்கினாயாளே! பயனில் சொல் பாராட்டும் மக்கட்பதடிகளோடும், புதமலர் தேடித் திரியும் வண்டேபோல், புதுப் புது மகளிரைத் தேடி அலையும் காமுகரோடும், வன்சொல் அல்லது இன்சொல் வழங்கியறியாக் கும்பலோடும் கூடிக் கடமை மறந்து, ஒழுக்க நெறி கைவிட்ட எனக்கும், இனி உய்யும் வழி உளதமோ? பெற்ற தாய் தந்தையர்க்கு ஒரு மகன் ஆற்ற வேண்டிய கடமைகளைக் கைவிட்டேன். ஆண்டால் இளையளே யாயினும், அறிவால் முதியோளாகிய உன்னையும் சிறுமைக்கு உள்ளாக்கி னேன்; அங்ஙனமாகவும், 'மதுரை செல்வோம்; புறப் படுக!' என்றதும் என் பின் புறப்பட்டு விட்டனையே; உன்னை என்னெனப் புகழ்வேன்!"

> "வறுமொழி யாளரொடு வம்பப் பரத்தரொடு
> குறுமொழிக் கோட்டி நெடுநகை புக்குப்

பொச்சாப் புண்டு பொருளுரை யாளர்
நச்சுக் கொன்றேற்கு நன்னெறி உண்டோ?
இருமுது குரவர் ஏவலும் பிழைத்தேன்;
சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்;
வழுவெனும் பாரேன்." – சிலம்பு. 16: 63–69.

எனக் கூறியதும்,

உணர்ச்சிக்கு அடிமையாகும் உரமிலா உள்ளம் உடைமையால், மாதவியின் தூய காதலை மதியாது, அவளை,

"மாயப்பொய் பலகூட்டும் மாயத்தாள்"

என்றும்,

"ஆடல் மகளே யாதலின், ஆயிழை!
பாடுபெற்றன அப் பைந்தொடி தனக்கு."

– சிலம்பு. 8: 108–110.

என்றும் அவளைப் பழி தூற்றிய கோவலன், மதுரை செல் வழியில் கோசிகமாணிபால், "மாதவி தீதுடையாள் அல்லள்; தீது செய்தவன் யானே"–

"தன்தீது இலள் எனத் தளர்ச்சி நீங்கி
என்தீது என்றே எய்தியது உணர்ந்து"

–சிலம்பு,. 13: 94–95.

என உணர்ந்து கூறியதும், செய்த பிழைக்கு இரங்கும் கோவலன் பேருள்ளத்திற்குச் சான்றுகளாம்.

இவ்வாறு செய்த பிழைக்கிரங்கும் பெரும் பண்புடையனாதலோடு, பிறர் துயர்க்கிரங்கும பேரருள் உள்ளமும் உடைய உரவோனாகிய கோவலனைக்

கணவனாகக் கொண்டதோடு, அவன் பாராட்டைப் பெறும் மனையறத் தலைவியாகவும் மாண்புற்றாள் கண்ணகி.

மணமுடித்து முதன் முதலாக மங்கல நல்லமளி மீது இருக்கின்றனர் இருவரும். அந்நிலையில் கண்ணகியின் புறக்கோல நலத்தில் அறிவு மயங்கிப் போன கோவலன், மூன்றாம் பிறைத் திங்களை நிகர்க்கும் நுதல், இரண்டு பெரிய கரும்பு வில்கள் போல் காட்சி நல்கும் புருவம், சிறுத்த இடை, வேல்நிகர் விழிகள், மயிலையும் தோற்றோடப் பண்ணும் சாயல், கிளி மொழியையும் வெல்லும் மழலை ஆகியவற்றைப் பாராட்டிவிட்டு, "மாதரசே! மங்கல அணி உன்னைப் பேரழகு செய்வதாகவும், உன்னைப் புனைந்துவிடும் பேதை மகளிர், அஃது அறியாது, வேறு சில அணிகளையும் உனக்கு அணிவித்தது யாது பயன் கருதியோ? கருங்கூந்தலில், கற்பொழுக்கம் கருதி, நீ சூடியிருக்கும் சில மலரே உனக்குச் சிறப்பளிக்கப் போதுவதாகவும், பன்னிற மலர் பல கொண்டு கட்டிய பெரிய மாலையை உனக்குச் சூட்ட, அப்பணி மகளிர், அம்மலர் மாலைபால் கொண்டிருக்கும் உறவுதான் என்னவோ? உன் அழகிய கூந்தலுக்கு அகிற்புகை யூட்டல் ஒன்றே போதுவதாகவும், அவர்கள் அதற்கு மேலும் மான்மதச் சாந்தைப் பூச, அச்சாந்தின் மீது அவர்க்குள்ள அருள் உள்ளம்தான் என்னவோ? மார்பில், தொய்யிற் குழம்பு கொண்டு கோலம் புனைந்தது ஒன்றே போதுவதாகவும், அதற்குமேலும்

முத்து வடங்களை அணிய, அவர்க்கு அவ்வடத்திடம் உள்ள உரிமைதான் என்னவோ? மங்கல அணியும், ஒருசில மலரும், அகிற்புகையும், தொய்யிற்குழம்பும் என்ற இவையே பெரும்பாரமாக, அவை பொறுக்க மாட்டாது, உன் நுதல் வியர்ப்பதாகவும், இடை தளருவதாகவும், அஃதறியாது, பலவணியும், பெரு மாலையும், மான்மதச் சாந்தும், முத்துச் சரமும் பூட்ட, அவர்கள் அறிவு பேதுற்றுப் போயினதோ? மேனியின் நிறநலத்தால் மாசறு பொன்னொப்பாய்; மென்மை நலத்தால் வலம்புரி முத்தொப்பாய்; மன நலத்தால் குற்றந்தீர் மணப்பொருள் ஒப்பாய்; இனிமையால் கரும்பு ஒப்பாய்; மொழி நலத்தால் தேன் ஒப்பாய்; கண்டார் மயக்கும் பேரழகால் கொல்லிப் பாவை ஒப்பவளே; கடைக்கண் ஒளியால், கண்டார் உயிர்காக்கும் அருமருந்தனையாய்; வணிகப் பெருங் குடியில் வந்தவளே; உன்னை, மலையிடைப் பிறவா மாணிக்கம் என்பேனோ? அலை ஓயா ஆழ்கடல் பிறவா அமிழ்தம் என்பேனோ? யாழிடைப் பிறவா இசையெனப் புகழ்வனோ? உன்னைப் புகழ அறியேன்" எனப் பலபடப் பாராட்டியுள்ளதைக் காட்டினால், அப்பாராட்டெல்லாம், காணும் பொருள் மீது காணும் அக்கணமே கருத்திழந்து போகும் உரம் அற்ற உள்ளத் தவனாகிய கோவலன், கண்ணகியை அவளின் புனைநல வடிவில், மங்கல நல்லமளிமீது முதன் முறையாகக் கண்டதும் கொண்ட காமவேட்கை மிகுதியால் கருத்திழந்து, கூறியவை ஆதலின், அப்

பாராட்டு அவளுக்குப் பெருமை தருவதாகாது என அதைக் குறைத்து மதிப்பிடவும் கூடும்.

ஆனால், கோவலன், கண்ணகியின் புறக்கோலம் கண்டு பாராட்டியது போலவே, அவள் அகநலம் கண்டு பாராட்டிய பாராட்டும் உளது; அதற்கு இதுபோலும் குறை கூறல் இயலாது. மனையறம் படுத்த காதையில் வரும் பாராட்டு, கோவலன், கண்ணகியைக் கடிமணம் கொண்டவுடனே பாராட்டிய பாராட்டு ஆகும்; அவளோடு பழகி, அவள் பண்பு நலம் அறிந்து கொள்வதற்காம் வாய்ப்பு, அதற்குள்ளாக, அவனுக்கு உண்டாகியிருத்தல் இயலாது. ஆகவே, அந்நிலையில், அவளைப் பற்றிய நினைவு எழும்போதெல்லாம் அவள் புறக்கோலம் ஒன்றை மட்டுமே அவனால் காண இயலும். ஆகவே, அப்போது, அவன், அவள் புறக் கோலத்தை மட்டுமே பாராட்டினான்.

மதுரை ஆயர்பாடியில், கண்ணகி தானே சமைத்து அன்போடு இட்ட அறுசுவை உணவுண்ட பின்னர், அவள் காற்சிலம்பை விற்பான் வேண்டி; அவள்பால் விடைபெற்றுச் செல்லும் நிலையில், அவள் தன்னை மணங்கொண்ட காலம் முதலாம் அவள் மனைவாழ்க்கை முறைகளை நிரலே நினைவில் கொணர்ந்து பார்க்கின்றான் கோவலன். மங்கல நல்லமளிமீதமர்ந்து, தன்னால், அத்துணைப் பெரும் பாராட்டைப் பெறத்தக்க பெருநலம் வாய்க்கப்பெற்ற அவளை மறந்து, மாதவி மனைபுகுந்த தன்மீது அவள் சிறிதுதானும் வெறுப்புக் கொண்டிலள். அம்மட்டோ!

மாதவியைக் கைவிட்டு அவள் மனைபுகுந்த தன்னை நகைமுகம் காட்டி வரவேற்றதோடு, மாதவிக்குத் தரத்தக்க மாநிதி இல்லைமையால்தான் வந்து விட்டானோ என்ற நினைப்பால், தன் காற் சிலம்பையே அளிக்க முன்வந்தாள். கைப்பிடித்த மனைவியைக் கைவிட்டதோடு, பெற்ற தாய் தந்தையரைப் பேண மறந்த பொறுப்பிலியை நம்பிப் புதுவிடம் போவதா என நினையாது, மதுரைக்குப் புறப்படுக என்றதுமே புறப்பட்டுவிட்டாள். 'மண வறையில் வைத்து மகிழ்விக்க மறந்தவனாயிற்றே,' என நினையாது, என் துயர் தீர்க்கும் வழித்துணையாதல் ஒன்றே குறியாகக் காட்டுவழியைக் கொடிய கோடையில், கால் கொப்புளிக்கக் கடந்துவந்தாள். இவ்வாறு, அவன் உள்ளம், கண்ணகியின் அப்பண்பு நலங்களையெல்லாம் எண்ணி எண்ணி இன்புற் றிருந்தது, ஆகவே, அவள், அவனுக்கு அணித்தாக இருப்பவும், அவனுக்கு அவள் அகநலமல்லது, புறநலம் எதுவும் தோன்றாவாயின. அதனால், அவன் அவள் அகநலப் பெருமைகளைப் பாராட்டத் தொடங்கி விட்டான்.

"தன்னைப் பெற்ற தாய்தந்தை, தன்னைத் தம் மருமகளாகக் கொண்ட என் தாய்தந்தையர் ஆகிய அனைவரையும் மறந்தாள். தன் குறிப்பறிந்து பணி புரியக் காத்து நிற்கும் குற்றேவல் மகளிரை மறந்தாள். அம்புலி காட்டி, இன்ப அன்புப் பாடல் பாடி, ஊட்டியும் ஆட்டியும், உறங்கப் பண்ணியும் பேணி

வளர்த்த செவிலித்தாயைச் சிந்தித்தாளல்லள், உடன் உண்டு, உடன் ஆடி, உடன் உறங்கும் உயிர்த் தோழியர் குழாத்தைக் கருதினாளல்லள், இத்துணைப் பெருஞ் சுற்றம் சூழ்ந்திருக்க வாழ்ந்திருந்தவள், எழுக என்றதும், அத்துணைப் பேரையும் மறந்து, வழித்துணையாக அவருள் ஒருவரையும் நாடாது, என்பின் தனித்து வந்துவிட்டனளே! மாண்புநிறை மகளிர்க்குத் துணை யாவன நாணமும், மடனும், உயர்பேர் ஒழுக்கமும், உயிர்நிகர் கற்புமல்லது, குடிமுதற் சுற்றமோ, குற்றிளையோரோ, அடியோர் பாங்கோ, ஆயமோ துணையாகார் என்பதுணர்ந்த உயர்வுடையாளாகி விட்டனளே!" எனக் கண்ணகியின் பண்பு நலங் களையே நினைந்திருந்தானாகவே, அவன் வாய், அந்நிலையில் அவற்றையே பாராட்டலாயின:

"இருமுது குரவர் ஏவலும் பிழைத்தேன்;
சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்;
வழுவெனும் பாரேன்; மாநகர் மருங்கீண்டு
எழுகென எழுந்தாய்; என்செய்தனை?"

"குடிமுதல் சுற்றமும் குற்றிளை யோரும்,
அடியோர் பாங்கும், ஆயமும் நீங்கி,
நாணமும் மடனும், நல்லோர் ஏத்தும்,
பேணிய கற்பும் பெருந்துணை யாக,
என்னொடும் போந்து, ஈங்கு என்துயர் களைந்த
பொன்னே! கொடியே! புனைபூங் கோதாய்!
நாணின் பாவாய்! நீள்நில விளக்கே!
கற்பின் கொழுந்தே! பொற்பின் செல்வி!"

- சிலம்பு. 16: 67-70, 84-91.

*"தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்*
*இனிது எனக் கணவன் உண்டலின்,*
*நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே."*

என்றார் புலவர் கூடலூர் கிழார். ஒரு பெண்ணுக்குக் கணவனுடைய பாராட்டைப் பெறுவதைக் காட்டிலும் பேரின்பம் வேறு இல்லை; அதைக் காட்டிலும் பெருமை அவளுக்கு வேறு இல்லை. அதிலும் – கணவன் பாராட்டு மனைவியின் புறக்கோலம் பற்றியதாகாது, அகநலம் பற்றியதாயின், அப்பாராட்டு, உண்மையில் ஒப்புயர்வற்ற பெரும் பாராட்டேயாகும். அத்தகைய அகநலம் பற்றிய பாராட்டைக் கண்ணகி பெற்றுள்ளாள். அதிலும், காட்சிக்கு இன்பம் நல்கும் புறக்கோல நலங்கட்கு எளிதில் அறிவைப் பறி கொடுக்கும் உள்ளுரம் இல்லாக் கோவலன், அவள் பண்பு நலம் கண்டு பாராட்டினான் என்றால், அது, அவள்தன் அளக்கலாகாப் பெருமைக்கு அரண் செய்வதேயாம்.

# 7

# வேந்தர் வழிபட்ட விழுமியாள்

உலகாளும் மன்னவர்கள், இறைவன் திருவுருவங் களாக மதிக்கத்தக்கவராவர் என்ற உணர்வு நிலவிய காலம் சங்க காலம்.

*"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு*
*இறை என்று வைக்கப்படும்."*

என்றார் வள்ளுவர். ஆண்டவனைக் குறிக்கும் இறை எனும் பெயரையே அரசர்க்குச் சூட்டி வழங்கினார்கள். அரசர்களின் இயல்பு கூறும் அதிகாரத்திற்கு, வள்ளுவர், இறை மாட்சி என்றே பெயரிட்டிருப்பதும் காண்க. அதற்கு விளக்கம் கூறவந்த உரையாசிரியர் பரிமேலழகர், "உலக பாலர் உருவாய் நின்று உலகம் காத்தலின் இறை என்றார்" எனக் கூறும் விளக்கத்தை யும், அதற்குச் சான்றாக அவர் எடுத்துக்காட்டும், "திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே என்னும்" என்ற திருவாய்மொழித் தொடரையும் காண்க. ஆகவே, அக்கால மன்னர்கள், திருக்கோயில்களில் குடிகொண்டிருக்கும் தீண்டாத்

திருமேனிகளைப் போல் வணங்கி வழிபடத்தக்கவராம் நிலை பெற்றுத் திகழ்ந்தார்கள் என்பது தெளிவு. மக்களும், மக்களுக்கும் மேலானவர் என மதிக்கத்தக்க தேவர்களும் ஆண்டவனை வழிபடுவதுதான் வழக்கமே யல்லாது, அவர்களை ஆண்டவன் வழிபடுவது வ்ழக்காறன்று. இவ்வொழுங்குமுறை, மாதேவனுக்கு நிகர் என மதிக்கத்தக்க மன்னர்க்கும் பொருந்தும். ஆகவே, மக்கள் மன்னரை வணங்குவது முறையே யல்லது, மன்னன், மக்களை வணங்குவது முறையன்று என மதித்து வாழ்ந்தார்கள் அக்கால மக்கள். அதனால், தம்மைப் பிறர் வணங்கப் பிறந்தவரே யல்லது தாம் பிறரை வணங்கப் பிறந்தவரல்லர் என்ற உணர்வு கொண்டிருந்தார்கள், ஊராளும் அரசர்கள்.

பண்டைத் தமிழ்ப் பேரரசர்களைப் பாராட்டிய புலவர்களும் பணியாமை, பாராள்வோர்பால் பொருந்தியிருக்கத்தக்க பல்வேறு பண்புகளில் ஒன்று என்றே மதித்துப் பாராட்டியுள்ளார்கள். செல்வக் கடுங்கோ வாழியாதனைப் பாராட்டிய புலவர் கபிலர், அவன் "பணியா உள்ளத்தையும்," "வணங்கா ஆண்மை யையும்" கண்டு பாராட்டியுள்ளமை காண்க (பதிற்றுப் பத்து: 63, 70). அத்தகைய பணியா உள்ளம் வாய்க்கப் பெற்ற அச் செல்வக்கடுங்கோ வாழியாதன், யாரை யேனும் பணிந்திருப்பன் என்றால், ஓதல் முதலாம் ஆறு ஒழுக்கங்களாலும் உயர்ந்த உரவோராகிய பார்ப் பாரையே பணிந்திருப்பன். அவர் ஒழிந்த பிறர், எத்துணை உயர்ந்த நிலையினராயினும், அவர்களைப்

பணிந்தறியான், செல்வக்கடுங்கோ வாழியாதனின் இந்தச் சிறப்பே, கபிலரைப் பெரிதும் கவர்ந்துவிட்டமையால், அது கூறி அவனைப் பாராட்டியுள்ளார்:

*"பார்ப்பார்க்கு அல்லது பணிபு அறியலையே;*
*பணியா உள்ளமொடு அணிவரக் கெழீஇ."*

– பதிற்று. 63: 1–2

பதிற்றுப்பத்தில் ஐந்தாம் பத்தினைப் பாடிச் சேரன் செங்குட்டுவனைப் பாராட்டும் பெரும்புலவர் பரணரும், செங்குட்டுவனின், "வணங்கா ஆண்மை" யினையே வாயாரப் புகழ்ந்துள்ளார் (பதிற்று. 48). கண்ணகி வரலாறு கூறுமுகத்தான், உடன்பிறப்பாளனாம் செங்குட்டுவன் வரலாற்றை உலகறியப் பண்ணிய இளங்கோவடிகளாரும் செங்குட்டுவனின் "இறைஞ்சாச் சென்னியின்" இறப்ப உயர்ந்த சிறப்பையே எடுத்துக் கூறிப் பாராட்டியுள்ளார் (சிலம்பு. 26: 54).

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் பாராட்டிய காரிகிழார், அவனை வாழ்த்துங்கால், முற்றத்துறந்த முனிவர்களாலும் வணங்கத்தக்கோனாகிய முக்கட் செல்வனாம் சிவன் உறையும் திருக்கோயில் வலம்வரும் காலைமட்டும் உன் வெண்கொற்றக்குடை பணியுமாக! நான்மறை வல்ல நல்லோர் உன் எதிர்வந்து, தம் வலக்கையை உயர்த்தி, "வாழ்க பல்லாண்டு வழுதி!" என வாழ்த்துரை வழங்கும் காலத்து உன் தலை மட்டுமே, அவ் வாழ்த்துகளை ஏற்றுக்கொள்வான் வேண்டி வணங்குமாக!" எனக் கூறி, வழுதியின் வணங்காப் பெருமையே விளங்கப் பாடியுள்ளார்.

*"பணியியர் அத்தை, நின்குடையே, முனிவர்*
*முக்கட்செல்வர் நகர்வலம் செயற்கே!*
*இறைஞ்சுக பெரும! நின் சென்னி, சிறந்த*
*நான்மறை முனிவர் ஏந்து கை எதிரே."* – புறம். 6.

இவ்வாறு பாராட்டத்தக்க தம் பண்புகளுள், தலையாயது பணியாமைப் பண்பாம் எனக் கருதும் பெருமித வுணர்வுடையராகிய மன்னர் குலத்தவரையும், தன் தாள் பணிய வைத்த தனிச் சிறப்புடையவள், மனிதருள் மாணிக்கமாம் கண்ணகி.

தமிழ் நாடாண்ட மூவேந்தர்களுள், முதற்கண் வைத்து மதிக்கத்தக்க சேரர் குலத்தில் வந்தவன் செங்குட்டுவன்.

*"ஆனேறு ஊர்ந்தோன் அருளில் தோன்றி*
*மாநிலம் விளக்கிய மன்னவன்."* – சிலம்பு. 30: 141–142.

என்பதற்கு ஏற்ப, தான் பிறக்க அருட்டுணை புரிந்த காரணத்தால், சிவபெருமான் ஒருவனுக்கு மட்டுமே தலைவணங்கும் தன்னிகர் அற்றவன் அச் செங்குட்டுவன். முப்பெருங் கடவுளருள் ஒருவனாகவும், காக்கும் தொழில் உடைமையால் நாடு காவல் தொழிலினராகிய மன்னர்குல முதல்வன் என மதிக்கத் தக்கவனுமாகிய திருமாலுக்கும் தலைவணங்காது, அவன் சேடத்திற்குத் தன் தோளிடமே தரும் மனம் உடையவன் என இளங்கோவடிகளாரால் சிறப்பிக்கப் படுபவன் அச் செங்குட்டுவன்.

*"நிலவுக் கதிர் முடித்த நீளிருஞ் சென்னி*
*உலகுபொதி உருவத்து உயர்ந்தோன் சேவடி*

*மறஞ்சேர் வஞ்சி மாலையொடு புனைந்து*
*இறைஞ்சாச் சென்னி இறைஞ்சி வலங்கொண்டு*
*மறையோர் ஏந்திய ஆவுதி நறும்புகை*
*நறைகெழு மாலையின் நல்லகம் வருத்தக்*
*கடக்களி யானைப் பிடர்த்தலை ஏறினன்;*
*குடக்கோக் குட்டுவன் கொற்றம் கொள்கென*
*ஆடக மாடத்து அறிதுயில் அமர்ந்தோன்*
*சேடம் கொண்டு சிலர் நின்று ஏத்தத்,*
*தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்*
*வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின்,*
*ஆங்கது வாங்கி அணிமணிப் புயத்துத்*
*தாங்கின னாகித் தகைமையிற் செல்வுழி".*

– சிலம்பு. 26: 54–67

அத்தகையானைத் தன் திருவுருவம் சமைத்தற் காம் கல்லை, வடவாரியரை வென்று, வடபேரி மயத்துக் கொண்டு, கங்கைப் பேரியாற்றில் நீராட்டி, அவ் வடவாரிய மன்னர் தலைமீதே ஏற்றிக் கொணர்ந்தும், தனக்கு ஒரு கோயில் அமைத்தும், அக்கோயிலகத்தே தன் திருவுருவை நிலைநாட்டி, பல நாட்டு மன்னரோடும் கூடி, விழாவெடுத்தும் வணங்கி வழிபடப் பண்ணினாள் கண்ணகி.

தமிழ் நாடாண்ட மூவேந்தவர்களுள், ஒரு குலத்தவர் விரும்பிச் செய்வதை, ஏனைய இரு குலத்தவரும் வெறுத்து ஒதுக்குவதே வழக்கமாம் என்றாலும், கண்ணகிக்குக் கோயில் கட்டி வழிபாடு மேற்கொள்வதில் மட்டும், மூவரும் ஒத்த உள்ளத்தராயிருந்தனர்; செங்குட்டுவன் தாய் நற்

சோணையுடன் பிறந்தான் மகனும், செங்குட்டுவன் மைத்துனனும், பெருங்கிள்ளி எனவும், வளவன்கிள்ளி எனவும் அழைக்கப்படுவோனுமாகிய உறையூர்ச் சோழன், வேண்டுவார் வேண்டுவன வெல்லாம் வழங்க வல்ல பத்தினிப் பெருந்தெய்வமாவள் கண்ணகி எனக் கொண்டு, தன் தலைநகரத்தே, பத்தினிக் கோட்டம் அமைத்து விழாக் கொண்டாடியதோடு, அவ்விழா ஆண்டுதோறும் தொடர்ந்து நடைபெறுதற்காம் நிவந்தம் பலவும் ஏற்படுத்தினான். இதை, "அதுகேட்டுச் சோழன் பெருங்கிள்ளி கோழியகத்து எத்திறத்தானும் வரந்தரும் இவளோர் பத்தினிக் கடவுளாகுமென நங்கைக்குப் பத்தினிக் கோட்டமும் சமைத்து நித்தல் விழாவணி நிகழ்வித்தோனே!" என்ற சிலப்பதிகார உரைபெறு கட்டுரையில் காண்க.

பிறந்த நாட்டில் பெருமையிராது என்ற பொது மொழிக்கு மாறாக, சோணாட்டுக் குடிகளிலே ஒருத்தி என மறந்து கைவிடப்படாது, அந் நாடாளும் முடி மன்னனால், பிறந்த மண்ணில் பெருங்கோயில் கொண்டு வழிபடப் பெறும் உயர்நிலை பெற்றவள் கண்ணகி.

கண்ணகி இறுதியாகப் புகுந்து, கடவுள் உருவம் பெற்ற நாடு சேரநாடு; மானிடப் பெண்ணாகியும் தெய்வப் பெண்ணாகிப் பெருமை கொண்ட கண்ணகியைப் பெற்றெடுத்த நாடு சோழநாடு. ஆகவே, அவ்விருநாட்டு மன்னர்களும் அவளைப் பாராட்டிய தில் வியப்பில்லை. ஆனால், அவள் கணவன்

கொலைக்குக் காரணமாயிருந்ததும், அவள் சினத்தீப்பட்டு அழிவுற்றதுமாகிய பாண்டிநாட்டுக் காவலன், அதிலும், அவள் காரணத்தால் இறந்துபோன மன்னனின் மகன், அவளை வணங்கி வழிபாடு செய்தான் எனில், அது அவளின் அளக்கலாகாப் பெருமைக்கு எடுத்துக்காட்டாகு மன்றோ!

கோவலனுக்குக் குற்றம் இழைத்துக் கோல் கோடியமை கண்டு உயிர்துறந்த நெடுஞ்செழியன் மகனாய், தந்தை மதுரையிலிருந்து அரசாண்ட காலத்தில், தென்பாண்டி நாட்டின் தலைநகரும் பாண்டி நாட்டின் வளங்கொழிக்க உதவும் வாணிகப் பொருளாம் முத்துவிளை துறையுமாகிய கொற்கை யிலிருந்து அரசாண்டு வந்த வெற்றிவேற் செழியன், தந்தைக்குப் பிறகு மதுரைபோந்து அரசாண்டிருந்த காலத்து, பாண்டி நாடு பத்தினிக்கு இழைத்த கொடுமையால் மழைவளம் இழந்து வறுமை மிகுந்து வாடுவது கண்டு பாண்டித் தலைநகரில் பத்தினிக்கு விழாவெடுத்து, பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று வேள்வி செய்தான்; அதனால் கண்ணகி சினம் தணிய நாடு மழை பெற்றுப் பசியும் பிணியும் நீங்கி, வசியும் வளனும் பெருகிற்று,

"கொற்கையில் இருந்த வெற்றிவேற் செழியன்
பொற்றொழில் கொல்லர் ஈரைஞ் ஞூற்றுவர்
ஒருமுலை குறைத்த திருமா பத்தினிக்கு
ஒருபகல் எல்லை உயிர்ப்பலி ஊட்டி
உரைசெல வெறுத்த மதுரை மூதூர்
அரைசு கெடுத்து அலம்வரும் அல்லற்காலைத்

தென்புல மருங்கில் தீதுதீர் சிறப்பின்
மன்பதை காக்கும் முறைமுதல் கட்டிலின்
நிரைமணிப் புரவி ஓர்ஏழ் பூண்ட
ஒருதனி ஆழிக் கடவுள் தேர்மிசைக்
காலைச் செங்கதிர்க் கடவுள் ஏறினன்என
மாலைத் திங்கள் வழியோன் ஏறினன்."

– சிலம்பு. 27: 127–138.

செங்குட்டுவனும், வளவன்கிள்ளியும், வெற்றி வேற் செழியனும் கண்ணகியைப் பத்தினித் தெய்வ மாக்கி வழிபாடு செய்தனர் என்றால், இவரெல்லாம் தமிழகத்தவர், தமிழகத்துப் பெண்ணைத் தமிழகத்து அரசர்கள் பாராட்டியதில் பெருமையில்லை;

"மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை;
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்."

என்பதற்கேற்ப, அவளை வேற்று நாட்டவர், வேற்று மொழியினர் பாராட்டியிருப்பராயின், அதுவே அவள் பெருமைக்கு அளவுகோலாம் என்று எண்ணுவதாயின், அந்தப் பெருமையும் அவளுக்கு வாய்த்திருந்தது.

தமிழகத்து மூவேந்தரைப் போலவே, மவுரியப் பேரரசன் அசோகன் ஆட்சிக்கு அடிபணியாது தனியரசு அமைத்து ஆண்டவரும், தொடக்கத்தில் துளுநாடு என்ற எல்லை குறுகிய நாட்டவராய் இருந்து, தமிழகத்துப் பேரரசர்களெல்லாம் அஞ்ச, தமிழகத்து அரசியலில் பெரும்பங்கு கொண்டு, இறுதியில், அப்பேரரசர் படையில் பணியாற்றியவரும், சொல்

தவறாச் சிறப்புடைமையால் "வாய்மொழிக் கோசர்" எனவும், "ஒன்றுமொழிக் கோசர்" எனவும் பாராட்டப் பெற்றவருமாகிய கொங்கிளங்கோசர், செங்குட்டுவன், வஞ்சிமாநகரில் எடுத்த விழாவுக்கு வந்து, வழிபட்டதோடு, தங்கள் துளுநாட்டிலும், விழாவும் சாந்தியும் செய்து மழை வளம் பெற்று மகிழ்ந்தார்கள். "அது கேட்டுக் கொங்கிளங்கோசர் தங்கள் நாட்டகத்து நங்கைக்கு விழவொடு சாந்தி செய்ய மழை தொழில் என்றும் மாறாதாயிற்று" என்ற உரைபெறு கட்டுரை காண்க.

சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலை அமைத்தற்காம் கல் கொணர்வான் வேண்டி, வடநாடு சென்ற காலை, அவனும் அவன் படையும் கங்கையைக் கடக்க உதவியவனும், அக்காலை வடநாடு முழுவதும் வெற்றி விளங்க அரசாண்டு வந்த ஆந்திரப் பேரரசர் மரபில் வந்து, கீழைமாளுவ நாட்டிலிருந்து ஆட்சி புரிந்தவனும், வடமொழியில் சதகாணி என வழங்கப் படுவோனும் ஆகிய நூற்றுவர் கன்னர் என்பான், செங்குட்டுவன் வஞ்சிமாநகரில் கொண்டாடிய விழாவுக்கு வந்திருந்ததோடு அமையாது, 'கண்ணகிப் பெருந்தெய்வமே! செங்குட்டுவன் ஈண்டெடுக்கும் இவ்விழாவில் வந்து சிறப்பித்தது போலவே, எங்கள் நாட்டகத்து யாங்கள் எடுக்கும் விழாவிலும் வந்து கலந்து கொள்ள வேண்டுகிறோம்' என வேண்ட, கண்ணகியும் 'தந்தேன் வரம்' எனத் தன் மாளுவ தேசத்தும், அவளுக்குக் கோயில் எடுத்து விழாக் கொண்டாடினான். மாளுவ தேசத்தின் கீழ்ப் பகுதியில்,

நாகோட் மாவட்டத்தைச் சேர்ந்த மலைநாட்டுப் பகுதிகளில், பதைனிதேவி எனும் பெயரோடு காணப் படும் கோயில்கள், மாளுவ மன்னன் கண்ணகிக்கு எடுத்த பத்தினி தேவிக் கோயில்கள் ஆம்.

செங்குட்டுவன் திறம் அறியாது இழிமொழி வழங்கி நகையாடியதன் காரணத்தால், அவனால் தாக்குண்டு, அவனுக்குத் தோற்று, அவன், கண்ணகிச் சிலைக்கு எனத் தேர்தெடுத்த கல்லைச் சுமந்து வந்து தமிழகம் சேர்த்து, கண்ணகிக்கு எடுத்த விழாக் காரணமாகச் சிறை வீடு செய்யப் பெற்ற வடவாரிய மன்னர்களும், அவ்விழாவில் கலந்துகொண்டு, அவளடி பணிந்ததோடு, அவளைத் தங்கள் நாட்டகத்தும் விழாக் கொண்டு வணங்கிப் பயன் கொண்டார்கள்.

இவ்வாறு, இமயம் முதல் குமரிவரை பரவிய பெருநிலப்பரப்பில் கோலோச்சியிருந்த கோமகன் களால் வணங்கப்பெற்ற கண்ணகி, கடல் கடந்த நாட்டினராலும் கற்புடைத் தெய்வமாகப் போற்றப் பட்டுளாள். "கடல்சூழ் இலங்கையை கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் ஆண்டவனும், ஒருநாள் நள்ளிருள் யாமத்தில் நகர் சோதனை செய்து வருகின்ற போது நரைத்த முதுமகள் ஒருத்தி, உரத்த குரல் பாய்ச்சி அழக்கேட்டு, அவள் மனையடைந்து, அன்னவள் இன்னலுக்குப் பன்னெடுங் காலத்துக்கு முன்னர் ஈழ நாட்டின்மீது படையெடுத்துப் போந்த கரிகாற் பெருவளத்தான், சிங்களக் குடிகள் பலவற்றைச் சிறைப்படுத்திச் சென்றபோது, தன் குடிக்கு ஒரு

மகனையும் கொண்டுபோயினையே எனக் கேட்டுச் சோணாட்டின்மீது படையெடுத்து வந்து தன் நாட்டுக் குடிகளைச் சிறைவீடு செய்து சென்றவன்" என இலங்கை வரலாற்று நூலாம் மகாவம்சத்தால் பாராட்டப் பெறுபவனும், சேரன் செங்குட்டுவனோடு சிறந்த நட்புடையவனும் ஆகிய கயவாகு என்ற காவலனும் கண்ணகியை வழிபட்டான். செங்குட்டு வன் நண்பனாய்ச் சேரநாட்டுத் தலைநகர்க்கு வந்து, பத்தினி விழாவில் பங்குகொண்ட கயவாகு, அவளுக்கு இலங்கையிலும் கோயில் கட்டிச் சிலை நாட்டிச் சிறப்புச் செய்தான்.

"அது கேட்டுக் கடல்சூழ் இலங்கைக் கயவாகு என்பான், நங்கைக்கு நாட்பலி பீடிகைக் கோட்டம் முந்துறுத்து, ஆங்கு அரந்தை கெடுத்து வரம்தரும் இவள் என ஆடித்திங்கள் அகவையின் ஆங்கு ஓர்பாடி விழாக்கோள் பன்முறை எடுப்ப, மழை வீற்றிருந்து வளம்பல பெருகிப் பிழையா விளையுள் நாடாயிற்று" என்ற உரைபெறு கட்டுரை காண்க.

இலங்கையில் கண்ணகிக்குக் கயவாகு அமைத்த படிவம், 1830–ஆம் ஆண்டு, ஆங்கிலேயரால் இங்கிலாந்து நாட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டு, அந்நாட்டு அரும்பொருட் காட்சி சாலையில் வைக்கப் பட்டுளது என்பர் வரலாற்று நூல் பேராசிரியர் பலரும்.

இவ்வாறு, தமிழ்நாட்டு மூவேந்தர்களால் மட்டுமேயல்லாமல், பிறநாட்டுப் பேரரசர் பலராலும் வணங்கி வழிபடத்தக்க விழுமியோளாய் விளங்கினாள் கண்ணகி.

# 8

# இயற்கையையும் ஏவல் கொண்டாள்

தன்னிடையே வாழும் உயிர்கள், தன்னுடைய இயல்பிற்கு ஏற்ப, அவற்றின் வாழ்க்கை முறைகளை மாற்றிக் கொளச் செய்வதன் முகத்தான், அவற்றை ஏவல் கொள்ளும் ஆற்றல் வாய்ந்தது இயற்கை. உலக உயிர்களின் ஆக்கமும் கேடும், அவ்வுயிர்களின் விருப்பு வெறுப்புகளின் விளைவாகவோ, அவ்வுயிர்களின் உழைப்பு, உழைப்பின்மைகளின் விளைவாகவோ அமைதலே முறையாம் என்றாலும், அவை அவற்றினாலேயே அமைந்து விடுவதில்லை. மாறாக, அவ்வுயிர்கள் விரும்பி உழைத்தபோது ஆக்கத்திற்கு மாறான கேடு வந்துறுவதும் உண்டு, இவ்வாறு உயிர்களின் நினைப்பிற்கும் நிகழ்ச்சிக்கும் மாறான பலன் தானே வந்துறுகிறதா என்றால், இல்லை. அது, இயற்கையின் விளையாட்டினாலேயே வந்துறக் காண்கிறோம். உழவர், ஊக்கம் காட்டி உழைத்து, உழவில் பெரும்பயன் எதிர்நோக்கியிருக்கும்போது, பெய்யாதே நின்றோ, அல்லது பெருமளவில் பெய்தோ,

அவ்வுழவர் உழைப்பைக் கெடுப்பதும் மழை; அதுகாணும் உழவர், நம் உழைப்பால் ஆவது ஒன்றும் இல்லை என, ஊக்கம் குன்றி ஒடுங்கியிருக்கும் போது, அவர் விளை நிலங்களுக்கு வேண்டும் போதெல்லாம், வேண்டுமளவே பெய்து, அவரைக் கைதூக்கி விடுவதும் மழை.

*"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றுஆங்கே*
*எடுப்பதூஉம் எல்லாம் மழை."*

என்றார் வள்ளுவரும்.

மழையாற்றல், இவ்வாறு மக்களின் விருப்பு வெறுப்புகளை மட்டுமே மாற்றி அமைக்கும் அத்துணைக் குறைபாடுடையதன்று. அது, அவ்வுயிர் களை ஈன்று புரக்கும் கடவுளரின் விருப்பு வெறுப்பு களையும் மாற்றியமைக்கவல்ல பேராற்றலுடையதாகும். உலகில், கடவுளர் தமக்கு, நாள்தோறும் வழிபாடும், ஆண்டு தோறும் விழாவும் நடைபெற வேண்டுமென்று விரும்பினால், அவை, அவர் விரும்பியதனால் மட்டும் நடைபெற்றுவிடா. மாறாக, அவை, குறைவற நடைபெற வேண்டும் என்று மழை விரும்பினால் மட்டுமே நடைபெறும்; அது விரும்பாதாயின், அக்கடவுளரும் அவை பெறாது கிடந்து கலங்க வேண்டியவரேயாவர்.

*"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்*
*வறக்குமேல், வானோர்க்கும் ஈண்டு."*

இவ்வாறு, இயற்கை, அழிக்கலாகாப் பேராற்றல் பெற்றிருப்பது காணும் உலக மக்கள், தம் வாழ்க்கை

முறைகளை, அவ்வியற்கையின் நியதிக்கு மாறு பட்டதாக அமைத்துக்கொள்ளாது, அவ்வியற்கை யோடு ஒட்டிச் செல்வதாகவே அமைத்துக்கொள்வர். உலக மக்களெல்லாம், இயற்கைக்கு அடிபணியும் அடிமைகளாக, இயற்கை, அவரை ஏவல்கொண்டு ஆட்சி புரியும் ஆண்டவனாகவே காட்சி அளிக்கிறது.

ஆனால், உலக இயல்பு இதுவே யென்றாலும், உயிர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்பத் தன் இயல்பை மாற்றிக்கொண்டு, அவ்வுயிர்களின் ஏவல் கேட்டு, அவ்வுயிர்களுக்கு அடிபணியும் நிலையினை, இயற்கை அடைவதும் ஒரோவழி உண்டு. தான் விரும்பும் போது பெய்வதும், விரும்பாதபோது பொய்ப்பதும், விரும்பும் இடத்தில் மட்டும் பெய்வதும், விரும்பாத இடத்தில் பொய்ப்பதும் ஆகிய இவையே மழையின் பொதுப்பண்பாம் என்றாலும், இப்பண்பிற்கு மாறாக நிகழ்வதும் உண்டு. அரசன் ஒருவன் அறவழி ஆட்சி புரிவனாயின், அவன் ஆட்சிக்கு அஞ்சி, மழை, அவன் நாட்டு மக்கள் விரும்பும்போதெல்லாம் பெய்து பணிசெய்து கிடக்கும். அதனால், மக்கள், அவ்வாறு வந்த மழையைப் பாராட்டாது, அம்மழையை வருவித்த மன்னனையே பாராட்டுவர். அந்த அளவிற்கு மழை அறவழி மன்னர்க்கு அடங்கி ஏவல் செய்யும்.

"இயல்புளிக் கோல்ஓச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு." – குறள், 545.

மலைவாழ் மக்களாகிய குறவர்களின் வாழ்க்கை முறைகளை விளக்கும் கபிலர், குறவர்கள், தங்கள்

தினைப்புனம் மழைபெறாது சாம்புவது கண்ட அளவே, மலையுச்சி அடைந்து, மழைவேண்டி வழிபாடாற்றுவ ராயின் மழைவந்து பெய்யும் எனவும், வந்த மழை வேண்டாத அளவு பெருமழையாகிவிடின், மழை குறைக என மனத்திடை வழுத்துவராயின் அம்மழை அடங்கும் எனவும் கூறுமுகத்தான், இயற்கைகள் நல்லோர்தம் ஏவல்கட்கு அடி பணியும் என்பதற்கான நல்ல சான்று ஒன்றை அளித்துள்ளார்.

> "மலைவான் கொள்க என உயர்பலி தூஉய்,
> மாரி யான்று, மழைமேக்கு உயர்க எனக்,
> கடவுட் பேணிய குறவர் மாக்கள்
> பெயல்கண் மாறிய உவகையர், சாரல்
> புனத்திணை அயிலும் நாடு."
>
> – புறம், 143.

இயற்கை, உயிர்களைத் தனக்கு அடிமை கொள்வது மட்டுமல்லாமல், இவ்வாறு, ஒரோவழி, அவ்வுயிர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடப்பதும் உண்டு. அதுபோலவே, இயற்கைக்கு அடிமைப்பட்டு, அது அளிக்கும் வாழ்க்கை முறைகளை மேற்கொள்வதே மக்களின் பொது இயல்பாம் எனினும், இயற்கையைத் தமக்கு அடிமைகொண்டு, அதன்வழித் தம் வாழ்க் கையை அமைத்துக்கொள்ளாது, தம் வாழ்க்கை வழி அது பணிபுரிய அதை ஏவல்கொள்ளும் உயர்வோர் களும் உளர். அத்தகைய உயர்ந்தோர்களுள் கற்புடை மகளிர் சாலச் சிறந்தவராவர். அவர் பெய்யென, மழை மாறாது பெய்யும் என அவர்க்கு வள்ளுவர் வழங்கிய வாழ்த்துரையினைச் சீத்தலைச்சாத்தனார் எடுத்

தாண்டு பாராட்டியுள்ளார், தாம் பாடிய மணிமேகலையில்:

> "தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
> பெய்எனப் பெய்யும் பெருமழை என்ற அப்
> பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்."

– மணி. 22: 59–61

இவ்வாறு இயற்கையையும், இயற்கைக்கும் மேலான இறைவனையும் ஏவல்கொண்ட பத்தினிமார் பலரைப் பெற்றெடுத்த பெருமைக்குரிய புகார் நகரத்தில் பிறந்த கண்ணகிபால், அவ்வாற்றல் அமைந்து கிடந்ததில் வியப்பேதுமில்லை.

தன் மனம் விரும்பும் கணவனைப் பொய்க்குற்றம் சாட்டிக் கொலை செய்துவிட்டான், பாண்டியன் நெடுஞ்செழியன். கோவலன் குற்றம் அற்றவன்தான்; ஆனால், அதை உண்ர்த்தும் வாய்ப்பு அவனுக்கு அளிக்கப்படவில்லை. அதனால், அந்தக் கடமை அவன் மனைவியாம் தன்னுடையதே என உணர்ந்தாள். அவ்வாறே அரசவை புகுந்து, குற்றமற்றவன் கோவலன்: குற்றம் புரிந்தவன் கோமகனே என்பதை ஐயமற நிலைநாட்டினாள். குற்றம் உணர்ந்த கோமகனும், உயிர்துறந்து உயர்ந்தோனாயினன். ஆனால், அதுகண்டும் கண்ணகி சினம் தணிந்திலது. குற்றம் புரிந்தவன் கோமகன், குற்றம் உடையான் கோலின்கீழ் வாழ்வோரும் குற்றம் உடையவராகவே இருப்பர். ஆகவே, குற்றம் புரிந்த மன்னவன் உயிரிழந்தது மட்டும் போதுமானதன்று; அவன் கோற்கீழ் வாழ்வோரும்

குற்றத்தின் தண்டனைக்கு உள்ளாகல் வேண்டும். குற்றம் புரியா என் கணவனைக் கொன்ற மன்னவனுக்குரிய மாநகரம், இம் மதுரை மாநகரம். ஆகவே, அவன்மீது சென்ற என் சினம், அவன் மாநகர் மீதும் சேறல் முறையே; அடாது செய்த அவன் அழிந்ததுபோல், அவனுக்குரிய இம்மாநகரும் அழிவுறுதல் வேண்டும். ஆகவே, இம் மாநகரை அழிப்ப தால் என்மீது குற்றம் சாட்டல் முறையாகாது எனத் துணிந்து, மதுரை மாநகர்க்குத் தீயிட்டாள்; தீமூண்டு கொண்டது.

*"யான் அமர் காதலன் தன்னைத் தவறிழைத்த*
*கோன்நகர் சீறினேன் குற்றமிலேன் யான்."*

– சிலம்பு. 21: 41–42

மதுரை மாநகர், தவறிழைத்த மன்னவனுக்குரியதே என்றாலும், அவ் மாநகர் வாழ்வார் அனைவருமே தவறிழைத்தவராகிவிடார். ஒரு சில நல்லோர்களும் ஆங்கு இருத்தல் கூடும். அவரையும் உயிரிழக்கப் பண்ணுவது அறமாகாது. கணவனை இழந்த கலக்கத்தால், அதைக் கண்ணகி மறந்துவிட்டாள். ஆனால், அவள் ஏவ, மதுரையைப் பற்றி எரிக்கத் தொடங்கிய அங்கியங் கடவுள், அப்பழி அவளுக்கு உண்டாதல் கூடாதே என்ற எண்ணத்தால், அவள் முன்தோன்றி, பணிந்து நின்று, "பத்தினித் தெய்வமே! உன் ஏவல் மேற்கொண்டேன்; ஆனால், ஓர் ஐயம்; இம் மதுரையில், உன் சினத் தீக்குத் தப்பி உயிர்வாழ வேண்டியவர் யாரேனும் உளரோ? உளராயின், அவர்

யாவர் என அறிவிக்க வேண்டுகின்றேன்" என்று வினவ, அவள், "பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப் பெண்டிர், மூத்தோர், குழவி எனும் இவர்களை விட்டுத் தீயோர்களை மட்டுமே தீண்டி அழிப்பாயாக!" எனப் பணிக்க, அவள் பணித்தவாறே, அந்நல்லோர் உறையுளை நணுகாது, தீயோர் உறைவிடங்களை மட்டுமே தேடித் தீய்த்து ஒழித்தது. இவ்வாறு எரியும் ஏவல் கேட்கப் பணிகொள்ளும் அப் பத்தினித் தெய்வத்தின் பெருமைதான் என்னே!

*"மாலை எரியங்கி வானவன் தான்தோன்றி*
*மாபத்தினி! நின்னை மாணப் பிழைத்தநாள்*
*பாய்எரி இந்தப் பதியூட்டப், பண்டே ஓர்*
*ஏவல் உடையேனால்; யார் பிழைப்பார் ஈங்கு*
*என்னப்,*
*பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப் பெண்டிர்,*
*மூத்தோர், குழவி எனும் இவரைக் கைவிட்டுத்*
*தீத்திறத்தார் பக்கமே சேர்கென்று காய்த்திய*
*பொற்றோடி ஏவப், புகை அழல் மண்டிற்றே,*
*நல்தேரான் கூடல் நகர்."*
– சிலம்பு. 21: 49–57.

இவ்வாறு, கண்ணகியின் ஆணைக்கு அடங்கி அவள் ஏவல் கேட்ட இயற்கைகளே யல்லாமல், அவள் துயர் நிலைக்கு இரங்கிய இயற்கைகளும் உள என்கிறார், ஆசிரியர் இளங்கோவடிகளார்.

எயினர் சேரியைச் சேர்ந்த ஐயை கோட்டத்து வரிப்பாட்டும் கூத்தும் முடிய, மதுரை நோக்கிப் புறப்படத் துடித்தான் கோவலன். ஆனால், உடன்வரும் கவுந்தி அடிகள், வேனிற்காலத்து ஞாயிற்றின் கதிர்,

கண்ணகியால் தாங்கிக்கொள்ளலாகாக் கொடுமையுடையதாகும். மேலும், பாண்டியன் செங்கோல் சிறப்பால், அவன் நாட்டுக் கொடுவிலங்குகளும் கொடுமை செய்யா; ஆகவே, இரவு வந்ததும் வழிமேற் கொள்வோம் என்று கூற, மூவரும் ஞாயிற்றின் மறைவினை எதிர்நோக்கி இருந்தார்கள். அவ்வாறே ஞாயிறு மறைய, திங்கள், தன் விண்மீன் கூட்டங்களோடு எழுந்து பால் போலும் குளிர்வெண் நிலவைப் பொழியத் தொடங்கிவிட்டான். அம்மட்டோ! மலய மலையில் பிறந்து அம் மலைச் சந்தன மணத்தையெல்லாம் வாரிக்கொண்டு, மதுரையுட் புகுந்துவரும் தென்றலும் மெல்ல வீசத் தொடங்கிவிட்டது. பகற் போதில் தொழில் புரிந்தலைந்த உயிரனைத்தும் உறையுள் புகுந்து அடங்கலாயின. அது, அடிகள் இளங்கோவுக்கு, பகலெல்லாம் விழித்திருந்த நிலமகள், இரவுவர உறங்கப் போவதாகத் தோன்றியது. அவ்வாறு உறங்கப்போகும் நிலமகள், திங்களின் தண்ணொளியும், குளிர் தென்றலும் கண்ணகி மேனியை, ஆரத்தழுவுவதையும், ஆனால், அதுபோலும் தழுவலை என்றும் பெற்றுப் பயின்றறியாக் கண்ணகி, அத்தழுவலுக்கு நாணி நடுங்குவதையும் கண்ணுற்றாள். இது முதுவேனிற்காலம். கடந்துபோன இளவேனிற் காலத்தில், கோவலன் கண்ணகியை மறந்து, மாதவி மனையில் வாழ்ந்திருந்தான். அதனால், நொந்து துறவுள்ளம் உடையவளாகிவிட்ட கண்ணகி, மகளிர்க்கு இயல்பாக இன்பந்தருவனவாகிய எதிலும், நாட்டங் கொண்டிலள். மார்பில் மணக்கும் சந்தனக் குழம்பைப்

பூசிக் கொள்ளவோ, முத்து மாலையை அணிந்து கொள்ளவோ விரும்பினாளல்லள். கற்பிற் சிறந்தமையால் முல்லை மலர் மணம் மணக்கும் கூந்தலில் செங்கழுநீர் போலும் சிறந்த மலர் எதுவும் சூட்டிக் கொண்டிலள்; முற்றா இளந்தளிர்போலும் மேனியில், சந்தன மென்தளிராலும், பல்வண்ண மலர் இதழ்களாலும் ஆன இலையாடையைப் போர்த்திக் கொள்ளவும் மறுத்துவிட்டாள். கண்ணகியின் அத்தகைய துறவுள்ளத்தை உணர்ந்த நிலமகள், இன்று முதுவேனில் முழுநிலவும், பொதியமலைப் பூந் தென்றலும் தன் மேனியைத் தழுவப்பொறாது துடிக்கும் கண்ணகி நிலைக்கு இரங்கி, நெடு மூச்சுவிட்டு, திங்களைப் பார்த்து, அத்துணைத் துறவுள்ளம் உடையவளாகிய இவள்மீது, தென்றலோடு கூடி, உன் தண்ணொளியைச் சொரியவும், அந்தோ! விரும்பு கின்றனையே!" என நொந்து கூறி, அக்கொடுமையை மேலும் காணப்பொறாதே, கண்ணுறக்கம் கொண்டு விட்டாள்.

தன்னைக் கண்டு, நிலமகளும் நெஞ்சுருகும் அவ்வுயர்நிலை அடைந்த கண்ணகியின் நலந்தான் என்னே!

"தாரகைக் கோவையும் சந்தின் குழம்பும்
சீரிள வனமுலை சேராது ஒழியவும்,
தாதுசேர் கழுநீர்த் தண்பூம் பிணையல்
போதுசேர் பூங்குழல் பொருந்தாது ஒழியவும்,
பைந்தளிர் ஆரமொடு பல்பூங் குறுமுறி
செந்தளிர் மேனி சேராது ஒழியவும்,

*மலயத்து ஓங்கி, மதுரையில் வளர்ந்து*
*புலவர் நாவில் பொருந்திய தென்றலொடு*
*பானிலா வெண்கதிர் பாவைமேல் சொரிய,*
*வேனில் திங்களும் வேண்டுதி! என்றே,*
*பார்மகள் அயா உயிர்த்து அடங்கிய பின்னர்."*

– சிலம்பு. 13: 19–29.

*கவுந்தி, கோவலன், கண்ணகி ஆகிய மூவரும் வையையாற்றின் வடகரையை அடைந்தனர். மதுரை மாநகர்க்கு ஒருசார் அரணாக வளைந்தோடும் அவ் வையை ஆற்றில், இருகரையிலும் உள்ள மலர்ச் சோலைகளிலிருந்து உதிர்ந்த குரவம், கோங்கு, வேங்கை, வெண்கடம்பு முதலாம் பன்னிற மலர்கள், ஓடும் தண்ணீரின் உருவம் சிறிதும் தோன்றாவாறு மறைத்து மிதந்து சென்றன. அக் காட்சி, கண்ணகி உற்ற கொடுமை கண்டு உள்ளம் உருகும் வையை என்ற அப் பொய்யாக் குலமகள், ஆற்றுப் பெருவெள்ளம் போல் பெருகிவடியும் தன் கண்ணீரைக் கண்ணகி காண நேரின், அவள் உள்ளத்தில் ஒடுங்கிக் கிடக்கும் உறுதுயர் வெளிப்பட்டு அவளை வருத்துமே என்ற அச்சத்தால், அக் கண்ணீரை அவள் காணாவாறு மறைத்துக் கொள்ளவே, அம்மலராடையால், தன் மேனி முழுவதையும் போர்த்தி மறைத்துக்கொண்டது போல் தோன்றியது புலவர்க்கு; கண்ணகி நிலை கண்டு, ஆறு போலும் இயற்கைகளும் கண்ணீர் சொரிய வேண்டும் என்ற உணர்வு, இளங்கோவடிகளார் உள்ளத்தும்*

உண்டாகும் எனின், அவள் கற்பு மேம்பாடுதான் என்னே!

*"வையை என்ற பொய்யாக் குலக்கொடி,*
*தையற்கு உறுவது தானறிந்தனள் போல்*
*புண்ணிய நறுமலர் ஆடைபோர்த்துக்*
*கண்நிறை நெடுநீர் கரந்தனள் அடக்கிப்*
*புனல்யாறு அன்று இது; பூம்புனல் யாறு என!"*

– சிலம்பு. 13: 170– 174.

# 9

# பாராட்டிய சமயங்கள்

கண்ணகி வாழ்ந்த கடைச்சங்க காலம், தமிழகத்தில் பல்வேறு சமயங்களும் ஆழ வேரூன்றிப் பரவியிருந்த காலமாகும். சிவனை வழிபடு கடவுளாகக் கொள்ளும் சைவம், திருமாலை வழிபடு கடவுளாகக் கொள்ளும் வைணவம், அருகனை வழிபடு கடவுளாகக் கொள்ளும் சமணம், புத்தனை வழிபடு கடவுளாகக் கொள்ளும் பௌத்தம் ஆகிய நாற்பெரும் சமயங்களும் தத்தம் பெருமைகளைப் படியாத மக்கள் உள்ளத்திலும் பதியவைக்க வேண்டும் என்ற வேட்கை மிகுதியால், அவற்றை விளக்கும் பழங்கதைகளை, ஒன்றையொன்று விஞ்சும் வகையில் பாடிப் பாராட்டிக்கொண்டிருந்தன. இந்நாற்பெரும் சமயங்கள், தமிழகத்துப் பேரூர்களில் ஆட்சி புரிந்துகொண்டிருந்த அதே காலத்தில், தமிழகத்து எண்ணிலாச் சிற்றூர்களில், கொற்றவை வழிபாடு போலும் சிறு தெய்வ வழிபாட்டுச் சமயமும் குடிகொண்டிருந்தது. பால், வெண்மை எனும் ஒரு வண்ணமே உடையதாயினும், அப் பால் தரும் ஆக்கள் வேறு வேறு வண்ணம் உடையவாதல் போல், சமயங்களின் முடிவு ஒன்றே

யாயினும், அம் முடிவை அடைய மக்கள் மேற்கொண்டு ஒழுகிய சமய நெறிகள் இவ்வாறு பலப் பலவாயின. அச் சமயங்கள் பலவும் இறுதியில் தாம் எய்தும் முடிவு ஒன்றே என்பது கொண்டு, ஒன்றுபட்டு உறவாடிப் பழகுவதற்கு மாறாக, ஒன்றை யொன்று அழித்து ஆட்சிகொள்ள வேண்டும் என்ற பகையுணர்வே உடையவாகி, ஒன்றையொன்று இழிப்பதும், பழிப்பதும் மேற்கொண்டிருந்த காலம் அக்காலம்.

இவ்வாறு தம்முள்ளே மாறுபட்டு ஒன்றை யொன்று பழிப்பதும் இழிப்பதுமாயிருந்த அச் சமயங்கள் அனைத்தும், கண்ணகியைப் பாராட்டும் வகையில் ஒருமைப்பாடுடையவாய்த் திகழ்ந்தன.

கங்கைச் சடைமுடிக் கண்ணுதல் அருளால் பிறந்து அவன் பெருமை பாராட்டும் சைவ சமயநெறி தழுவி, தன் மணிமுடி மீது அப்பெருமான் பொன்னடி தாங்கி நின்றமையால், ஆடக மாடத்து அரவணைக் கிடந்த திருமாலின் சேடத்தைத் திருமுடிக் கொள்ளாது தோள்மீது கொண்ட செங்குட்டுவன், கண்ணகி சிலைக்காம் கல் கொணரவென்றே வடநாடு சென்று, அந்நாட்டு வேந்தர் பலரை வென்று, அவர் தலைமீதே கல் ஏற்றிக் கொணர்ந்து சிலை அமைத்து வழிபாடு ஆற்றிய நிகழ்ச்சியும், குன்றக் கரவை பாடிக் குமர வேளை வழிபடுவோராகிய குரவர், கான நறுவேங்கைக் கீழ் நின்ற கண்ணகியின் கற்புக் கோலம் கண்ட அளவே குரவை மறந்து, அவளை ஏத்திப் பாடிய நிகழ்ச்சியும் சைவ சமயத்தாலும் போற்றத்தக்க பொற்கொடியாய்ப் பொலிவுற்றாள் கண்ணகி என்பதைப் புலப்படுத்தி யிருப்பது காண்க.

திருமால், திருவரங்கத்தில் பாம்பணைப் பள்ளி மீது பாயல் கொண்டிருக்கும் திருக்கோலத்தினையும், வேங்கடத்து உச்சிக்கண், ஐம்படை ஏந்திநிற்கும் திருக்கோலத்தினையும் கண்டு களிக்கும் ஆர்வமே முன்னிற்கக் கன்னித் தமிழ் நாட்டினைக் கால் நடையாகவே கடந்து வரும் மாங்காட்டு மறையோன், வேனில் வெம்மை மிக்க போதில், பாலை எனும் பாழ்நிலத்தினூடே, கணவனைத் தொடர்ந்து கால் கடுக்க நடந்துவரும் கண்ணகியின் நிலை கண்டு கண்ணீர் உகுத்துக் கசிந்துருகும் காட்சியும், திருமால் சீர்கேளாத செவி, செவியாகாது, கண்ணனைக் காணாத கண், கண் ஆகாது, 'நாராயணா' என ஏத்தாத நா, நா ஆகாது, என்ற நினைப்பு உடையவராகிய ஆய்ச்சியரும், அவர்தம் தலைவியாம் மாதரியும் கண்ணகியைப் பாராட்டும் பண்பும் வைணவ சமயத் தாலும் வழிபடத் தக்க விழுமியோளாய் விளங்கினாள் கண்ணகி என்பதை விளக்கி நிற்றல் உணர்க.

சமண சமயத்தனாய் இரவு உண்ணா நோன்பு உடையனாய இல்லறத்தானுக்கு இட்டு வழங்கும் 'சாவக நோன்பி' என்னும் சிறப்புப் பெயரினை, இளங்கோவடிகளாரால் சூட்டப்படுமளவு சுத்த சமணனான கோவலன், கண்ணகியைக் "கற்பின் கொழுந்தே! பொற்பின் செல்வி!" எனப் போற்றி முடித்திருக்கும் பாராட்டு வாழ்த்து மடலும், அருக தேவனின் திருமொழி அல்லது பிறமொழி கேளாக் காதும், அவன் திருப்பெயர் அல்லது பிறர் பெயர் பழகா நாவும், அவன் திருவடிவம் அல்லது பிறவடிவம்

காணாக் கண்ணும், அவனுக்கு அல்லது பிறர்க்குப் பணிபுரியா மெய்யும், அவனை வணங்கவல்லது பிறரை வணங்கக் குவியாக் கையும், அவன்தாள் அல்லது பிறர் தாள் வணக்காத் தலையும், அவன் புகழ்க்கல்லது பிறர் புகழ்க்கு நெகிழா நெஞ்சும் கொண்ட அழுந்திய சமண அடிகளாய்த் தம் பெயரால் ஒரு பள்ளி அமைத்துச் சமயப் பணியாற்றி வந்த கவுந்தி, கண்ணகிக்குத் துணையாதல் கருதியே காட்டு வழியைக் கடக்கத் துணிந்ததோடு,

> "கற்புக் கடம்பூண்ட இத்தெய்வ மல்லது
> பொற்புடைத் தெய்வம் கண்டிலேன்"

எனக் கூறிய துணிவுரையும், அரசு வெறுத்து அருளறம் மேற்கொண்டு குணவாயிற் கோட்டத்தில் கோயில் கொண்டிருந்த இளங்கோவடிகளார், கண்ணகியின் வரலாற்றினை உலகோர்க்கு உணர்த்துவதற்கென்றே கன்னித்தமிழில் ஆக்கிய கற்கண்டு நிகர் காப்பியமும், கண்ணகி, சமணமும் சீர்பாடும் சிறப்புடையவளாய் வாழ்ந்தாள் என்பதற்குச் சாலச்சிறந்த சான்றுகள் ஆகாவோ?

மாதவர் உறையும் பௌத்தப் பள்ளி அடைந்து, அப்பள்ளி ஆசிரியர் அறவண அடிகள்பால் ஐவகைச் சீலத்து அமைதி கேட்டு, அறவழி மேற்கொண்ட மாதவி, கண்ணகியை, "கணவற்கு உற்ற கடுந்துயர் பொறாது காவலன் பேரூர்க் கனையெரி மூட்டிய மாபெரும் பத்தினி" எனப் பாராட்டியதோடு நில்லாது, மணிமேகலை தான் பெற்ற மகளே ஆயினும், அவளைக் கண்ணகி பெற்ற மகளாகவே மதித்து, அவளை, தன்குல

இயல்பிற்கேற்பத் திருந்தாச் செய்கைத் தீத்தொழில் புகுத்தாது, அருந்தவ நெறிப்படுத்திய அருஞ்செயலும், சமண இலக்கியமாம் சிலப்பதிகாரத்திற்கு நிகரான ஒரு பௌத்த இலக்கியம் இயற்றுதல் வேண்டும் என்ற ஆர்வமிகுதியால் தாம் ஆக்கிய மணிமேகலையில், அச்சமய உண்மைகளை அள்ளி அள்ளித் தரும் சீத்தலைச் சாத்தனார், கண்ணகியை, "மாபெரும் பத்தினி" எனப் பாராட்டும் பண்பும், கண்ணகி பௌத்த சமயமும் போற்றும் பெருமையுடையாள் என்பதற்குச் சான்று பகர்வனவாம்.

இவை போலும் பெரும் சமயநெறி நிற்கும் பெரியோர்களே யல்லாமல், கொற்றவையைக் குல தெய்வமாகக் கொண்டு குருதிப் பலிகொடுத்து வழி பாடாற்றும் சிறு தெய்வ வழிபாட்டாளரும் கண்ணகியை வழிபட மறந்தாரல்லர். தம் குலதெய்வ வழிபாடாற்ற முனைந்த வேடுவர், கண்ணகியைக் கண்ணுற்ற அளவே, தம் வழிபடு கடவுளாம் கொற்றவையை மறந்து, இவளைச் சூழ்ந்துகொண்டு, இவள் கேட்டு நாணுமளவு, "தமிழ்ப்பாவை, தவக்கொழுந்து, திருமாமணி" எனப் பலபடப் பாடிப் பரவிய பாராட்டுரைகள், சிறு தெய்வ வழிபாட்டாள ராம் வேட்டுவர் உள்ளத்திலும் கண்ணகி வீற்றிருந்தாள் என்பதற்கு விளக்கம் உரைப்பன ஆகாவோ?

இவ்வாறு 'எம் தெய்வம் பெரிது; உம் தெய்வம் சிறிது' என ஓயாது பூசலிடும் பல்வேறு சமயத்தவ ராலும் ஒரு சேரப் பாராட்டும் பெருந்தெய்வமாய்ப் பெருமையுற்றாள் கண்ணகிப் பெருந்தேவி.

# 10

# பாராட்டற்குரிய பண்புகள்

**க**ண்ணகியை மாதரார் தொழுதேத்தினார்கள்; மாதவத்தாட்டி பாராட்டிப் புகழ்ந்தாள்; ஆன்றோர் போற்றினார்கள்; அறவோர் போற்றினர்; வேந்தர்கள் வணங்கி வழிபட்டார்கள்; பல்வேறு சமயங்களும் பாராட்டின. இத்தனைக்கும் காரணமாக அவள்பால் பொருந்தியிருந்த பண்பும் பெருமையும் யாவை? இந்த வினாவிற்கு விடை ஓரிருவரிகளில் கூறிவிட இயலாது; எனினும், அப்பண்புப் பெருமைகளுள் ஒரு சில கண்டு மகிழ்வோமாக.

## அருள் உள்ளம்

தன்னோடு தொடர்பும் உறவும் உடையவர்பால் காட்டும் உள்ள நெகிழ்ச்சி அன்பு எனப்படுமாயின், ஒரு சிறிதும் தொடர்பு இல்லாதவர்பால் காட்டும் உள்ள நெகிழ்ச்சி அருள் எனப்படுமாதலின், அன்பைக் காட்டினும் சிறந்தது அருள். அத்தகைய அருளையே ஆன்றோர்கள் அருநிதியாக மதித்துப்போற்றுவார்கள். ஏவல் இளையவர்களையும், எடுபிடி ஆட்களையும்

ஏராளமாகக் கொண்டு, ஆணைமேல் ஆணைகள் இட்டு அவர்களை ஆட்சி புரியவும், எண்ணிய இடங்களை எண்ணிய பொழுதில் அடையவல்ல ஊர்திகள்மீது அமர்ந்து உலாவரவும் உதவும் வாழ்வு வளம் உண்மையான செல்வமாகாது. மாறாகத் தம்மைச் சூழ வாழ்வார் துயர்உற நேர்ந்தபோது, அவர் துயரைத் தம் துயராக்கொண்டு நெஞ்சுருகுவதும், அத்துயர் துடைப்பதும் ஆகிய இரக்க உள்ளமும் இனிய செயலும் உடைமையாம் பண்பே பெறற்கரும் பெருஞ் செல்வமாம் என மதிப்பார்கள் சான்றோர்கள் என்று கூறுகிறார் ஒரு பெரியார்:

"நெடிய மொழிதலும், கடிய ஊர்தலும்
செல்வம் அன்று;...
சான்றோர் செல்வம் என்பது, சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வம், செல்வம் என்பதுவே."

சான்றோர்கள் மதிக்கும் அச்செல்வத்தினும் சாலச் சிறப்புடைய செல்வத்தைப் பெற்றிருந்தாள் கண்ணகி. அவள் உள்ளம், தொடர்பு அற்றவர்தம் துயர்நிலை காணினும் துவண்டு துடிக்கும் தனிச் சிறப்பு வாய்ந்தது.

"இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு."

என்ற வள்ளுவர் வகுத்த இலக்கணத்துக்குத் தானே இலக்கியமாகத் திகழ்ந்தவள் கண்ணகி. கவுந்தி அடிகள் முன்னே செல்லக் கணவனோடு காட்டுவழியைக்

கடந்து கொண்டிருந்தாள் கண்ணகி. அப்போது அவ்வழி வந்த வம்பப் பரத்தர் சிலர், அடிகளாரை அணுகி, கண்ணகியையும் கோவலனையும் சுட்டிக்காட்டி, "யார் இவர்?" என்று வினவ, அடிகளார், "என் மக்கள் காணீர்!" என விடையிறுத்த அளவே, அவ் வம்பப்பரத்தர், "ஒரு தாய் வயிற்றில் பிறந்தோர் கணவனும் மனைவியுமாதல் உண்டோ?" என எள்ளி நகையாடிக் கேட்டனர். அவ்வம்புரை கேட்டுக் கண்ணகி கலங்கிவிட்டாள்; கண்ணகியின் கலக்கம் கண்டதுமே, கவுந்தி அடிகளார்க்குக் கடுஞ்சினம் பிறக்க, "முதுநரி ஆகுக" எனச் சாபம் இட்டார்; வம்பப்பரத்தரும் முதுநரி ஆக மாறிக் கூக்குரல் எழுப்பியவாறே ஓடத் தொடங்கினர்; அது கண்டாள் கண்ணகி; அவள் உள்ளம் கலங்கிவிட்டது; தன் மனம் நோகப் பண்ணியவர் என்பதை அறவே மறந்தாள்; அடிகளாரை அணுகி,

"நெறியின் நீங்கியோர் நீரல கூறினும்
அறியாமை என்று அறியல் வேண்டும்"

என்று அறநெறியைச் சுட்டிக்காட்டி, "அம்மையே! உம் திரு முன் பிழை புரிந்தோர்க்கு உய்திக்காலம் உரையீரோ?" என வேண்டிக்கொண்டாள். கவுந்தியும் ஒருவாறு சினம் தணிந்து சாப விடை தந்தார். இவ்வாறு, இன்னா செய்தார்க்கும் இனியவே செய்த கண்ணகியின் பேரருட் பெருமையை உணர்ந்தார், அவளை, உளமாரப் பாராட்டாது ஒழிவரோ?

## மனையற மாண்பு

*மனைத்தக்க மாண்புடையளாதல் நல்ல மனைவிக்கு அழகு; அம்மனையற மாண்புகளில், தற்கொண்டான் வளத்தக்காள் ஆதலும், தற்கொண்டான் பேணலும், இருவர் மாட்டும் தகைசான்ற சொற்காத்தலும் தலையாய மாண்புகளாம். கூறிய இம்மூன்று மாண்புகளும் கண்ணகிபால் குறைவறக் குடிகொண்டிருந்தன. மாதவி உறவை மறந்து தன்மனை திரும்பிய கோவலன், "என் குலத்தவர் வழி வழியாக ஈட்டித்திரட்டி வைத்திருந்த வான்நிதிக் குவியலைத் தொலைத்து வறியனாகி வந்து நிற்கும் நிலைக்கு நாணுகிறது என் உள்ளம்" என்று கூறியதும், அவன் வாழ்வு, தன் வாழ்வு; அவன் தாழ்வு தன் தாழ்வு என்ற உணர்வு உண்மையால், கணவன் வறுமையுற்று வாடி நிற்கும்போதும், விலை மதிக்கவொண்ணா அணிகலனாம் காற்சிலம்பைத் தன்னிடமே வைத்துக்கொள்வது கூடாது என்று உணர்ந்து, உடனே, "சிலம்புள கொண்மின்" எனச் சிரித்த முகத்தோடு கூறிக் கொடுத்ததும், சிலம்பு பெற்ற கோவலன், தன் வாணிகத்துக்கு வேண்டும் முதலீடு பெறுவான் வேண்டி, அவற்றை மதுரை சென்று விற்க எண்ணியதும், தானும் அவனுடன் செல்லத் துணிந்ததும் கண்ணகியின் தற்கொண்டான் வளத்தக்க வாழ்வினளாம் பண்பிற்கு நல்ல எடுத்துக்காட்டாகும் அல்லவோ?*

கணவனுக்கு அவன் விரும்பும் உண்டி முதலாயின அளித்தும், அவனுக்கு ஒரு துயர் வந்தபோது, தன் துயர் மறந்து, அவன் துயர் தீர்க்கப் பணியாற்றியும், கணவனைப் பேணுதல், மனைவிக்கு இன்றியமையாப் பெருங்கடனாம்.

கணவன் விரும்பியுண்ணும் உணவு புளிக்குழம்பு என்பதையும், அக்குழம்பினையும் பிறர் செய்யின், அவன் உண்ணும் சுவை உண்டாகச் செய்யார் என்பதையும் அறிந்த ஒரு பெண், அதைத் தானே ஆக்கத் தொடங்கினாள். 'பாறைபடு தயிர்' எனக் கூறுமாறு இறுகித் தோய்ந்திருந்த தயிரை எடுத்துத் தன் கையிட்டுப் பிசையத் தொடங்கினாள்; அந்நிலையில் அவள் ஆடை சிறிதே சரிந்தது; அந்த ஆடையோ, மாசுபோகக் கழுவப் பெற்ற கையால் மட்டுமே தொடத்தக்க மென்மையும் தூய்மையும் வாய்ந்த அருவிலை ஆடையாகும். உணவை விரைவில் ஆக்குதல் வேண்டும் என்ற ஆர்வமிகுதியால், ஆடையின் அருமையை மறந்தாள்; தன் கை தயிர் பிசைந்த கறையோடு கூடியது என்பதையும் மறந்தாள்; அக் கறைபடு கையாலேயே ஆடையைச் சரிசெய்து கொண்டாள். அடுப்பருகே அமர்ந்தாள். புகை தன் கண்களைத் தாக்குவதையும் பொருட்படுத்தாது தாளித்துத் துழவி முடித்தாள். கணவன் முன் அமர்ந்து அவன் உண்ண உண்ணப் படைத்தாள். அவனும், "குழப்பு நன்று: மிகமிக நன்று" எனப் பாராட்டுரை களைப் பகர்ந்து கொண்டவாறே உண்ணலாயினன்;

அவன் பாராட்டு அவள் உள்ளத்திற்கு அளவிலா இன்பம் அளித்தது; அவ்வின்ப உணர்வு, சிறுநகை உருவில், அவள் கடைவாய் வழித்தோன்றிக் காட்சி அளித்தது; இவ்வரிய காட்சியைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார் புலவர் கூடலூர்கிழார்:

"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிது எனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே."

பழந்தமிழ்ப் பெண் ஒருத்தி, புலவர் கூடலூர் கிழார்க்கு அளித்த இவ்வின்பக் காட்சியைக் கண்ணகி, ஆயர் முதுமகள் மாதரிக்கும் அவள் மகள் ஐயைக்கும் காட்டி இன்பம் ஊட்டியுள்ளாள். கண்ணகியைத் தன் மனைக்குக் கொண்டு சென்ற மாதரி, சாலி நெல்லரிசி, பலாக்காய், வெள்ளரிக்காய், மாதுளங்காய், மாங்கனி, வாழைக்கனி, பால் முதலாம் சமைத்தற்குரிய பொருள்களைக் கொடுத்தாள். அவை கொண்ட கண்ணகி, அரிவாள்மணைமுன் அமர்ந்து, தன் மெல் விரல்கள் சிவக்கவும் பொருட்படுத்தாமல் காய்கனி வகைகளை அரிந்து கொண்டு, அடுப்பின் முன் அமர்ந்து கண்கள் சிவக்க, முகம் வியர்க்கச் சோறாக்கி முடித்து, பனையோலைப் பாய்மீது கோவலனை அமர்த்தி, அவன் அடிகளைக் கழுவி வழிபாடாற்றிய பின்னர், அவன்முன் வாழை இலையை விரித்து,

அறுசுவை உணவைப் படைத்து, அருகில் அமர்ந்து ஊட்ட, உண்டு முடித்த கணவனுக்கு வெற்றிலை பாக்கை மடித்துக் கொடுத்துப் பணிவிடை புரிந்தாள். இக்காட்சியைக் கண்ணுற்ற மாதரியும், மகள் ஐயையும், “நம்பி, நம்குலத் தெய்வமாம் கண்ணனோ? நங்கை, அக்கண்ணன் துயர்தீர்த்த நப்பின்னையோ?” என வியந்து பாராட்டி மகிழ்ந்தார்கள்.

பிறந்த பொன்னகராம் புகார்விட்டு மதுரை நோக்கிக் கணவனோடு புறப்பட்ட கண்ணகி, அன்று வரை மண்ணில் கால் வைத்தறியா மாளிகைவாசி யாகவே இருந்த தனக்குக் கொடுவெனிற் காலத்தில் கால் கொப்புளிக்கக் காட்டு வழியைக் கடப்பது கடுந் துன்பமாகவே இருப்பினும், அந்நிலையிலும் தன் துன்பத்திற்காகத் துவளாது, உடன்வரும் தன் கணவனாம் கோவலன், செல்வச் செருக்கில் சிறக்க வாழ்ந்திருப்பதற்கு இயலாது, இவ்வாறு வந்து இடர் உற நேரிட்டதே எனக் கணவன் துயர்நிலை கண்டே கலங்கினாள்; கவன்றாள்; கண்ணீர் சொரிந்தாள். கண்ணகியின் இப்பண்பு,

*. . . . . . . . . . . . . . . . . . நங்கைதன்*
*வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்;*
*கடுங்கதிர் வெம்மையின் காதலன் தனக்கு*
*நடுங்குதுயர் எய்தி நாப்புலர வாடித்*
*தன் துயர் காணாத் தகைசால் பூங்கொடி”*

– சிலம்பு. 15: 137–141

எனக் கவுந்தி அடிகளாரராலும் பாராட்டப் பெறுவதா யிற்று.

கணவன் விரும்பும் உணவாக்கிப் படைத்ததும், தன் துயர் காணாது கணவன் துயர்க்குக் கலங்கியதும் ஆகிய இவ்விரு செயல்களும், கண்ணகிபால் பொருந்தி யிருந்த தற்கொண்டான் பேணற் பண்பிற்குப் பொருந்தும் சான்றுகள் ஆகாவோ?

கற்புடைய மகளிர் இயல்பை உணர்ந்தவள் கண்ணகி. கணவன் இறந்தான் என்ற செய்தி கேட்ட அக்கணமே, தன் உயிர்கொண்டு அவன் உயிர் தேடுவாள்போல் உயிர் இழந்து போவாளும், அவ்வாறு உடனுயிர் பிரியாதாயின், கணவனை இழந்து கணப்போதும் வாழ நினையா மனம் உடைமையால், கணவன் உடலுக்கு ஊட்டிய எரியில் உடன் வீழ்ந்து உயிர்துறப்பவளும், அதுவும் இயலாத நிலையில் இப்பிறவியில் இழந்த உடனுறை வாழ்வு மறு பிறவியி லாவது குறைவற வாய்க்கவேண்டும் என்ற வேட்கை யால் கைம்மை நோன்பு மேற்கொள்பவளும் ஆகிய இம் மூவருமே கற்புடைய மகளிர் என மதிக்கத் தக்கவர்தாம் என்றாலும், இம்மூவருள், தலையாய கற்புடையவள் என மதிக்கத்தக்கவள், உடன் உயிர் இழப்பவள்தான் என்பதைக் கண்ணகி அறிவாள். அறிந்தவளாயின், கோவலன் கொலையுண்டான் என்ற செய்தி கேட்ட ஆயர்பாடியிலேயே, கேட்ட அக்கணமே உயிரிழந் திருக்க வேண்டாமா என்ற வினா எழல்கூடும். அவ்வாறு உயிர் இழப்பதில் தன் பெருமை உயரும்

என்பதை உணர்ந்த அதே நிலையில், அவ்வாறு உயிர் இழப்பதால் நல்ல மனைவி ஆற்ற வேண்டிய ஓர் அரிய கடமையை ஆற்றத் தவறிவிட்டாள் என்ற பெரும்பழி தன்னை வந்தடையும் என்பதையும் உணர்ந்தாள். தன் உயர்வு பற்றிய காதலினும், தன் மனையறம் பற்றிய கடமையுணர்வு ஆற்றல் மிகுந்ததாகிவிடவே, அப்போது உயிர்விட்டிலள். கோவலன் இறந்துவிட்டான். இறப்பு இயல்பாக நேரவில்லை. கொலை செய்யப்பட்டான்; கொலையும், செய்த குற்றத்துக்குத் தண்டமாக நேர்ந்தது அன்று. குற்றம் புரியாதபோது, குற்றம் புரிந்ததாகப் பொய்க்குற்றம் சாட்டப்பெற்றுக் கொலை செய்யப் பட்டுளான். தன்மீது சுமத்தப்பட்ட அப்பழியை அவனால் இனி துடைக்க இயலாது. அந்நிலையில் தானும் உயிரிழந்துபோனால், கணவன்மீது சுமத்தப் பட்டது வீண்பழியே எனினும், உலகம் அதை உண்மை யென்றே நம்பும். அதனால் 'குலத்திற் குன்றாக் கொழுங்குடிச் செல்வனாம் மாசாத்துவான் குடிக்கும் பெரும்பழி வந்து அடையும். மாசாத்துவான்குடி, கோவலன் பிறந்த குடி மட்டுமன்று. தான் புகுந்த குடி. குடிப் புகழ் பெருகப் பணியாற்ற வேண்டியதை விடுத்து, அக்குடிக்குப் பழி உண்டாக்குவதோ, அக்குடிக்கு நேர இருக்கும் பழி துடைக்க எண்ணாது, தன் புகழ் காக்க நினைப்பதோ கூடாது. தன்மாட்டும் தன் கணவன் மாட்டும் புகழ் பெருகப் பணியாற்றுவதே தன் கடமை; ஆகவே, தான் பழியிலான், தான் கள்வன் அல்லன் என்பதைத் தன்னால் நிலைநாட்ட முடியாது தன்

கணவன் இறந்துவிட்ட அந்நிலையில், அக்கடமையைத் தான் செய்து, குடிப்பழி துடைத்துக் கோவலன் குற்றம் அற்றவன்; களவாடக் கல்லாதவன் என்பதை உலகிற்கு உணர்த்துவதே தன் முன்னிற்கும் முதற்பெரும் கடமை என்பதை உணர்ந்தாள். அதனால், கணவன் மறைவு கேட்ட அக்கணமே உயிர் துறந்துவிடாது, மன்னன்முன் வழக்காடிக் கோவலன் குற்றமிலான் என்பதையும் நிலைநாட்டி, ஆராய்ந்து முறைசெய்ய மறந்த குற்றத் திற்காக மன்னன் உயிர்குடித்தும், மாநகர் எரியூட்டியும் அரச முறையையும் காத்து, பின்னர்க் கணவனோடு இரண்டறக் கலந்து, "தகைசான்ற சொற்காத்தல்" என வள்ளுவர் வகுத்த இலக்கணத்திற்கு நல்ல இலக்கிய மாகிச் சிறப்புற்றாள். கண்ணகியின் இப்பெருஞ் செயலை மாதவி,

*"கணவற் குற்ற கடுந்துயர் பொறாஅள்*
*மணமலி கூந்தல் சிறுபுறம் புதைப்ப*
*... ... ... ... ...*
*காவலன் பேரூர் கனையெரி மூட்டிய*
*மாபெரும் பத்தினி."*

– மணி. 2 : 50–55.

எனப் பாராட்டுவதும் அறிக.

இவ்வகையால், கண்ணகி, மனையற மாட்சி மிக்க மாண்புடையளாயினாள் என்பது தெற்றென விளங்குவ தாயிற்று.

## புகழ்கேட்டு நாணுதல்

பெண்மைக்குப் பெருமைதரும் பண்புகளுள் நாணமும் ஒன்று.

"அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த
நிச்சமும் பெண்பாற்கு உரிய."

என்கிறார் ஆசிரியர் தொல்காப்பியனார். நற்குடி மகளிர்க்கு நாண் உயிர்போன்றது; ஏன், உயிரினும் சிறந்தது. நாணிலா மகளிர், உயிரிலா மட்பாவைக்கு நிகராவர். அத்தகையவர், தம்மிடம் பெருமைக்குரிய பண்புகள் எவ்வளவுதான் மிகுதியாக நிறைந்து கிடப்பினும், அவற்றைப் பலரும் அறியப் பறை கொட்டித் திரியாது, தமக்குள்ளாகவே அடக்கி வைத்திருக்கவே விரும்புவர். அப்பெருமைகளை அறிந்தவர், அவற்றைத் தம் முன்னாகவே எடுத்துக் கூறிப் புகழத் தலைப்படின் அதுகேட்டு இறுமாந்து நில்லார். அதற்கு மாறாகப், பிறர் புகழப் புகழ இவர்கள் நாணித் தலைகுனிந்து கொள்வர். இதுதான் பெரி யோர்க்கு அழகு.

"பணியுமாம் என்றும் பெருமை; சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து."

என்கிறார் வள்ளுவர். பெருமை குனிந்து காட்டும்; சிறுமை நிமிர்ந்து காட்டும் எனக் கூறும் வள்ளுவர் வாக்கிற்கு, பெருமை எனும் சொல்லில் இடையின ரகரம் இடம் பெற, சிறுமை என்னும் சொல்லில் வல்லின றகரம் இடம்பெறுவதாம் எடுத்துக்காட்டு,

அக்குறளிலேயே இடம் பெற்றுள்ள நயம் அறிந்து இன்புறற்கு உரித்து. நிற்க, மாலை வரக்கண்டு மரத்து இலைகள் குவியக் கிளைகள் தாழ்ந்து தோன்றும் மரக்காட்சிக்குப் புகழ் கேட்டுத் தலைவணங்கும் சான்றோர் நிலையை உவமை கூறும் முகத்தான், சான்றோர்தம் இயல்பை விளக்கி யுள்ளார் ஒரு புலவர்.

*"தம் புகழ் கேட்டார்போல் தலைசாய்த்து மரம் துஞ்ச."*

– கலி. 119 : 6

போர்க்களத்தில் தான் காட்டிய பெருவீரச் செயல்களைப் பலரும் கூடியிருந்து பாராட்டப் பாராட்டக் கேட்டுத் தலைவணங்கிய வீரன் ஒருவனை அறிமுகம் செய்துள்ளார் புலவர் அரிசில்கிழார்.

*"பரந்தோரெல்லாம் புகழத்*
*தலைபணிந்து இறைஞ்சியோனே குருசில்."* – புறம். 285.

சான்றோர்கள், இவ்வாறு புகழ் கேட்டவழி நாணுவது மட்டுமன்று; புகழ்வதற்கு முன்பேகூட, புகழ்வார்கள் என்பதை எதிர்பார்த்த அளவிலேயே நாணிவிடு வார்கள் என்கிறார் மற்றொரு புலவர்:

*"சான்றோர் புகழும் முன்னர் நாணுப."* – குறுந். 252.

பெருமைக்கும் உரனுக்கும் உரியவர் எனக் கருதப் பட்ட ஆடவரிடத்திலேயே இப்பண்பு அமைய வேண்டும் என்றால், தம்பால் பொருந்த வேண்டிய பண்புகள் பலவற்றுள் நாணையும் ஒன்றாகக் கொண்ட பெண்டிர்பால், அந்நாண் அமைய வேண்டுவது மிகமிக

இன்றியமையாதது அல்லவோ? அப்பண்பைக் கண்ணகி நல்லாள், குறைவறப் பெற்றிருந்தாள்.

கவுந்தி அடிகளாரோடும் கணவனாம் கோவல னோடும் மதுரைக்குப் புறப்பட்ட கண்ணகி, இடை வழியில், எயினர் சேரியைச் சேர்ந்த ஐயை கோட்டத்தில், வழிநடை வருத்தம் தீர, சற்றே இளைப் பாறியிருந்தாள். அப்போழ்து, தெய்வம் ஏறப் பெற்றவாளாகி, ஐயை கோட்டம் புகுந்த தேவராட்டி, ஆங்குக் கணவனோடு இருந்த கண்ணகியைக் கண்ணுற்ற அளவே, "இதோ, ஈண்டு வீற்றிருக்கும் இவள், கொங்கு நாட்டுக் கொற்றவை; குடநாட்டு அரசி; செந்தமிழ்ப் பெருந்தெய்வம்; தவத்தின் திருவுருவம்; உலகில் பெண்ணுருவம் தாங்கி வந்த திருமாமணி" என்றெல்லாம் கூறி வாயாரப் பாராட்டிப் பரவினாள். கவுந்தியும் கணவனும் ஆகிய இருவர் முன்னிலையில், தேவராட்டியைப் பின்தொடர்ந்து வந்த எயினர் கூட்டத்தின் இடையில், தேவராட்டி அவ்வாறு தன்னைப் பாராட்டுவது கேட்ட அளவே, கண்ணகி யின் உள்ளம் நாணிவிட்டது. அவள் தலை குனிந்து விட்டது. அவளால் அவர்கள் முன்நிற்கவும் முடியா தாகிவிட்டது. உடனே, அவள் கணவனுக்குப் பின் புறமே சென்று மறைந்து கொண்டாள். அதுமட்டு மன்று; அவ்வாறு மறைந்துகொள்ளச் செல்வாள் வறிதே சென்றாளும் அல்லள். "தேவராட்டி தெளிந்த அறிவோடு கூறினாளல்லள்; தெய்வம் ஏறப்பெற்ற மயக்கத்தால் ஏதேதோ பிதற்றிவிட்டாள்" என்று,

அப்புகழ் உரைகளை ஏற்றுக் கோட்டலை மறுப்பாள் போல் கூறிக் கொண்டே சென்று மறைந்தாள். கண்ணகியின் இச்செயல், "சான்றோர் புகழும் முன்னர் நாணுப" என்ற சான்றோர் இலக்கணத்திற்கு நல்ல இலக்கிய மாதல் காண்க.

"இவளோ, கொங்கச் செல்வி; குடமலையாட்டி;
தென்தமிழ்ப் பாவை; செய்த தவக் கொழுந்து;
ஒரு மாமணியாய் உலகிற்கு ஓங்கிய
திருமாமணி எனத் தெய்வம் உற்று உரைப்பப்
பேதுறவு மொழிந்தனள் மூதறிவாட்டி என்று
அரும்பெறற் கணவன் பெரும்புறத்து ஒடுங்கி."

– சிலம்பு. 12 : 47–52

## தன்னிற் சிறந்தாரைத் தான் போற்றல்

தம்மைப் பிறர் புகழக் கேட்க நேர்ந்த வழி நாணித் தலைகுனியும் சான்றோர், தம்மினும் சிறந்தாரைப் பாராட்டி வழிபடின், அது அவர் பெருமையைப் பன்மடங்கு மேலும் உயர்த்தும். ஒருவற்கு அணியாவன பணிவுடையவன் ஆதலோடு இன்சொலன் ஆதலும் ஆம் என்கிறார் வள்ளுவர். இப்பண்பும் கண்ணகிபால் பொருந்தியிருந்தது. மாதரார் தொழுதேத்தும் மாண்புடையளாய்த் திகழ்ந்த கண்ணகி, தான் பிறந்த புகார்நகரில் பிறந்து, சிறக்க வாழ்ந்து, பிறந்த பேரூர்க்குப் பெருமை தேடித் தந்த பெண்டிர்பால் மதிப்பும் மாறா அன்பும் கொண்டு பாராட்டிப் பெருமை செய்துள்ளாள்.

தான் பிறந்த புகார் நகரம், அடாதன செய்தாரை அழிக்கவும், இயற்கையை ஏவல் கொள்ளவும் வல்ல பெண்டிர் பலரை ஈன்ற பெருமையுடையது எனக் கூறுமுகத்தான், அத்தகைய பெருமைகளோடு வாழ்ந்த மங்கையர் எழுவர் வரலாற்றை நிரலே கூறி, அன்னார் பிறந்த பதியில் பிறந்தவள் நான்–"மட்டார் குழலார் பிறந்த பதிப் பிறந்தேன்"–எனக் கூறும் கண்ணகி குரலில், வீர வழிபாட்டுணர்ச்சி வீறுகொண்டு வெளிப்படல் காண்க.

## கோலம் கொள்ளாமை

உயர்ந்த காதலும் உள்ளன்பும் உடைய மகளிர், தாமும் தன் உடைமையும் தன் கணவர்க்கே உரியவாம் என எண்ணுவர். தம் இயற்கை எழிலும், அதை ஆடை அணிகளால் மிகுதிப்படுத்திக் காட்டும் செயற்கை அழகும் கணவர் கண்டு மகிழவே எனக் கருதுவர். அவ்வெண்ணம் அவர் உயிரோடு ஒன்று கலந்து விடுவதால் கணவன்மார், தம்மைவிட்டுப் பிரியாது கலந்து வாழும் காலத்தில் தம்மை ஆடையாலும் அணியாலும், மலராலும் மணப்பொருளாலும் அழகு செய்து மகிழ்வதும், பொருள் தேடல் முதலாம் காரணம் கருதிக் கணவன்மார் தம்மைப் பிரிந்திருக்கும்போது, அத்தகைய அழகு எதுவும் மேற்கொள்ளாமையும் செய்வர்.

பொருள் தேடிப் போயிருந்த ஓர் இளைஞன் வினை முடித்து மீண்டு வீடுநோக்கி வந்துகொண்

டிருந்தான். மீள்வோன், தன் வரவை எதிர்நோக்கிக் காத்துக்கிடக்கும் காதலி, "வருவதாக வாக்களித்துச் சென்ற காலம் வரவும் காதலன் வந்திலனே!" எனக் கலங்குவாள். வினைமுடித்து வீடு நோக்கி வந்து கொண்டிருப்பதை அவள் அறியின், அவள் கவலை நீங்கி மகிழ்வாள். வரவை எதிர்நோக்கி இருப்பவள், சேய்மைக்கண் வரும் தன் தேரைக் காண இயலாது போயினும், அத்தேரில் கட்டிய மணியொலி கேட்டு வரவுணர்ந்து மகிழ்வாள். ஆனால், மணியொலி கேட்பதோ இப்போது இயலாது. கார்காலத்துப் புதுமழை பெய்யக் களித்திருக்கும் தவளைகள், அக்களிப்பு மிகுதியால் ஓயாது கத்திக் கத்தி எழுப்பும் ஒலி, அம்மணியொலியைக் கேளாவாறு செய்து விடுமோ எனக் கலங்கினான். உடனே, உடன்வரும் ஏவல் இளையர் சிலரை அழைத்து, தன் வருகையை விரைந்து சென்று அறிவிக்குமாறு போக்கினான். அவர்களும், காதலன் வருகையை எதிர் நோக்கிக் காத்துக் கிடப்பவள்பால் சென்று, அவன் வருகையை அறிவித்தனர். அச்செய்தி கேட்டு மகிழ்ந்தது அவள் உள்ளம்; மலர்ந்தது அவள் முகம்; மயிரின் மாசுபோக நீராடுவதும் செய்யாது அவன் வருகையை எதிர்நோக்கி யிருந்தவள், அவன் வருகிறான் எனும் செய்தி கேட்ட அக்கணமே விரைந்து சென்று நீராடினாள்; மாசு நீங்கிய மயிரில் எண்ணெய் தடவி வாரி முடித்தாள். முற்றத்தில் உள்ள செடியில் மலர்ந்திருக்கும் மணம் வீசும் மலர்கள் சிலவற்றைப் பறித்துத் தன் கூந்தலில்

சூட்டிக்கொண்டாள். அந்நிலையில் அவனும் வந்து விட்டான். காதலனைக் கண்ட மகிழ்ச்சி கட்டுக் கடங்காததாயிற்று. தன்னை மறந்தாள். மயிர் முடித்து மலர் சூட்டி நிற்பதையும் மறந்தாள். அப்படியே உடல் குழைய, கூந்தல் குலைய ஓடி, அவனைத் தழுவிக் கொண்டாள். இந்த இன்பக் காட்சியைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார் ஒரு புலவர்:

> "பழமழை பொழிந்த புதுநீர் அவல
> நாநவில் பல்கிளை கறங்க, நாவுடை
> மணியொலி கேளாள் வாணுதல்; அதனால்
> ஏகுமின் என்ற இளையர் வல்லே
> இல்புக்கு அறியுநராக, மெல்லென
> மண்ணாக் கூந்தல் மாசறக் கழீஇச்
> சில்போது கொண்டு பல்குரல் அழுத்திய
> அந்நிலை புகுதலின், மெய் வருத்துறாஅ
> அவிழ்பூ முடியினள் கவைஇய
> மடமா அரிவை மகிழ்ந்து அயர் நிலை."

பெண்டிர், கணவன் இல்லாக் காலத்தில், தம்மை அணிசெய்து கொள்ளா அந்நிலையோடு நின்றுவிட வில்லை. அவன் இல்லாதபோது இயல்பாகப் பெற்றிருக்கும் தம் அழகை இழந்துவிடவும் துணிந்து முன்வந்தனர். "கணவன் மகிழ்தற்கு இல்லா என் அழகு கெட்டுப் பேய் வடிவு உடையேன் ஆக அருளுக!" என வேண்டி அப்பேய் வடிவம் பெற்றாள் ஒரு பெண். கடல் கடந்துபோன கணவன் வருமளவும் அழகு முகம் இழந்து குரங்கு முகம் பெற்று வாழ்ந்தாள் ஒரு பெண்.

பொருள் தேடி வருதல், புகழ் ஈட்டி வருதல்போலும் காரணமாகக் கணவன்மார் ஒரு சில திங்கள் பிரிய நேர்வதற்கே, மகளிர், அவ்வாறு கோலங் கொள்ளாமையும் குரங்கு முகம் ஆக்கிக் கோடலும் மேற்கொள்வர் என்றால், கணவன் தன் காதலை அறவே மறந்து கணிகையர் தொடர்பு கொண்டு விட்டான் என்பது அறிந்த கண்ணகிபால், கோலங் கொள்ளா அப்பண்பு அமையாது போய்விடுமோ?

கோவலன், தன்னோடு உடனுறை வாழ்க்கை மேற்கொண்டிருந்தபோது, "உன் அழகுக்கு அழகுதர மங்கல அணி ஒன்றே போதுமானதாகவும், வேறு அணிகளை அணிவித்தது ஏனோ? சில மலர் சூட்டவே பேரழகு செய்யும் உன் கூந்தலில் மலர்களை மாலை மாலையாகச் சூட்டியது ஏனோ? அகிற்புகை ஊட்டிய தால் எழும் நறுமணம் ஒன்றே போதுமானதாகவும், அதற்கு மேலும் கஸ்தூரிச் சாந்தைப் பூசியது ஏனோ? மார்புக்கு மாண்பளிக்க வண்ண வண்ணக் குழம்பு கொண்டு தீட்டப்பெற்ற தொய்யிற்கோலம் ஒன்றே போதுமானதாக, முத்து வடங்களைப் பூட்டியது ஏனோ?" என்றெல்லாம் வினாவுமுகத்தான், அக் கோவலன் பாராட்டிப் பெருமை செய்ய, மங்கல அணியோடு மற்றும் பல அணிகளை அணிந்தும், மாலை மாலையாக மலர்களைச் சூடியும், அகிற் புகையோடு மான்மதச் சாந்தைப் பூசியும், தொய்யிற் கோலத்துக்கு மேலும் முத்தாரங்களை அணிந்தும் தன்னை ஒப்பனை செய்து கொள்வதில் ஆர்வம்

காட்டிய கண்ணகி, கோவலன் தன்னைக் கைவிட்டு, மாதவி மனை புகுந்துவிட்ட அந்நிலையே ஒப்பனை செய்து கொள்ளும் உணர்வையே இழந்துவிட்டாள். காலில் கிடந்து கலீர் கலீர் என ஒலித்த சிலம்பைக் கழற்றி எறிந்தாள். இடையில் மெல்லாடைக்கு மேல் அணிந்திருந்த மணிமேகலையை மறந்தாள். தொய்யிற் கோலத்தை அவள் மார்பு மறந்தது. மங்கல அணி ஒன்றைத் தவிர்த்துப் பிற அணிகள் அனைத்தையும் அகற்றிவிட்டாள். காதில் குழை இல்லை. முகத்தில் பொலிவு இல்லை. கண்களில் அஞ்சனம் இல்லை. நெற்றியில் திலகம் இல்லை. வாயில் புன்னகை இல்லை. கூந்தலுக்கு நெய் இட மறந்தாள்.

*"அம் செஞ் சீறடி அணிசிலம்பு ஒழிய;*
*மென்துகில் அல்குல் மேகலை நீங்கக்;*
*கொங்கை முன்றில் குங்குமம் எழுதாள்;*
*மங்கல அணியிற் பிறிது அணி மகிழாள்;*
*கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினள்;*
*திங்கள் வாண் முகம் சிறுவியர் பிரியச்*
*செய்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்பப்;*
*பவள வாள்நுதல் திலகம் இழப்பத்*
*தவள வாள்நகை கோவலன் இழப்ப*
*மையிரும் கூந்தல் நெய்யணி மறப்பக்*
*கையறு நெஞ்சத்துக் கண்ணகி."*

– சிலம்பு. 4 : 47–57.

தன் அழகும் பொலிவும் கணவன் கண்டு களிக்கவே அல்லது தனக்குப் பெருமைதர அன்று; அவை கண்டு களிக்க வேண்டத் தக்கன்று எனக்

கொண்டு வெறுத்து ஒழித்த கண்ணகியின் கணவன் அன்புதான் என்னே!

## கணவன் பிழைகண்டு ஒறுத்தல்

கணவன் மனைவியர் உறவுமுறை பற்றிய இலக்கியங்களாக, எண்ணிலா அகப் பாடல்கள் பாடிய புலவர் பெருமக்களோ, அவ்விலக்கியங்களுக்கு இலக்கணம் வகுத்தருளிய ஆசிரியர் தொல்காப்பியரோ, கணவன் மனைவியர் இருவருள், கணவன் எவ்வளவு தவறுகள் வேண்டுமாயினும் செய்யலாம்; மனைவிதான் சிறு பிழைதானும் செய்யக்கூடாது. அதுமட்டுமன்று; கணவன் எவ்வளவுதான் தவறு செய்யினும், அதுபற்றி அவனைக் கண்டிக்கும் உரிமை மனைவிக்குச் சிறிதும் இல்லை எனக் கூறினாரல்லர். மாறாக, இருவருமே தவறு செய்யாதவராதல் வேண்டும்; குற்றத்தின் நீங்கிய குணக்குன்றுகளாதல் வேண்டும் என்றே விதி வகுத்தார்கள். அதுமட்டுமன்று; கணவன் தவறு செய்தால், அவனைக் கண்டித்துத் திருத்தும் உரிமை மனைவிக்கு முழுக்க முழுக்க உண்டு. ஆனால், அக் கண்டிப்பு, தாய், தன் மக்களைக் கண்டிக்கும் கண்டிப்பு போல் அன்பை அடிப்படையாகக் கொண்டதாதல் வேண்டும்; தாய் அடித்தால், அடித்த மறுகணமே அடித்த கையாலேயே அணைத்துக் கோடல் போல், பிழைகண்டு ஒறுக்கவும் வேண்டும்; அடுத்த நாழிகையே பேரன்பு சொரியவும் வேண்டும் என்றே விதி வகுத்தார்கள்.

"தாய்போல் கழறித் தழீஇக் கோடல்
ஆய்மனைக் கிழத்திக்கும் உரித்து என மொழிப."

என்பது தொல்காப்பியர் வகுத்த விதிமுறை.

கூறிய இக்குணத்திலும், கண்ணகி குறையுடையவள் அல்லள். கணவன் செய்த பிழையைச் சுட்டிக் காட்டிய முறையும், சுட்டிக்காட்டத் தேர்ந்து கொண்ட காலமும் களனும் எண்ணி எண்ணி மகிழ்தற்கு உரியவாம்.

இடையர் சேரியில் மாதரி மனையில், தன் கையால் ஆக்கிய அறுசுவை உணவு உண்டு அமர்ந்திருந்த கோவலன் அருகில் இருந்து வெற்றிலை பாக்குச் சுருள்களை மடித்துக் கொடுத்துக் கொண்டிருந்தாள் கண்ணகி. அந்நிலையில் தன்னுடைய தகா வொழுக்கத்தால் தன் குடிக்கு வந்துற்ற இழுக்கையும் கேட்டையும் நினைந்து உளம் கலங்கிய நிலையில், 'நான் இத்தனை கொடியோன் ஆகவும், அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல், புறப்படு எனச் சொல்லிய உடனே புறப்பட்டுவிட்டனையே? கண்ணகி, உன்னுடைய இந்தச் செயலை அறியாமை எனக் கொள்வனோ? அல்லது உன் பெருமைக்குச் சான்று எனக் கொள்வனோ?" எனக் கூறி வருந்தினான்.

அதுகேட்ட கண்ணகி, கோவலன் உள்ளம் மாசுமறு அற்று உளது; நல்ல அறவுரைகளை ஏற்கும் பக்குவம் பெற்றிருக்கிறது; ஆகவே, அவனுக்கு ஏதேனும் அறவுரை கூறவேண்டுமாயின், அதற்கு இதுதான் ஏற்ற

பருவம்; இப்போது எவ்வளவு கசப்பான அறவுரைகளையும், அவன் காதுகள் ஏற்றுக்கொள்ளும் என உணர்ந்தாள். அதனால், அவன் செய்த பிழையைச் சுட்டிக்காட்டி இடித்துரைக்கத் தொடங்கினாள்; மனைவி, கணவனுக்கு ஒரு நல்ல நண்பன் ஆவாள்; நண்பனின் தலையாய கடமை, தன் நண்பன் தவறு செய்த வழி, நகைத்து அதற்கு உடன்பாடு அளிப்பது அன்று; மாறாக, கடுஞ்சொல் வழங்கியேனும், தவறுகளைச் சுட்டிக் காட்டித் திருத்துவதாகும். அதைச் செய்ய முனைந்தாள் கண்ணகி.

அவ்வாறு முனைந்த அந்நிலையிலும், அவன் பிரிவால் தான் பெரிதும் துயர் உற நேர்ந்திருந்தாலும், அதைச் சுட்டிக் காட்டுவதால் கேடு ஒன்றும் இல்லை என்றாலும், அதுவே தன் நோக்கமாம் என்றாலும், அவன் தன் பிழை உணர்ந்து உள்ளம் துடிக்கும் இந் நிலையில், அவனால் தனக்கு வந்துற்ற இடர்ப் பாடுகளை எடுத்துக் கூறிக் கண்டிப்பது கூடாது என உணர்ந்தாள்; அதனால், தனக்கு உண்டான இழப்புகளைக் கூறாமல், இருவரும் கூடி நடாத்த வேண்டிய இல்லறக் கடமைகளுக்கு நேர்ந்த கேடுகளை, அதனால் அவனைப் பெற்ற தாய் தந்தையர்களுக்கு உண்டான துயர்நிலைகளைச் சுட்டிக்காட்டி, அவற்றின் வழியே தனக்கு உண்டான துன்ப நிலைகளைக் கூறாமல் கூறிச் சுட்டிக்காட்டி இடித்துரைக்க எண்ணி னாள்.

அதனால், "ஆருயிர்க்காதல! அறவோர்க்கு அளித்தலும், அந்தணர் ஓம்பலும், துறவோரைப் பேணலும், விருந்தினர்களை வரவேற்று உணவு அளித்தலும் ஆகிய இவைகள் இல்லறத்தார்க்கு ஓதிய தலையாய கடமைகளாகும்; இல்லறம், கணவன் மனைவியர் ஆகிய இருவரும் ஒன்று கலந்து இருந்து ஆற்றவேண்டிய அறநிலையாகும்; அதனால், நீ இல்லாமல் என்னால் இல்லறக் கடமைகளை ஆற்ற இயலாது போயிற்று; இல்லற நெறி புகுந்தும், இல்லறக் கடமைகளை ஆற்ற முடியாமை கண்டு என் உள்ளம் நனிமிக நொந்தது; நொந்த உள்ளத்து உணர்ச்சிகளை எவ்வளவுதான் அடக்கினாலும், அவை தளைகளை மீறி முகத்தின் வழி வெளிப்படவே செய்தன; அதனால், என் முகத்தில் கவலைக்கோடுகள் நிலையாக இடம்பெற்று விட்டன; அம்முகத் தோற்றத்தோடு கூடிய என்னை, உன் தாயும் தந்தையும் காண நேரின், உன் பிரிவால் வருந்தும் அவர்கள் மேலும் வருந்துவரே என்பதால், அவர் கண்களில் படாமல் ஒளிந்தே வாழ்ந்து வந்தேன்; ஆனால், எதிர்பாரா வகையில், ஒரோவழி என்னைக் காண நேரும் போதெல்லாம், உன் கொடுமைகளை யெல்லாம் பொருட் படுத்தாமல் வாழும் என் பொறுமையை அளவிற்கு மீறி அவர்கள் புகழத் தலைப்படுவார்கள்; அந்நிலையில், என் அகத்தே அடக்கி வைத்திருக்கும் நோயும் துன்பமும், புறத்தே வெளிப்பட்டு என் துயர் நிலையை அவர்களுக்குக் காட்டிக் கொடுத்துவிடுமோ என்ற அச்சத்தால்,

பொய்ந்நகை காட்டி அவற்றை மறைக்க முயலுவேன்; ஆனால், அந்நகை உள்ள மகிழ்ச்சியின் விளைவாக வந்ததாகாது, பொய்யே பிறந்தது. ஆகவே, அதன் உண்மை இயல்பை அவர்கள் உணர்ந்து கொள்வர். அதனால், அவர்கள் வருத்தம் மேலும் மிகும். 'இவ்வாறு இப்பெண் வருந்த நேரிட்டதே; பொய்ந்நகை காட்டித் தன் அகத்துயரை மறைத்து எம்மை அகமகிழ்விக்க இவள் படும் பாடு எத்துணைக் கொடுமை வாய்ந்தது' என்றெல்லாம் எண்ணி எண்ணி வருந்தினார்கள்; இவ்வாறு உன்னைப் பெற்றுப் பேணி வளர்த்த உன் தாயும் தந்தையும் வருந்தித் துயர் உறப் போற்றா ஒழுக்கம் மேற்கொண்டு வாழ்ந்தீர்களே!" எனக் கூறிக் கண்டித்தாள்.

*"அறவோர்க்கு அளித்தலும், அந்தணர் ஓம்பலும்,*
*துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்*
*விருந்து எதிர் கோடலும் இழந்த என்னை, நும்*
*பெருமகள் தன்னொடும் பெரும்பெயர்த் தலைத்தாள்*
*மன்பெரும் சிறப்பின் மாநிதிக் கிழவன்*
*முந்தை நில்லா முனிவு இகந்தனனா*
*அற்புளம் சிறந்தாங்கு அருள்மொழி அளைஇ*
*எற்பாராட்ட யான் அகத்து ஒளித்த*
*நோயும் துன்பமும் நொடிவது போலும் என்*
*வாயல் முறுவற்கு அவர் உள்ளகம் வருந்தப்*
*போற்றா ஒழுக்கம் புரிந்தீர்."*

— சிலம்பு. 16 : 71-81

"தகாத ஒழுக்கம் மேற்கொண்டு வாழ்க்கை தடுமாறி விட்டாய்" "போற்றா ஒழுக்கம் புரிந்தீர்" – இதைக் காட்டிலும் கடுமையான சொற்களால், ஒரு

மனைவி தன் கணவனைக் கண்டிக்க முடியாது; அதைச் செய்து முடித்துவிட்டாள் கண்ணகி; ஆனால், அக்குற்றச்சாட்டில் அன்பைக் குழைத்து, தன்னலத்தை மறைத்து, அதே நிலையில் கடுமையை மிகுத்து எத்துணைத் திறமையாகச் செய்து முடித்துள்ளாள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, "தாய் போல் கழறித் தழுவிக்கோடல் வேண்டும்" என்ற தொல் காப்பியர் விதித்த விதிமுறைகளை எவ்வாறு அடியொற்றிச் சென்றிருக்கிறாள் என்பதை எண்ணி எண்ணி மகிழுமாறு செய்யும்.

*"தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை*
*தேரும் சிலப்பதி காரமிதை*

*ஊனிலே எம்முயிர் உள்ளளவும் நிதம்*
*ஓதி யுணர்ந்தின் புறுவோமே!"* - மலரும் மாலையும்



# மாதரார் தொழுதேத்தும் மாண்புடையாள்

புலவர் கா.கோவிந்தன் எம்.ஏ.,